# தமிழரசு

16-2-1987

ரு. 1





மகாகவிசுப்பிரமணியபாரதி
சிலை திறப்பு விழா
UNVEILING THE STATUE OF
MAHAKAVI SUBRAMANIA BHAR
NEW
4.2.1987


SUBRAMANIA BHARATHI

"எங்கள் பாரதியார் மகாகவி-மக்கள் கவி-வீரக்கவி-விடுதலைக் கவி, தேசியக்கவி'' என்று பெருமிதத்தோடு நெஞ்சுயர்த்திப் பாரதியின் புகழ்பாடி உரை நிகழ்த்தினார் பாரதியாரின் நூற்றாண்டினைப் பார் புகழும் வகையில் நாடெங்கும் கொண்டாடி, பாரதியார் பல்கலைக் கழகத்தை நிறுவி, பாரதியின் புகழை என்றென்றும் நிலைக்கச் செய்து நீடு புகழெய்திய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள்.



# புதுமைக்கவி பாரதியாருக்கு புதுடில்லியில் சிலை

''ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்'' என்று தீர்க்க தரிசனமாக வெற்றி முரசு கொட்டிய பாரதியாருக்கு இந்தியாவின் தலைநகரான புதுடில்லியில் சிலை எடுத்த சிறப்புமிகு விழா 1987 பிப்ரவரித் திங்கள் 4 ஆம் நாள் நடைபெற்றது. புதுடில்லியில் ஒரு பாரதி நகர்! அங்கே பாரதிக்குச் சிலை!

விழாவுக்குத் தலைமை ஏற்றவர் மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள்.

சிலையைத் திறந்து வைத்தவர் எழுபது கோடி இந்திய மக்களின் இதயங்களை ஆண்டுகொண்டிருக்கிற மாண்புமிகு பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள்.

மகாகவி பாரதியின் வரலாற்றில், தமிழகத்தின் வரலாற்றில், இந்தியாவின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் பட்டுவிட்ட இந்தப் பெருமைக்குரிய விழாவின் வரவேற்பு உரையினை மாண்புமிகு தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் மகிழ்ச்சியுடன் ஆற்றிய போது பாரதியாரின் எண்ணங்களை, இலட்சியங்களைத் தமிழக அரசு ஈடேற்றி வருகிற பாங்கினை விளக்கிக் கூறியதாவது :

"சாகா வரம்பெற்ற பாக்களால் விடுதலைக் கனலை மூட்டியவர் அமரகவி பாரதி. பெண்கள் இந்திய நாட்டின் கண்கள். அவர்களை முன்னேற்ற வேண்டுமென்றார் பாரதி. எம். ஜி. ஆர் அரசு, பெண்களுக்குத் தனிப் பல்கலைக்கழகம் கண்டது. ஆலைகள் வேண்டுமென்றார்; அவர் பெயராலேயே அவர் பிறந்த எட்டயபுரத்தில் 5.5 கோடி ரூபாய் செலவில் நூற்பாலையைக் கட்டினோம். தேம்துரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்றார்; தனித்தமிழ்ப் பல்கலைக் கழகத்தையே உருவாக்கினோம்!

**அட்டை சொல்லும் செய்தி**

காகிதம் செய்ய வேண்டுமென்றார். உலகத்தில் முதன் முதலில் குறிப்பாகக் கரும்புச் சக்கையியிலிருந்து உன்னதமான காகிதம் உருவாக்க ஆலை அமைத்தோம். தனி ஒரு மனிதனுக்கு உணவு இல்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்றார். ஒரு கோடி குழந்தைகளுக்கு ஒரு வேளை சத்தான உணவு அளிக்கிறோம்."

வரவேற்புரைக்குப் பின்னர் உரையாற்றிய மாண்புமிகு முதல்வர் அவர்களும் தமது உரையில்,

''இந்த பிப்ரவரி 4-ந்தேதி என் வாழ்நாளில் மறக்க முடியாத நாள்.

''அன்னை இந்திராவின் உதவியாலும், நமது பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் உதவியாலும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இதே தேதியில் நான் சிகிச்சை பெற்றுத் தாயகம் திரும்பினேன்.

''அவர்கள் இருவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

''பாரதியாரின் சிலையைத் திறந்து வைக்கும் இந்த நாள், இந்திய மக்களுக்கு மட்டுமல்லாமல் உலக மக்கள் அனைவருக்கும் ஒரு பொன்னான நாள்.

''ஒற்றுமையைக் காக்கவும், தீய சக்திகளை ஒழிக்கவும் பிரதமர் ராஜீவ் காந்தி எடுக்கும் முயற்சிகளுக்குத் தமிழகம் துணை நிற்கும்'' என்று உறுதி கூறி முடித்தார்.

மாண்புமிகு பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்கள், பாரதியாரின் கம்பீரமான சிலையைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

அவர் தமது உரையில்:

''மகாகவி பாரதியின் திருவுருவச் சிலையைச் சுதந்திர இந்தியாவின் சுதந்திரத் தலைநகரான புதுடில்லியின் மையப் பகுதியில்

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2018
அட்சய - மாசி 4
மலர் : 17 16-2-1987 இதழ் : 16

திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நாட்டின் சுதந்திரத்திற்காகத் தன்னையே அர்ப்பணித்த மகாகவி அவர்.

''ஆங்கிலப் பேரரசின் ஆதிபத்தியம் உச்சகட்டத்தில் இருந்த வேளையில், அஞ்சாது, அயராது, வீரக்கனலுடன் அதனை எதிர்த்துப் போராடிய மாவீரர் பாரதியார்.

''மகாத்மா காந்தியின் அகிம்சை வழியில் நம்பிக்கை வைத்தவர் பாரதி.

''நாட்டின் ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும் கட்டிக்காக்கப் பல பாடல்களைப் பாடியுள்ளார். அவர் எழுப்பிய சுதந்திரக் கனலும் நாட்டுப் பற்றும் இந்தியாவில் உள்ள அனைவரது இதயத்திலும் என்றும் நிலவ வேண்டும்''



'மகாத்மாவின் அகிம்சை நெறியை, பாரதி போற்றினார்' என்று குறிப்பிட்ட பிரதமர், பாரதியார் மகாத்மாவைப் பற்றிப் பாடிய ''வாழ்க நீ எம்மான்'' என்ற பாடலின் ஆங்கில மொழியாக்க வரிகளை மேற்கோள் காட்டினார்.

'இந்த வீரமிக்க மகாகவியை, அவரது இளமைக்காலத்திலேயே மதயானை ஒன்று மாய்த்துவிட்டதே' என்று வேதனையுடன் சுட்டிக்காட்டினார் பிரதமர்.

தலைமை உரையாற்றிய மேதகு குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர்.வெங்கட்ராமன்அவர்கள் தமது உரையில், ''பாரதி தமிழ்க் கவி மட்டுமல்ல, தேசியக்கவி மட்டுமல்ல, அவர் உலக மகாகவி. அவரது கவிதைகளை அவர் வாழ்ந்த காலத்திலேயே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அகிலத்திற்கு எடுத்துக் காட்டியிருந்தால் அவருக்கு உலகம் நோபல் பரிசையே தந்திருக்கும்'' என்றார்.

பாரதியின் உலகளாவிய புரட்சிச் சிந்தனையைச் சுட்டிக் காட்டிய அவர், 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் செகத்தினை அழித்திடுவோம்' என்ற பாடலின் ஆங்கில மொழிபெயர்ப்பினை மேற்கோள் காட்டினார்.

தேசிய ஒருமைப்பாட்டினை வலியுறுத்திப் பாடிய பாரதியார், 'கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம் காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்' என்ற வரிகளை ஆங்கிலத்தில் கூறினார். கோதுமைக்கு ஈடாக வெற்றிலையைப் பாரதியார் சுட்டிக்காட்டியதன் பொருளை, வெற்றிலையின் இனிமையையும், அருமையையும், பெருமையையும் உணர்ந்தவர்களே புரிந்துகொள்ளமுடியும் என்று துணைத் தலைவர் சுட்டிக் காட்டியதை அனைவரும் புரிந்து ரசித்தனர்.

விழாவின் முடிவில் பிரதமருக்கும், குடியரசுத் துணைத் தலைவருக்கும் தமிழக முதல்வர் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசுகளையும் வழங்கினார்.

கம்பீரமாகக் காட்சியளிக்கும் பாரதியாரின் முழு உருவ வெண்கலச் சிலையை உருவாக்கிய சென்னைச் சிற்பி திரு மோகன்தாஸ், சிலையை நிறுவவும், சிலை இருக்கும் இடத்தினைச் சீராக்கி, அழகுபடுத்தி எழில் கோட்டமாக்கவும் உதவிய மத்திய அரசின் பொதுப்பணித்துறைப் பொறியியல் அதிகாரிதிரு கார்கோவுங்கர் (Gargaonkar) ஆகிய இருவருக்கும் தமிழக முதல்வர் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

விழாவின் ஆரம்பத்தில் மகாராசபுரம் சந்தானம் பாரதியாரின்

43 —ஆம் பக்கம் பார்க்க

## டில்லி தமிழ்ச் சங்கத்திற்கு முதல்வர் அளித்த நிதியுதவி

டில்லியில் உள்ள தமிழ்ச் சங்கத்தின் கலையரங்கக் கட்டட நிதிக்காகத் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ. 5 இலட்சத்திற்கான காசோலையைத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு இராமாமிர்தம் அவர்களிடம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் வழங்கினார்.

பேரன்புக்குரிய பிரதமர் அவர்களே, பெருமதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களே மாண்புமிகு அமைச்சர்களே, சட்டமன்ற-நாடாளுமன்ற உறுப்பினர்களே, நண்பர்களே,

மகாகவி பாரதியாரின் திருவுருவச் சிலையை மாண்புமிகு பிரதமர் அவர்கள் திறந்து வைக்கும் இந்த மகத்தான நிகழ்ச்சியில் கலந்து கொளவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நூற்றாண்டின் இருபதுகளில் இந்தியாவின ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் உணாந்து உத்வேகத்துடன் பாடிய சுப்பிரமணிய பாரதியின் திருவுருவச் சிலையைப் புதுடில்லியில் திறந்து வைப்பது மிகப் பொருத்தமானதாகும்.

நாட்டின் ஒற்றுமையை வலியுறுத்திப் பாடிய பாரதி,

**முப்பதுகோடி முகமுடையாள் உயிர்**
**மொய்ம்புற ஒன்றுடையாள்-இவள்**
**செப்புமொழி பதினெட்டுடையாள்-எனில்**
**சிந்தனை ஒன்றுடையாள்.**

— என்று கூறுகிறார். விடுதலைக்குப் பின் மலரவேண்டிய சமதர்ம சமுதாய அமைப்பை வரையறுத்துக் காட்டும் வகையில்,

**இனிஒரு விதி செய்வோம்-அதை**
**எந்த நாளும் காப்போம்**
**தனி ஒருவனுக்கு உணவிலையெனில்**
**ஜகத்தினை அழித்திடுவோம்.** —என்று கூறுகிறார்

பாரதி தேசபக்தி கனன்றெழச் செய்து பாமர மக்கள் அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்க, அவர்களுக்கு வீரமூட்டினார். பாரதியை மிக நெருக்கமாக அறிந்துள்ள என்னுடைய நண்பர்கள், அவர் தம்முடைய பாடல்களை மிகுந்த உணர்ச்சியுடனும், சில நேரங்களில் உரத்த குரலில் ஆவேசத்துடனும் பாடுவார் என்று கூறியிருக்கிறார்கள்.

பாரதியின் ''விடுதலை! விடுதலை! விடுதலை!'' என்ற பாடலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ள ராஜாஜி அவர்கள் அதில் காணும் உயிர்த்துடிப்பை எந்த ஆங்கில மொழி பெயர்ப்பிலும் கொண்டுவர இயலாது என்று கூறியிருக்கிறார். சுதந்திரப் போராட்டத்தின்போது இந்தப் பாடல் தமிழ் நாடு முழுவதும் பாடப்பட்டது. பாமர மக்களின் ஜனநாயக உணர்வுகளை அது மகத்தான வழியில் தட்டி எழுப்பியது. இந்திய தேசியம், இந்திய மறுமலர்ச்சி ஆகியவற்றின் உண்மைக் கவியாக,பாரதி மிளிர்ந்தார்.

சமயங்களிடையே சகிப்புத் தன்மைக்கும் சமூகங்களிடையே ஒற்றுமைக்கும் பாரதி தமது பாடல்களின் மூலம் எழுச்சியூட்டினார்.

**எல்லாரும் ஓரினம்**
**எல்லாரும் இந்திய மக்கள்**
**எல்லாரும் ஓர் நிறை**
**எல்லாரும் இந்நாட்டு மன்னர்**

என்று குரல் கொடுத்தார்.

பாரதி பெண்களின் விடுதலைக்குப் போராடினார். இந்திய சமுதாயம் பழமையிலும், மௌடீகத்திலும் மூழ்கியிருந்த ஒரு கால கட்டத்தில் தீண்டாமையை ஒழிக்கவும், உழைப்பை மேன்மைப்படுத்தவும் தொண்டாற்றியவர் பாரதி. உழைப்பின் மேன்மையைப் பற்றிக் கூறும் பொழுது,

**இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே**
**இயந்திரங்கள் வகுத்திடுவீரே**



# மறுமலர்ச்சிக்கு வித்திட்ட மகாகவி



**மேதகு குடியரசுத் துணைத் தலைவர்**

**திரு ஆர். வெங்கட்ராமன்**




கருமபைச சாறு பிழிந்திடுவீரே
கடலில் மூழ்கி நல்முத்தெடுப்பீரே
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே

என்றெல்லாம் பாராட்டிப் பாடியிருக்கிறார்.

இந்தியாவின் மாநிலங்களெல்லாம் தமக்குள் உதவிக் கொண்டு, ஆக்க வழிகளில் முன்னேறப் பாடுபடும் என்று இந்தியாவின் எதிர்காலத்தைப் பற்றிக் கனவு கண்டவர் பாரதி. இந்தப் பாட்டைத்தான் இப்பொழுது நமது சந்தானம் அவர்கள் பாடக்கேட்டீர்கள்.

கங்கைநதிப் புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்
சிங்க மராட்டியர்தங் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்
காசிநகர்ப் புலவர் பேசும் உரைதான்
காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவிசெய்வோம்
ராசபுத் தானத்து வீரர் தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்கமளிப்போம்

வெற்றிலையின் மதிப்புத் தெரியாதவர்களுக்கு இதைப் புரிந்து கொள்வது கடினமாக இருக்கும். மிகச் சுவையானது வெற்றிலை. காவேரிக் கரையில் விளையும் அந்த வெற்றிலைக்குக் கங்கைக் கரையில் விளையும் கோதுமையைப் பண்டமாற்று செய்து கொள்ளலாம் என்பது பாரதியின் வாக்கு. அவ்வாறே கேரளத்தின் தந்தங்களை, மராட்டிய மாநிலத்தின் அரிமா இதயங் கொண்ட புலவர்களுக்குப் பரிசளிக்கலாம் என்கிறார். அது மட்டுமல்ல, காசி நகரத்திலுள்ள புலவர்கள் பாடும் பாடல்களைக் காஞ்சியில் உள்ளோர் கேட்பதற்குக் கருவி செய்வோம் என்கிறார். வானொலி வராத அந்தக் காலத்தில் இப்படிப்பட்ட ஒரு கனவைப் பாரதி கண்டிருக்கிறார். ராஜஸ்தானைச் சேர்ந்த வீரர்களுக்குக் கர்நாடக மாநிலத்தின் தங்கத்தைப் பரிசாகக் கொடுப்போம் என்று கூறியிருக்கிறார்.

பாரதியின் இலக்கியப் பார்வை தேசிய் அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சனைகளோடு மட்டும் நின்று விடவில்லை. விரிந்து பரந்து இதிகாசப் புராணங்களையும், ஆன்மீகத்தையும் தழுவி நின்றது. அந்தக் காலத்திலேயே அவரது பாடல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருக்குமானால் பாரதிக்கு ''நோபுல்'' பரிசு கிடைத்திருக்கும்.

பாரதி இக்கால இந்தியாவுக்கும், வருங்கால இந்தியாவுக்கும் சொந்தமானவர். இதற்குப் போதுமான சான்றுகள் என்னிடம் இருக்கின்றன. அவர் 39 ஆண்டுகளே வாழ்ந்தாரெனினும் அந்தக் குறுகிய காலத்திலேயே எல்லாத் துறைகளிலும் தமது முத்திரையைப் பதித்துள்ளார். அவருடைய வாழ்வும் சாதனையும் வருங்காலச் சமுதாயத்தைச் தேசபக்தியிலும் நாட்டின் ஒருமைப்பாட்டிலும், சமதர்மச் சமுதாய அமைப்பிலும் ஈடுபாடு கொள்ளச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

இந்தியாவின் தலைநகரத்தில்பாரதிக்குச் சிலை எழுப்பியதற்காகத் தமிழக அரசையும், முக்கியமாகத் தமிழ் இலக்கியங்களின் புரவலராகவும், நாட்டின் ஒற்றுமையிலும், ஒருமைப்பாட்டிலும், உறுதி கொண்டவராகவும் திகழும் முதலமைச்சர் அவர்களையும் நான் மிகவும் பாராட்டுகிறேன்.

இந்தச் சிலையைத் திறப்பதற்கு நமது பேரன்புக்குரிய பிரதமர் அவர்கள் வந்திருக்கிறார்கள். இன்றைய தினம் சமாதானத்திற்கும் சமூக ஒற்றுமைக்கும், சகோதரத்துவத்துக்கும் சின்னமாகத் திகழும் நமது பிரதமர் அவர்களைவிட, இந்த அரும்பெரும் இலட்சியங்கள், ஒவ்வொரு இந்தியனின் உள்ளத்திலும் ஊற்றெடுக்க அயராது பாடுபட்ட பாரதியின் சிலையைத் திறந்து வைக்க வேறு தகுதியானவர் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. உங்கள் அனைவருக்கும் எனது நன்றி, வணக்கம்.

(மேதகு குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் புதுடில்லியில் 4.2.'87 அன்று மகாகவி பாரதியாரின் திருவுருவச் சிலை திறப்பு விழாவில் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.)

# தேசியப் புயல்



## மாண்புமிகு இந்தியப் பிரதமர்

## திரு ராஜீவ்காந்தி

மேதகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்களே!

திரு எம்.ஜி.ஆர் அவர்களே!

தாய்மார்களே! பெருமக்களே!

இந்தியாவின் விடுதலைக்காகத் தனது சீர்மிகு வாழ்வை, சிறிது காலமே வாழ்ந்தாலும் சிறப்புற அமைந்த தனது பெருவாழ்வை, ஆட்படுத்தியவர் மகாகவி பாரதி. அப்பெருமகனின் சிலையை சுதந்திர இந்தியாவின் இதயம் போன்று அமைந்துள்ள இச்சுதந்திரத் தலைநகரான டில்லியில் திறந்து வைப்பதில் பேருவகை கொள்கிறேன்.

பாரதியார் ஒரு மாபெரும் கவிஞர் மட்டுமல்லர்; மாபெரும் தத்துவஞானி; மாபெரும் தேசபக்தர், மாபெரும் புரட்சியாளர்.

அடிமைப்பட்டிருந்த இந்தியாவில் ஆங்கிலப் பேரரசின் ஆதிக்கம் உச்சகட்டத்தில் இருந்த காலத்தில் பாரதியார் பிறந்தார். ஆனாலும், பேரரசின் அதிகாரப் பேராண்மையையோ, படைபலத்தையோ கண்டு அஞ்சாது, அயராது துணிச்சலுடன் எதிர்த்து நின்று போராடினார். தனது பாட்டுத் திறத்தாலே போராடினார். ஆங்கிலஆதிக்கத்தை எதிர்த்துப்போராடிக் கொண்டிருந்த நிலையிலேயே நமது நாகரிகப் பண்பாட்டின் அருமை பெருமைகளைப் பற்றிய ஆர்வத்தையும் சிந்தனையையும் தூண்டிவிட்டார்.

ஆங்கிலேயரின் ஆட்சிப் பிடியிலிருந்து இந்தியாவை விடுவிக்க வேண்டுமென மனித சமுதாயம் முழுவதையும்-ஆண்டானாயினும், அடிமையாயினும், தன்னாட்டவராயினும், பிறநாட்டவராயினும்-வேண்டினார். மக்களை அடிமைப்படுத்திடும் ஆதிக்க மோகத்திலிருந்து ஆங்கிலேயரை விடுவிக்க வேண்டும் என்றும் அவர் விரும்பினார்.

ஆங்கிலேயே ஆதிபத்தியத்தை அவர் தீரத்துடன் எதிர்த்தார். அச்சம் என்பது மடமை என்றார். அஞ்சாமை அறிவுடைமை என்றார். அடிமைப்பட்டவன் எதிர்க்கும் துணிவினை இழக்கும்போதுதான் அடிமைத் தனமே ஆரம்பமாகிறது என்றார்.

இந்தியாவின் சக்தி என்ன என்பதைச் சுட்டிக்காட்டி இந்தியாவை வீறுபெற்று விழிப்புறச் செய்தார். இந்தியாவின் சக்தி என்பது ஆயுதசக்தி என்பதல்ல. சத்தியநெறியே இந்தியாவின் சக்தி என உணர்த்தினார். ''பாரததேசம் என்று பெயர் சொல்லுவார்'' என்று தொடங்கும் பாடலில்,

**ஓயுதல்செய் யோம்தலை சாயுதல் செய்யோம்**
**உண்மைகள்சொல் வோம்பல வண்மைகள்**
**செய்வோம்**

என்று கூறினார்.

சத்தியமும் அகிம்சையும் ஒன்றெனக் கொண்டார். தென்னாப்பிரிக்காவில் அண்ணல் காந்தி நடத்திய சத்தியாகிரகப் போராட்டத்திற்குப் பிறகு, தான் முன்னர் கொண்டிருந்த தீவிரவாதத்தைக் கைவிட்டு பிரிட்டானியப் பேரரசை எதிர்ப்பதில் மகாத்மாவைப் பின் பற்றலானார்.

தமிழ்நாட்டு மக்களுக்கு அண்ணல் காந்தியைப் பற்றி எடுத்துரைத்தார். தன்னுடைய புகழ்மிக்க பாடலில்,

**வாழ்க நீ எம்மான், இந்த வையத்து நாட்டி**
**லெல்லாம்**
**தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்**
**கெட்டுப்**
**பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந்**
**தன்னை**
**வாழ்விக்க வந்த காந்தி மஹாத்மா! நீ வாழ்க;**
**வாழ்க!**

**பெருங்கொலை வழியாம் போர்வழி இகழ்ந்தாய்;**
**அதனிலுந் திறன்பெரி துடைத்தாம்**
**அருங்கலை வாணர் மெய்த்தொண்டர் தங்கள்**
**அறவழி யென்று நீ அறிந்தாய்;**

சத்தியம், அகிம்சை ஆகியவற்றின்மீது பாரதியார் கொண்டிருந்த பற்று, உலகச் சகோதரத்துவத்தின் மீது அவர் கொண்டி

ருந்த ஆழ்ந்த நம்பிக்கையினின்றும் முகிழ்த்ததாகும். அவர் எழுதியவற்றிலெல்லாம் எவ்வுயிரும் சமம் என்ற சமத்துவ நெறியே நீக்கமற நிறைந்திருந்தது.

மக்கள் அனைவரும் சமமே, நாம் அனைவரும் ஒரே இனமே, உயிரினம் அனைத்துமே ஒன்று என்பதை வலியுறுத்தி,

> **காக்கை குருவி எங்கள் சாதி-நீள்**
> **கடலும் மலையும் எங்கள் கூட்டம்**

என்றார்.

அண்ணல் காந்தியைப் போலவே, பாரதியாரும் அந்நிய ஆட்சியை மட்டுமல்ல, பரம்பரையாக நமது அமைப்பில் நிலைத்துவிட்ட ஏற்றத் தாழ்வுகளையும் எதிர்த்துப் போராடினார். உழைப்பின் பெருமையை நிலைநாட்டவும், பெண்ணினத்தின் உரிமைகளுக்காகவும் பாரதியார் போராடினார். பெண்களை அடிமைப்படுத்தும் கொடுமைகளை எதிர்த்தார்.

''மனிதர்கள் தம்முள் ஒருவரை ஒருவர் சீர்திருத்த வாளையும், குண்டையும், சிறையையும், தூக்குமரத்தையும் கருவியாகக் கொண்டு போதுமான வெற்றி பெறாமலேயே முனைந்து போராடி வருகிறார்கள். ஆண்களைச் சீர்திருத்தப் பெண்களுக்கு எந்த ஆயுதமும் இல்லை. கதைகளும் உவமைகளுந்தான் கருவிகளாக உள்ளன'' என்றார்.

சாதி அமைப்பு, சாதி வெறி ஆகிய வற்றைக் கண்டு வேதனையுற்ற பாரதி சாதி எதிர்ப்புப் போராட்டம் பல ஆண்டுகளுக்கு முன்பே இந்திய மரபுக்கேற்பவே எமந்துள்ளது என்றார். பெருமைக்குரிய தமிழ் மூதாட்டியாரான அவ்வையாரின் கருத்தை மேற்கோள் காட்டி

> **சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே**
> **தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்தமென்போம்**
> **நீதி நெறியினின்று பிறர்க்குதவும்**
> **நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர்**

என்று கூறினார்.

பாரதியார் ஒரு தமிழ்க் கவிஞர் மட்டுமல்லர்; சிறந்த ஆங்கில எழுத்தாளருமாவார். இந்திய மரபுகளுக்கேற்ப, இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் சிறந்தனவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்டார். அதுமட்டுமல்ல, உலகம் முழுவதிலுமிருந்தும்கூட, உயர்ந்தவைகளை ஏற்றுக் கொண்டார்.

பாரதியார் பின்னோக்கிப் போகவில்லை. வருங்காலத்தை நோக்கினார். எதிர்காலத்திற்கு ஏற்றதைப் பற்றிச் சிந்தித்தார். எதிர்காலத்தைச் சித்திரித்தார்.

> **வெட்டுக் கனிகள்செய்து தங்கமுதலாம்**
> **வேறு பலபொருளுங் குடைந்தெடுப்போம்**
> **எட்டுத் திசைகளிலுஞ் சென்றிவை விற்றே**
> **எண்ணும் பொருளனைத்தும் கொண்டுவருவோம்**

**—மகாகவி பாரதியார்**



இந்தியாவின் எதிர்காலத் தொழில் வளம் பற்றியும் பொறியியல் வளர்ச்சி பற்றியும் அவர் கனவு கண்டார்.

அவர் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே வியப்பூட்டும் தீர்க்க தரிசனத்துடன் ஆங்கிலத்தில்,

''சுதந்திர வீரர்களான நாம், நாடுகளின் விடுதலையை ஆதரிக்கிற, வல்லான் வகுத்ததே வழி என்ற முரட்டுப் போக்கினைத் தகர்த்தெறிகிற, உலக நாடுகளிடையே நிலையான ஒற்றுமையையும், சமத்துவத்தையும் உருவாக்குகிற அணியே வெற்றி பெறவேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.'' என்று எழுதினார்.

மகாகவிசுப்பிரமணிய பாரதியாரின்சிலையைத் திறந்து வைப்பதன் மூலம், இந்தியாவின்பழம் பெருமையினை உணர்ந்து, போற்றி ஊக்கம் பெற்று, பெருமைக்குரிய எதிர்காலத்தைஉருவாக்கத் துடித்து, இந்திய மண்ணுக்குரியவற்றையெல்லாம் ஏற்று, போற்றிப் பெருமிதங்கொண்டு, மானுடத்தைப் போற்றி, புதுயுக இந்தியாவை உருவாக்கிய உன்னதச் சிற்பிகளில் ஒருவரை வணங்கிப் போற்றுகிறோம். அந்த மேதைஎதிர்பாராதவகையில், மிகவும் இளம் வயதிலேயே நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டார். அவரது 39ஆம் வயதில் மதயானை ஒன்று அவரை மாய்த்துவிட்டது.

தாம் எழுதிக்கொண்டிருந்த கலையோவியம்முற்றுப்பெறு முன்பே நம்மை விட்டு மறைந்துவிட்டார். அக்கட்டுரையின் இறுதிச் சொற்கள் நெஞ்சைத்தொடுவனவாக உள்ளன.

''தென்னகத்திலே திடீரென ஓர் தேசியப் புயல் எழுந்தது; அந்தத் தேசியப் புயல் இந்தியர் எல்லோருடைய இதயங்களிலும் என்றும் வீசிக்கொண்டே இருக்கவேண்டும்'' என்றார்.

**நன்றி!**

(மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ். காந்தி அவர்கள் புதுடில்லியில் 4-2-'87 அன்று மகாகவி பாரதியாரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்)



# எங்கள் பாரதியார்

## மாண்புமிகு முதல்வர்
## டாக்டர் எம்.ஜி.ஆர்



"மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு பிரதமர் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

என்னை வாழ வைக்கும்
தெய்வங்கள் ஆகிய தாய்மார்களே!

என்னை வழி நடத்திச்
செல்லும் பெரியோர்களே!

என் இரத்தத்தின் இரத்தமான
உடன் பிறப்புக்களே!

நம் தேசிய மகாகவி பாரதியாரின் திருவுருவச் சிலையை நமது பிரதமர் இந்த டெல்லி மாநகரில் இன்று திறந்து வைக்கிறார்கள். அவருக்கு என் நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எங்கள் பாரதியார் ஒரு—**

**மகா கவி**

**மக்கள் கவி**

**வீரக் கவி**

**விடுதலைக் கவி**

**தேசியக் கவி**

நமது நாட்டைப் பிடித்திருந்த

**—அடிமைத்தனம்**

**—வறுமை**

**—அறியாமை**

**—மூட நம்பிக்கை**

இவை எல்லாம் அகல வேண்டும் என்று போராடியவர்.

**"சேதம் இல்லாத இந்துஸ்தானம் — இதைத்
தெய்வம் என்று கும்பிட்டி பாப்பா**

**"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே"**

என்று இந்திய ஒருமைப்பாட்டின் அவசியத்தை எழுபது ஆண்டுகளுக்கு முன்பே வலியுறுத்தி இருக்கிறார்.

விடுதலைக்குப் பின், ஒளி பொருந்திய இளைய பாரதம் உருவாக வேண்டும் என்று பாரதியார் பாடினார்.

பெண் உரிமைக்கும், விடுதலைக்கும் பாரதியார் அன்றே தமது பாடல்களின் மூலம் உரத்த குரல் கொடுத்தார்.

இன்று நமது பிரதமர் அவர்கள் இளைய பாரதத்தின் தலைவராக இருந்து பாரதியாரின் எண்ணங்களை உண்மை ஆக்கிக் கொண்டு வருகிறார்.

பாரதியாரின் சிலை இன்று நாட்டின் வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டத்தில் திறந்து வைக்கப்படுகிறது.

**—இந்திய ஒற்றுமையைக் காப்பாற்றவும்**

**—நாட்டைப் பலப்படுத்தவும்**

**—தீய சக்திகளை ஒழிக்கவும்**

**—அமைதியைக் கட்டிக்காக்கவும்**

நமது பிரதமர் எடுக்கும் எல்லா முயற்சிகளுக்கும் தமிழ்நாடு எப்போதும் துணை நிற்கும் என்று உறுதியளிக்கிறேன்.

பிப்ரவரி நாலாம் தேதி என் வாழ்வில் மறக்க முடியாத நாள்.

அன்னை இந்திராகாந்தியின் அனைத்து உதவியாலும், நமது பிரதமரின் உதவியாலும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இதே தேதியில் தான் நான் சிகிச்சை பெற்றுத் தாயகம் திரும்பி வந்தேன்.

அவர்கள் இருவருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எனது மனமார்ந்த நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாரதியாரின் சிலையைத் திறந்து வைக்கும் இந்த நாள் இந்திய மக்களுக்கு மட்டும் அல்லாமல் உலக மக்கள் எல்லோருக்கும் ஒரு பொன்னான நாள் ஆகும்.

இந்தப் பொன்னான நாளில் பாரதியார் தம் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்திச் சொன்ன கொள்கைகளை நாம் தவறாமல் கடைப்பிடிப்போம் என்று உறுதி எடுத்துக் கொள்வோம்

**பாரதியார் புகழ் ஓங்குக!**

**அன்னை இந்திரா நாமம் வாழ்க!**

**அண்ணா நாமம் வாழ்க!**

**நன்றி! வணக்கம்!**

**புதுடில்லியில் 4-2-1987 புதன் அன்று
தேசிய மகாகவி
சுப்ரமணிய பாரதியாரின்
திரு உருவச்சிலை திறப்பு விழாவில்
ஆற்றிய உரை.**

# பாரதி கண்ட கனவு நனவாக்கப்படுகிறது



மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்
**திரு வி. வி. சுவாமிநாதன்**

**மே**தகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் அவர்களே, உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டை 21-ஆம் நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்லும் இந்தியாவின் ஈடுஇணையற்ற மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களே, தமிழ்நாட்டின் தன்னிகரில்லாத முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களே, மாண்புமிகு மைய மற்றும் மாநில அமைச்சர் பெருமக்களே, மதிப்பிற்குரிய பாராளுமன்ற உறுப்பினர்களே, அரசு அதிகாரிகளே, பெரியோர்களே, தாய்மார்களே, உங்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்கிறேன்.

இன்று பிப்ரவரி 4-ஆம் நாள். அன்னை இந்திராகாந்தி அம்மையாரின் அன்பினாலும் பாரதப் பிரதமர் அவர்களின் பாசத்தினாலும், அமெரிக்காவிலிருந்து தமிழகத்தின் முதலமைச்சராக 3-ஆம் முறையாக ஆள வந்த எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு எம். ஜி. ஆர் அவர்கள், தாயகம் திரும்பிய நாள், பிரதமர் தீர்க்க தரிசனத்துடன் விழாவுக்கு ஒப்புதல் தந்த நாள், எங்கள் வாழ்வில் மறக்க முடியாத நாள். மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவின் இறுதி நிகழ்ச்சியாக இன்று டெல்லிமாநகரில் பாரதியாரின் வெண்கலத் திருவுருவச் சிலையினைக் குடியரசுத் துணைத் தலைவர் தலைமையில் பாரதப் பிரதமர் திறக்க இருக்கும் திருநாள்.

அடிமை மோகத்தில் மூழ்கியிருந்த மக்களைத் தட்டி எழுப்பி, சாகா வரம் பெற்ற பாக்களால் விடுதலைத் கனலை மூட்டியவர் அமரகவி பாரதி. ''பெண்கள் இந்திய நாட்டின் கண்கள்; அவர்களை முன்னேற்ற வேண்டும்'' என்றார் அவர். எம். ஜி. ஆர் அரசு பெண்களுக்குத் தனிப்பல்கலைக் கழகம் எடுத்தது. ஆலைகள் வேண்டுமென்றார்; அவர் பெயராலேயே எட்டயபுரத்தில் 5½ கோடி ரூபாய் செலவில் நூற்பாலையைக் கட்டினோம். தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டுமென்றார்; தனித் தமிழ்ப் பல்கலைக் கழகத்தையே உருவாக்கினோம். காகிதம் செய்ய வேண்டுமென்றார். உலகத்தில் முதன் முதலில் குறிப்பாக கரும்புச் சக்கையிலிருந்து உன்னதமான காகிதம் செய்யும் ஆலை துவக்கினோம். தனி ஒரு மனிதனுக்கு உணவு இல்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்றார். ஒரு கோடி குழந்தைகளுக்கு ஒரு வேளை சத்தான உணவு அளிக்கிறோம். தமிழக அரசு இந்த உலக மகாகவிக்குச்செலுத்திய காணிக்கைகள் சிலவற்றைச் சொன்னேன்.

இன்னும் கங்கையை, காவிரியை இணைக்க வேண்டும் என்றார். சிங்களத்திற்குப் பாலம், சேது சமுத்திரத் திட்டம் வேண்டுமென்று பாரதி கனவு கண்டார். அதை நினைவுபடுத்த வந்திருக்கும் குடியரசுத் துணைத் தலைவர் அவர்களையும், அழகும், அறிவும், ஆற்றலும் நிறைந்த ஆசிய ஜோதி, நூற்றுக்கும் மேற்பட்ட அணிசேரா நாடுகளின் தலைவராயிருந்து உலக சமாதானத்திற்குப் பாடுபடும் நமது பாரதப் பிரதமர் அவர்களையும் மீண்டும் ஒரு முறை வருக வருக என, தமிழக முதல்வர் அவர்களின் சார்பின் வரவேற்கிறேன்.

[டில்லியில் 4-2-87 அன்று நடைபெற்ற பாரதியார் திருவுருவச் சிலைத் திறப்பு விழாவில் ஆற்றிய உரை]

# மக்களை வாழ வைக்கும் மகத்தான திட்டங்கள்

புதுடில்லியில் நடைபெற்ற மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் சிலை திறப்பு விழாவில் கலந்து கொள்ள டில்லி சென்றிருந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 6.2.87 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இச்சந்திப்பின்போது மாண்புமிகு உணவு அமைச்சர் திரு எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் உடன் இருந்தார். பல்வேறு பிரச்சினைகள் பற்றி முதல்வர் பிரதமருடன் விவாதித்தார்,விவரம் வருமாறு:

இலங்கையில் யாழ்ப்பாணத்தின் மீது இலங்கை அரசாங்கம் பொருளாதாரத் தடை விதித்து இருப்பதும், இலங்கைத் தமிழர்கள் மீது சிங்கள இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதும், தமிழக அரசுக்கு கவலை அளித்துள்ளது. எனவே, இலங்கைத் தமிழர் பிரச்சினையில், பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, விரைவில் சுமுகமான தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1987-88 ஆம் ஆண்டில் தமிழகத்தில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற ரூ.1,250 கோடி தேவை என்று திட்டமிடப்பட்டுள்ளது. அதில் ரூ.86 கோடி நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

பருவமழை தவறியதால் ஏற்பட்டுள்ள நிலைமையின் காரணமாக விசேஷத் தன்மையுடன் தமிழக அரசின் நிதிப்பற்றாக்குறையைச் சமாளிக்கப் பிரதமர் அவர்கள் முன்வர வேண்டும் என்று முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இந்தக் கோரிக்கையை மிகவும் கவனத்துடன் பரிசீலிப்பதாகப் பிரதமர் அவர்கள் உறுதியளித்துள்ளார்.

ரூ.2 ஆயிரம் கோடி செலவில் பல்வேறு புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. ஏழைகளுக்கு 30 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை,தமிழக அரசு கடந்த ஆண்டு அறிவித்தது.

அதற்காக ஆண்டுதோறும் ரூ.320 கோடி ஒதுக்கி, இந்தத் திட்டத்தை அமல்படுத்தினால், இந்தியாவிற்கே வழிகாட்டியாக இத்திட்டம் அமையும் என்றும் முதல்வர் அவர்கள் பிரதமரிடம் விளக்கினார்.

ரூ.450 கோடி செலவில் 5 வயதுக்குட்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் சத்துணவு அளிக்கும் திட்டம் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

சென்னை நகரை ரூ.800 கோடி செலவில் அழகுபடுத்துவது பற்றியும், சென்னையில் ஓடும் பக்கிங்காம் கால்வாய், கூவம் மற்றும் அடையாறு ஆறுகளைச் சுத்தப்படுத்திட ரூ.160 கோடியில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது பற்றியும் விவாதிக்கப்பட்டது.

அந்தத் தொகைக்கு உலக வங்கிகள் போன்ற வெளிநிறுவனங்களிடம் இருந்தும் நிதி உதவி பெற்று நிறைவேற்றலாமா என்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

காவிரி நீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடுவர் குழுவை (டிரிபியூனல்) விரைவில் அமைக்க பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் பருவமழை தவறும்போது, காவிரி ஆற்றில் நீர் விட வேண்டும் என்று கர்நாடக மாநிலத்திடம் முறையிட வேண்டி உள்ளது.

இதற்கு விரைவில் பரிகாரம் காணும் வகையில் 'நடுவர் குழு' விரைவில் அமைக்கப் பிரதமர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் தமிழக நலனில் அக்கறை கொண்டு, காவிரி நீர்ப் பிரச்சினையை மேலும் தாமதப்படுத்தாமல் விரைவில் தீர்வு காணப் பிரதமர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட எல்லாப் பிரச்சினைகள் பற்றியும் மாண்புமிகு பிரதமர் அவர்களுடன் விவாதித்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்தந்தப் பிரச்சினைகள் பற்றித் தனித்தனியான கோரிக்கை மனுக்களையும் பிரதமரிடம் அளித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேதகு இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் திரு ஆர்.வெங்கட்ராமன் அவர்களையும் சந்தித்துப் பேசினார்.





# குடியரசுத் திருநாள்

ஜனவரி 26-ஆம் நாள்!

இந்திய நாட்டின் 38-ஆவது குடியரசு நாள்.

அன்று காலை சென்னை காமராஜர் சாலையில் உள்ள அண்ணல் காந்தி அடிகளின் சிலை, மலர் மாலைகளால் அணி செய்யப் பட்டிருந்தது.

பொழுது புலரும்போதே மக்கள், அண்ணலின் சிலை அருகே - பிஞ்சுக் குழந்தைகளுடனும் முதிய பெருமக்களுடனும் நிறைந்து விட்டார்கள்.

மேதகு ஆளுநர் அவர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களும் பங்கு பெறும் குடியரசுத் திருநாளைக் கண்டு களிப்பதற்காகக் குளிரையும் பொருட்படுத்தாமல் ஆர்வ அலை அகத்தில் மோத, அணி திரண்டிருந்தார்கள் பொதுமக்கள்.

தம் துணைவியாருடன், விழாவுக்கு வந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களை, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு ஏ. பத்மனாபன், இ.ஆ.ப., வரவேற்றார்.

பின்னர், சில நிமிடங்களில் அங்கு வருகைபுரிந்த மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் வரவேற்றார்.

முப்படைத் தளபதிகளையும் காவல்துறை உயர் அலுவலர்களையும் ஆளுநர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார் மாண்புமிகு முதல்வர்.

சரியாக எட்டுமணிக்கு, நாட்டுக் கொடியை ஏற்றினார் மேதகு ஆளுநர். அப்போது தேசிய கீதத்தை வாத்தியக் கருவிகள் இசைத்தன.

அதன் பின்னர், முப்படை, காவல்படை, சிறப்புக் காவல் படை, தேசிய மாணவர் படை, தமிழ்நாடு தீயணைப்புப்படை, பாரத சாரண - சாரணியர்படை ஆகியவற்றின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார் மேதகு ஆளுநர்.

அடுத்து, வீரச் செயல்கள் புரிந்த எட்டுப்பேருக்கு அண்ணா வீரப் பதக்கத்தை வழங்கினார் மாண்புமிகு முதல்வர்.

அதன் பின்னர், ஆடல் பாடலுடன், பள்ளி மாணவ, மாணவியர் அணிவகுத்து வந்தனர். தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வகையில் பல்வேறு மாநில உடைகளை அணிந்து மாணவியர் நடனமாடிச் சென்ற காட்சி கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது.

கிராமியக் கலையின் சிறப்பைத் தெரிவிக்கும் வகையில், மயில் ஆட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், காளை ஆட்டம் ஆகியன நடைபெற்றன.

அடுத்து, தமிழக அரசின் சாதனைகளை விளக்கும்வண்ணம் அமைக்கப்பட்ட அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு தொடர்ந்தது.

மங்கல இசையாம் நாதசுர இசையை இசைத்தபடி நாயனக் கலைஞர்கள் அமர்ந்திருந்த ஊர்தி - முதன் முதலில் வந்தது. அதனைத் தொடர்ந்து, செய்தி மக்கள் தொடர்புத்துறை, சுற்றுலாத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், காவல்துறை, தொழில்துறை, வேளாண்மைத்துறை, வனத்துறை, மீன்வளத்துறை முன்னாள் படை வீரர் நலத்துறை, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை, நிதி நிறுவனத் துறை, கைத்தறி மற்றும் துணி நூல் துறை, கதர் கிராமத் தொழில் துறை, தமிழ்நாடு தீயணைப்புப்படை ஆகியவற்றின் அலங்கார ஊர்திகள் பவனி வந்தன.

முன்னாள் படை வீரர் நலத் துறை ஊர்திக்கு முதற்பரிசும், காவல்துறை ஊர்திக்கு இரண்டாவது பரிசும், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு மூன்றாவது பரிசும் கிடைத்தன.

மாணவிகளின் கலைநிகழ்ச்சியைப் பொறுத்த அளவில், கர்நாடக மாநில ஆதிவாசிகள் போல் நடனம் ஆடிவந்த சென்னை ஜவகர் பால பவன் மாணவியருக்கு முதற் பரிசும், தமிழகப் பண்பாட்டை விளக்கும் வகையில் நடனமாடி வந்த நந்தனம் ஆல்பா மெட்ரி குலேசன் பள்ளி மாணவியருக்கு இரண்டாவது பரிசும், சிக்கிம் மாநிலப் பண்பாட்டை விளக்கும் விதத்தில் நடனமாடி வந்த மயிலாப்பூர் குழந்தைகள் தோட்ட மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவியருக்கு மூன்றாவது பரிசும் கிடைத்தன. இந்தப் பரிசுகள், மாலையில் ஆளுநர் மாளிகையில் வழங்கப்பட்டன.

முப்பத்தெட்டாவது குடியரசுத் திருநாள், முத்திரை பதித்த திருநாளாக விளங்கியது.

—நமது செய்தியாளர்



# அண்ணா பதக்கம்



பதக்கம் பெற்றவர்களுடன் மாண்புமிகு முதல்வர்

### திரு எஸ். பைரவ சுந்தரம்

1986-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 அன்று அருப்புக் கோட்டைத் தொகுதி சட்டமன்ற இடைத் தேர்தலின்போது, தலைமைத் தேர்தல் அதிகாரியாகப் பணியாற்றுவர் இவர். எதிர்பாராது வாககுச் சாவடியில் தேர்தல் ஏஜண்டுகளுக்குள் வாக்குவாதம் ஏறபட்டு அது கலவரமாக மாறியதில், இவர் சைக்கிள் சங்கிலியால் தாக்கப்பட்டார். இவரது காலில பெரிய வெட்டு விழுந்தது என்றாலும், அஞ்சாமல் வாக்குப் பெட்டி, வாக்குச் சீட்டு ஆகியவற்றை, மாவட்ட ஆட்சித் தலைவர், தலத்துக்கு வரும்வரை பாதுகாத்து அவரிடம் ஒப்படைத்தார். இந்த வீரச் செயலுக்காக இவருக்கு அண்ணா பதக்கம் வழங்கப்பட்டது.

### திரு ஜி. பழனி

திருச்சி மாவட்ட மருத்துவ அலுவலர் டாக்டர் திருமதி ஞான்சுந்தரியை 19-12-85 பகல் 2 மணியளவில், அடையாளம் தெரியாத சிலர் கத்தியால் குத்தியபோது, அதனைத் தடுத்தவர் இவர். அலுவலக உதவியாளரான இவரையும் எதிரிகள் கத்தியால் குத்தியிருக்கின்றனர். இவர் தடுத்திராவிட்டால் ஞானசுந்தரியின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும். இந்த வீரச் செயலைச் செய்த இவருக்கு அண்ணா பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

### எஸ். பாலசங்கர்

பெரியகுளம் வட்டம் தென்கரை கிராமத்தில் குப்புசாமி என்பவர் வீட்டில் 7-1-86 அன்று தீ விபத்து ஏற்பட்டபோது, வீட்டின் உள்ளிருந்து 4 குழந்தைகள் அலறிக் கொண்டிருந்தனர். கூட்டம் கூடிவிட்டது என்றாலும் யாரும் காப்பாற்றத் துணியவில்லை. அவ்வழியாக, தற்செயலாக வந்து கொண்டிருந்த பொதுப்பணித்துறை - தொழில் நுட்ப உதவியாளர் எஸ். பாலசங்கர், செய்தி அறிந்து தமது இன்னுயிரைப் பொருட்படுத்தாமல், தீப்பிடித்த வீட்டுக்குள் நுழைந்து, குழந்தைகளைக் காப்பாற்றி, உடனடியாக மருத்துவமனையில் சேர்த்தார். இந்த வீரச்செயலுக்காக இவருக்கு அண்ணா பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

### திரு ஆர். சிவானந்தம்
### திரு ஏ. ஜார்ஜ் ஸ்டீபன்
### திரு கே. சங்கர்

சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் 4-1-86 அன்று, சாக்கடைத் தண்ணீர் நிறையும் தொட்டியைச் சுத்தம் செய்து கொண்டிருந்த 5 தொழிலாளர்களை விஷ வாயு தாக்கியது. தீயணைப்புப் படைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது தீயணைப்புப் படையைச் சேர்ந்த மேற்குறிப்பிட்ட மூவரும் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாது மீட்புப் பணியில் ஈடுபட்டு, தொழிலாளர்களைக் காப்பாற்றினர். இவர்களையும் விஷவாயு தாக்கியது. என்றாலும் சமாளித்து வெளியே வந்து சிகிச்சை பெற்றனர். இவர்களது தீரச் செயலுக்காக இவர்களுக்கு அண்ணா பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

### செல்வன் எஸ். வெங்கடேசன்

தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம் மாத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் 6-ஆம் வகுப்பு படிக்கும் ரா்மு என்ற சிறுமி, எதிர்பாராமல் பள்ளியிலுள்ள கிணற்றில் தவறி விழுந்து உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த சமயத்தில் — அருகில் உள்ள வீட்டிலிருந்த வெங்கடேசன் என்னும் 14 வயதுச் சிறுவன், தனது உயிரைப் பொருட்படுத்தாமல், கிணற்றில் குதித்துச் சிறுமியைக் காப்பாற்றி வெளிக்கொணர்ந்தான். இந்தத் தீரச் செயலுக்காக இவனுக்கு அண்ணா வீரப்பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

### திரு எம். செல்வம்

தருமபுரி ஊத்தங்கரைவட்டம் பெரிய தளப்பாடி கிராமத்தில் —3 வயதுக் குழந்தை கிணற்றின் அருகில் விளையாடிக்கொண்டிருந்தபோது, கிணற்றுக்குள் விழுந்துவிட்டது. அப்போது உள்ளே நாகம் ஒன்று குழந்தையின் அருகில் இருந்தது. அதனால் குழந்தையைக் காப்பாற்ற யாரும் முன்வரவில்லை. அதே கிராமத்தைச் சேர்ந்த 20 வயதுள்ள செல்வம் என்பவர் துணிச்சலுடன் கிணற்றுக்குள் இறங்கி, பாம்பைத் துரத்திவிட்டு, குழந்தையைக் காப்பாற்றினார். இவரது வீரச் செயலுக்காக அண்ணா பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.







# விருது பெற்ற கலைமாமணிகள்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஆண்டுதோறும் இயல், இசை, நாடகம், நாட்டியம், திரைப்படம், கிராமியக் கலைகள் ஆகிய துறைகளில் சிறப்பு மிக்க பணியாற்றிய, பணியாற்றி வரும் கலைஞர்களுக்குக் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பித்து வருகிறது. 1959-60முதல் கடந்த 27 ஆண்டுகளாக இத்திட்டத்தின்கீழ் இதுவரை 661 கலைஞர்கள் 'கலைமாமணி' விருது பெற்றுள்ளனர்.

1986-87ஆம் ஆண்டில் 14 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது வழங்கப்பட்டது. 26.1.87 குடியரசு தினத்தன்று சென்னைக் கலைவாணர் அரங்கில் இதற்கான விழா மிகச் சிறப்பாக நடந்தது. மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து விருதுபெறும் கலைஞர்களுக்குப் பொற்பதக்கம் வழங்கினார். மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் கலைஞர்கட்குக் கலைமாமணி விருது வழங்கிச் சிறப்பித்தார்.

மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்;

''தமிழகத்தின் கலை மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்தும் வகையிலும் வெளிநாடுகளிலிருந்து தமிழகத்துக்கு வரும் கலைக்குழுவினர் தங்களுடைய கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு வசதியாகவும் சென்னையில் நவீன கலையரங்கம் ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்''.

மறைந்தும் மறையாமல் புகழ் பெற்ற நான்கு கலை மேதைகளின் திருவுருவப் படங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவ்விழாவில் திறந்து வைத்தார். 1973-74-ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தி வரும் இத்திட்டத்தின்கீழ் இதுகாறும் 166 கலை மேதைகளின்திருவுருவப்படங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.



பேராசிரியர் நா. பாண்டுரங்கன் 'கலைமாமணி' விருது பெறுகிறார்



கலைமாமணி' விருது பெற்ற திரைப்பட நடிகர் திரு கார்த்திக், திரைப்பட நடிகை செல்வி சுகாசினி

இவ்விழாவில் ஏற்கெனவே கலைமாமணி விருதுபெற்ற- நலிவுற்ற நிலையில் இருக்கும் 10 கலைஞர்களுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் பொற்கிழி வழங்கினார். இத்திட்டம் 1974-75-ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது. இதுவரை 169 கலைமாமணிவிருதுபெற்றகலைஞர்கள் 'பொற்கிழி' பணமுடிப்பு பெற்றுள்ளனர். மாண்புமிகு கல்வி-சட்ட அமைச்சர் திரு. சி.பொன்னையன் அவர்கள் சென்னை சங்கீத வித்வத் சபைக்கு (மியூசிக் அகாடமி) வெள்ளிக் கேடயம் அளித்துச் சிறப்பித்தார். இத்திட்டம் 1973-74-ஆம்ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு, இதுவரை 12 கலை நிறுவனங்கள் இச்சிறப்பைப் பெற்றுள்ளன.

சிறந்த நாடகக் குழுவிற்கான வெள்ளிச் சுழற்கேடயம் இவ்வாண்டு சென்னை ஸ்டேஜ் பிரண்ட்ஸ் நாடகக் குழு பெற்றது. இச்சுழற் கேடயம் முன்னாள் தமிழக ஆளுநர் மேதகு திரு கே.கே.ஷா அவர்களால் வழங்கப்பட்டதாகும். 1978 79ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது.

**1986-87ஆம் ஆண்டில் 'கலைமாமணி' விருது பெற்ற கலைஞர்கள்:**

இயற்றமிழ்:

இயற்றமிழ்க் கலைஞர்-பேராசிரியர் நா. பாண்டுரங்கன், இயற்றமிழ்க் கலைஞர் டாக்டர் பழனி இளங்கம்பன்.

இசைத்துறை:

இசைக் கலைஞர் திருச்சி திரு. சுவாமிநாத அய்யர். புல்லாங்குழல் கலைஞர் திரு டி.எஸ்.சங்கரன்.

பரதநாட்டியத்துறை:

பரதநாட்டியக் கலைஞர் திருமதி கோமளா வரதன், பரதநாட்டிய ஆசிரியர் திரு.எஸ்.கே. காமேஸ்வரன்.

நாடகத்துறை:

நாடக நடிகர் திரு டி. எம். சாமிக்கண்ணு, நாடக ஆசிரியர் டாக்டர் வாசவன்.

கிராமியக்கலைத் துறை:

வில்லிசைக் கலைஞர் திருமதி எம்.எஸ். ராஜலட்சுமி, தோற்பாவைக் கூத்துக் கலைஞர் திருமதி சீதாலட்சுமி.

திரைப்படத்துறை:

திரைப்பட நடிகர் திரு கார்த்திக், திரைப்பட நடிகை செல்வி சுகாசினி.

பிற கலைத்துறை:

இசை ஆராய்ச்சிக் கலைஞர் திருமதி வசந்தா சீனிவாசன், இசை நாடக நடிகர் திரு ஏ.எஸ். மகாதேவன்.

**1986-87-ஆம் ஆண்டில் 'பொற்கிழி' பெற்ற கலைஞர்கள்:**

1. கலைமாமணி திரு. சுத்தசத்வானந்தா -இசைப் பாடலாசிரியர், 2. கலைமாமணி திரு. என்.ராமச்சந்திரஅய்யர்-வீணைக் கலைஞர், 3.கலைமாமணி திருமதி டி.ஆர். கமலாமூர்த்தி-கதாகாலட்சேபக் கலைஞர், 4.கலைமாமணி கண்டதேவி திரு.எஸ். அழகிரிசாமி-வயலின் கலைஞர், 5. கலைமாமணி திரு பி. எஸ். வெங்கடாசலம்-நாடக நடிகர், 6. கலைமாமணி திருஎம்.என் கணேசபிள்ளை-வயலின் கலைஞர், 7. கலைமாமணி திரு. ஆலங்குடி சோமு-திரைப்படப் பாடலாசிரியர், 8. கலைமாமணி குத்தாலம் திரு.ஆர்.விசுவநாதய்யர் - மிருதங்கக் கலைஞர், 9. கலைமாமணி திரு.என்.என்.கண்ணப்பா- நாடக நடிகர், 10. கலைமாமணி திரு.ஏ.எஸ்.முத்துசாமி - நாடக ஆசிரியர்.

**1986-87-ஆம் ஆண்டில் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்ட மறைந்த கலைஞர்கள்**

1. புல்லாங்குழல் மேதை மாலி 2. நடிக மேதை செருகளத்தூர் சாமா 3. நடிகமேதை எம்.ஜி. சக்கரபாணி 4. இசை மேதை மதுரை மணி அய்யர் 5. கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியனார்.

தொடக்கத்தில் மன்றத்தலைவர் திரு கவிஞர் வாலி அனைவரையும் வரவேற்றார். மன்றச் செயலர் திரு வி.எஸ்.ராகவன் நன்றி நவின்றார்.




# சுற்றுலா ஒரு தொழில்

தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், 14-ஆவது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி சென்னைத் தீவுத்திடலில், 28.12.86 அன்று, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

மைய அரசின் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு முப்டி முகமது சயீது அவர்கள் தலைமை தாங்கிப் பேசுகையில் கூறியதாவது:

''தமிழகக் கலாச்சாரம் மிகவும் தொன்மையும், பெருமையும் மிக்கதாகும். தேசிய ஒருமைப்பாட்டிற்கும், சர்வதேச நட்பிற்கும் சுற்றுலாத் தலங்கள் உதவுகின்றன. தமிழக அரசின் சுற்றுலாத்திட்டங்கள் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்காகத் தமிழக அரசைப்பாராட்டுகிறேன். சுற்றுலாத் துறைக்குத் தொழில் துறை தகுதி வழங்கப்பட்டால் சுற்றுலாத்துறை மேலும் வளர்ச்சியடையும். சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களுக்குத் தனியார் உதவி செய்ய முன் வந்தால் அவர்கட்கு அரசு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கும்.''

மாண்புமிகு சுற்றுலா, மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் அண்ணா கலையரங்கைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் கூறியதாவது:

''தமிழகம் மற்ற மாநிலங்களைவிட சுற்றுலாத் தலங்களை அதிகம் பெற்றுள்ளது. ஆகவே அதிகச் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகிறார்கள். மைய அரசு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். விரைவில் கம்பம் பள்ளத் தாக்கில் கண்ணகிக்குக் கோவில் ஏற்படுத்தப்படும். சுற்றுலாமையமும் அமைக்கப்படும்.''

விழாத் தொடக்கத்தில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு செ. பாலகுரு எல்லோரையும் வரவேற்றார்.

சுற்றுலாத்துறையை மேம்பாடு செய்வதற்காகத் தமிழக அரசு ஒரு தொழிலாக அங்கீகரித்துள்ளது. இதனால் தொழில் துறைக்கு என்னென்ன சலுகைகள், தகுதி கிடைக்கிறதோ அதே போன்ற சலுகைகள் தகுதி கிடைக்கும்.

நலிவுற்ற மக்கள் இதன் மூலம் பயன்பெறுவார்கள். மக்களின் பொருளாதாரம் உயரும் சுற்றுலாத்துறை வளரும்.

அரசு இதன் பணிகளை வரன்முறைப் படுத்தக் குழு நியமித்துள்ளது. இக்குழுவின் தாளாளராகச் சுற்றுலாத்துறை ஆணையர் மற்றும் செயலர் இருப்பார். இந்த அமைப்பில் ஆறு பேர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

இந்த ஆண்டு வெளிநாட்டுப் பயணிகளுக்கும், ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் ஊனமுற்றவர்கட்கும் நுழைவுக் கட்டணம் இல்லை.

பொருட்காட்சியில் 24 மாநில அரசுத் துறைகளும், 14 மாநில அரசு நிறுவனங்களும், 4 மத்திய அரசுத்துறை நிறுவனங்களும் மற்றும் பல்வேறு நிறுவனங்களும், 200-க்கு மேற்பட்ட அங்காடிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

மறைந்த பிரதமர் இந்திராகாந்தியின் நினைவாகக் குழந்தைகளுக்கான ''இந்திரா காந்தி குழந்தைகள் உல்லாச உலகம்'' அமைக்கப்பட்டுள்ளது.

ரூ. 3 இலட்சம் செலவில் புதிய சாதனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

பொருட்காட்சி அரங்கம் அமைத்தவர்கள் அங்காடி அமைப்பாளர்கள் விழாவில் சத்துணவுத் திட்டத்திற்கு நிதியினை முதல்வரிடம் வழங்கினார்கள்.

விழாவில் சந்திரா தண்டாயுதபாணி குழுவினரின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது. முதல்வர் குழந்தைகளின் நடன நிகழ்ச்சியைக் கண்டு களித்தார்.



# பெருகிவரும் போக்குவரத்து

இன்று பேருந்துகள் இல்லாத கிராமமேஇல்லையென்றுசொல்லலாம். பல பகுதிகளுக்கும் பேருந்துகள் செல்கின்றன. மக்கள் எளிதாக நகரங்களுக்குச் சென்றுவர முடிகிறது. அதன் அடிப்படையாகத்தான் 25.1.'87 அன்று காட்பாடி அரசினர் மேல்நிலைப் பள்ளி எதிரே மிகப் பிரம்மாண்டமான அளவில் ரூபாய் 58 இலட்சம் செலவில் வேலூரை அடுத்த சத்துவாச்சாரியில் புதிதாகக் கட்டப்படும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக அலுவலகக் கட்டிட அடிக்கல் நாட்டு விழாவும், 12 நகரப் பேருந்துகள் 3 புறநகர் பேருந்துகள் தொடக்க விழாவும் நடைபெற்றன.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்கள் அடிக்கல் நாட்டிப் பேசுகையில்,''இதற்கு முன்பு 4 ஆயிரம் பேருந்துகள ஓடின. புரட்சித்தலைவர் ஆட்சியில் 10,800 பேருந்துகள் ஓடுகின்றன. கடந்த 9 ஆண்டுகளில் மட்டும் 6800 கூடுதல் பேருந்துகள் விடப்பட்டு மேலும் அதிகப் பேருந்துகள் விடவேண்டும் என்று கோரிக்கைகள் வந்து கொண்டு இருக்கின்றன'' என்று கூறினார்.

''இதற்கு முன்பு ஆட்சிசெய்தவர்கள் புதிய பேருந்துகளை விடுவதற்கு 3 ஆண்டுகள் வரை ஆனது. புரட்சித்தலைவர் அவர்கள் சட்டத் திருத்தங்களைச் செய்து 3 மாதத்தில் புதிய பேருந்துவிட வேண்டும்என்று உத்தரவிட்டார். இதற்கு முன்பு 7 போக்குவரத்துக் கழகங்கள் இருந்தன. புரட்சித் தலைவருடைய ஆட்சியில் 14 போக்குவரத்துக் கழகங்களாக உயர்த்தப்பட்டு மக்களுக்குச் சேவை செய்துவருகின்றன'' என்றும் குறிப்பிட்டார்.

மாவட்டக்கூடுதல் ஆட்சியாளர் திரு பி.ஏ.இராமையா, தமிழக தோல் தொழில் வளர்ச்சிக்கழகத் தலைவர் திரு என்.குலசேகர பாண்டியன், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு ஏ.சி. சண்முகம், திரு ஆர். ஜீவரத்தினம், சட்ட மன்ற உறுப்பினர்கள் திரு கோ.இரகுபதி, திரு எஸ். மணவாளன், திரு. ஆர்.கோவிந்தசாமி, திரு.எம். கதிர்வேலு, திரு சின்னக்குழந்தை ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

நெடுஞ்சாலை மேற்பார்வைப் பொறியாளர் திரு எஸ்.தனபால் வரவேற்றுப் பேசினார். வேலூர் துணைப் பொறியாளர் திரு கே. சுந்தரசேகரன் நன்றி கூறினார்.

காட்பாடியை அடுத்த கவசம் பட்டு கிராமம் கொட்டாற்றின் குறுக்கே ரூ. 34 லட்சம் செலவில் கட்டப்படும் பாலத்திற்கும், தொண்டான் துளசி ஆந்திர இணைப்புச் சாலைக்கும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு.முத்துசாமி அவர்கள் அடிக்கல் நாட்டினார். சட்டமன்ற உறுப்பினர் திரு கோ. இரகுபதி இரண்டு விழாவிற்கும் தலைமை தாங்கினார்.

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

வட ஆர்க்காடு மாவட்டம் காட்பாடி,வேலூரிலிருந்து 7கி.ம. தொலைவில் உள்ளது. பல ஆண்டு காலம் தொழிற்சாலையே இல்லாத இந்தத் தொகுதியில்வடகங்க வெடிமருந்துத்தொழிற்சாலையும் கிழக்கே வேலூர் கூட்டுறவு சாக்கரை ஆலையும் அமைதது பல்லாயிரக்கணக்கான மக்கள் வேலை செய்து வருகிறார்கள். இதனால் மக்கள் தொகைக்கு ஏற்ப அடிப்படை வசதிகளான வீடு, குடிநீர்ப் போக்குவரத்து ஆகியவை தேவைப்படுகின்றன.

ரூ. 50 லட்சம், குடிநீர்த் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழா 13.1.'87 அன்று மாலை காட்பாடியை அடுத்த கே.வி. குப்




பம் கிராமத்தில் நடைபெற்றது. இதனால் எட்டு பஞ்சாயத்துகள் பயனடைகின்றன.

இவ்விழா தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் திரு எஸ்.டி.உகம்சந்த் அவர்கள தலைமையில் நடைபெற்றது. வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஏ.சி.சண்முகம், காட்பாடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு கோ.இரகுபதி முன்னிலையில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. அப்பொழுது "கிராமம் நகரமாக மாறவேண்டும் என்பது நம்முடைய முதல்வருடைய ஆசை. அதுபோலவே கிராமங்கள் சிறுசிறு நகரங்களாக மாறிக் கொண்டு வருகிறது. நீண்டகாலப் பிரச்சினையாக இருந்த ராஜாத்தோப்பு துணைத் திட்டம் ரூபாய் ஒரு கோடியே 25 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட உள்ளது. ரூபாய் 17 லட்சத்தில் காவலூர் ஏரி செப்பனிடப்பட்டு வருகிறது'' எனத் தெரிவித்தார்.

மேலும் குடிநீர் வாரியத்தலைவர் திரு எஸ்.டி.உகம்சந்த் அவர்கள் பேசுகையில், தமிழக முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆரின் உத்தரவுப்படி, குடிநீர்த் தட்டுப்பாடு வராமல் இருக்க, முன்னேற்பாடுகளைச் செய்து வருவதாகவும், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ரூ. 10 கோடி 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஏ. சி. சண்முகம், காட்பாடி சட்டமன்ற உறுப்பினர் திரு கோ.இரகுபதி,கே.வி.குப்பம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திருமதி கே.எம் கலைச்செல்வி ஆகியோரும் பேசினர்.

**எஸ். கே. மூர்த்தி**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர்.**

## பாரதியின் 'செந்தமிழ்நாடு' —சில தகவல்

பல்லாண்டுகளுக்கு முன்னர்!

கவிதைப் போட்டி ஒன்றைத் தமிழ்ச் சங்கம் ஒன்று நடத்தியது.

அதற்குக் கவிதை எழுதி அனுப்புமாறு பாரதியாரின் மனைவி அவரிடம் கேட்டுக்கொண்டார்.

உடனே பாரதியார்,

"செந்தமிழ் நாடெனும் போதினிலே-இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே-எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே-ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே...''

என்ற கவிதையை எழுதி அனுப்பினார்.

"செல்லம்மா! நீ வேணுமின்னா பாரு! இந்தக் கவிதைக்குப் பரிசு எதுவும் கிடைக்காது''- என்று பாரதியார் ஆணித்தரமாகச் சொன்னார் தமது மனைவியிடம்.

ஆனால், அவருக்குப் பரிசு கிடைத்தது! முதற் பரிசல்ல!; மூன்றாவது பரிசு!

முதற் பரிசு பெற்ற கவிதை மக்கள் மனத்தை விட்டு நீங்கிவிட்டது. ஆனால் மூன்றாம் பரிசு பெற்ற 'செந்தமிழ்நாடு' என்ற பாடலைத்தான் உலகம் அறிந்திருக்கிறது.

இந்தச் 'செந்தமிழ் நாடு' பாடல் திரைப் படத்திலும் இடம் பெற்று, ஒரு புதிய வரலாற்றைப் படைத்திருக்கிறது.

1940-ஆம் ஆண்டு, மாடர்ன் தியேட்டர்ஸ் என்னும் திரைப்பட நிறுவனம் நடிப்புச் சுடர் பி.யு. சின்னப்பாவை இரட்டை வேடங்களில் நடிக்க வைத்து 'உத்தம புத்திரன்' என்னும் திரைப்படத்தை வெளியிட்டது. அதில் பி.யு. சின்னப்பா 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே' என்ற பாடலைப் பாடி ரசிகர்களை மகிழ்வித்தார்.

"இந்தப் பாடல் இடம் பெற்ற காட்சியைப் படத்திலிருந்து நீக்கிவிட வேண்டும்'' என்று பிரிட்டிஷ் அரசு அந்நாளில் ஆணையிட்டது. அதன் காரணமாக அந்தப் பாடல் காட்சி மட்டும் நீக்கப்பட்டது. இந்திய நாடு விடுதலையடைந்த பின்னர்-அதாவது 1947க்குப் பின் அந்தப் பாடல் காட்சி மறுபடியும் அப்படத்தில் இணைக்கப்பட்டது.

**தமிழ்ப்பித்தன்**



# மெரினா புதிய பொலிவு பெறுகிறது!

சென்னை மாநகர் முழுவதும் மாநகராட்சி சார்பில் 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடத் திட்டமிடப்பட்டது. இதுவரை 8 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டுவிட்டன. மீதமுள்ள 2 ஆயிரம் மரக்கன்றுகளைச் சென்னை மெரினா கடற்கரையில் உள்ள இடங்களில் நட்டுப்பசுமையாக்கத் திட்டமிடப்பட்டது. இதன் அடிப்படையில் 19.1.87 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தலைமைக் காவல்துறை அலுவலகம், இராணி மேரிக்கல்லூரி, லேடி வெலிங்டன் பயிற்சிக் கல்லூரி, சாரணர் தலைமை அலுவலகம், மாநிலக்கல்லூரி, சென்னைப் பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் மரக்கன்றுகளை நட்டார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்ச்சிக் கண்காட்சியில் வனத்துறை, அண்ணா பல்கலைக்கழகம், மாசுக்கட்டுப்பாட்டுவாரியம் பல்லவன் போக்குவரத்துக் கழகம், சென்னைப் பல்கலைக்கழகத்தின் மானவர் ஆய்வுப்பிரிவு சார்பில் விளக்கப் படக்காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன. இந்தக் கண்காட்சியினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்து 30 நிமிடங்களுக்கு மேலாகச் சுற்றிப் பார்த்தார். சென்னைப் பல்கலைக்கழக ஆய்வுப் பிரிவினர் கூவம் நதியில் முத்துச்சிப்பிகளை ஏராளமான அளவில் போட்டு, சுத்தம் செய்ய உள்ளனர். வளர்ந்த முத்துச்சிப்பிகளை உணவாகவும் உட்கொள்ளலாம்.

சுற்றுப்புறம் எவ்வாறு கெடுகிறது? அதை எப்படி நாம் பாதுகாப்பது? இவை தெளிவாகக் கண்காட்சியில் சித்திரிக்கப்பட்டு இருந்தன.

மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் இராணிமேரிக் கல்லூரி முதல்வர் ரூ. 7 ஆயிரத்திற்கான காசோலையையும், பொருளாதாரப் பேராசிரியை ஒருவர் ஒரு மாதச் சம்பளத்தையும் முதலமைச்சர் நிவாரண நிதிக்கு வழங்கினார்கள்.

இலங்கைத் தமிழர் நிதிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சென்னைப் பல்கலைக்கழக அலுவலர்கள் சார்பாக ரூ. 1 இலட்சத்தைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் வழங்கினார்.

சென்னை மாநகராட்சிப் பள்ளி மாணவியர்கள், கல்லூரிகளில் உள்ள என்.எஸ்.எஸ். மாணவியர்கள் மரங்களை நட்டனர். சென்னைக் கடற்கரைச் சாலையே விழாக் கோலம் பூண்டிருந்தது. அலங்கார வளைவுகளும், தோரணங்களும், வண்ணக் கொடிகளும் அமைக்கப்பட்டிருந்தன.

மரங்களை நடுவதன் மூலம் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு மக்களிடையே ஏற்படுகிறது.

சுற்றுப்புறச் சூழல் உணர்வையும், மரம் நடும் திட்டத்தின் மேன்மையையும், சென்னையைத் தூய்மையான, பசுமையான நகராக்கும் வழிவகைகளையும் விளக்கும் பாடல்களை மாணவ மாணவிகள் காந்தி சிலை, உழைப்பாளர் சிலை ஆகிய இரு இடங்களில் பாடினர்.

தலைமைக் காவல்துறை அலுவலகத்தில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், மாண்புமிகு கல்வி சட்ட அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள், மாண்புமிகு சுற்றுலா மின்துறை அமைச்சர் திரு.வி.வி. சுவாமிநாதன் அவர்கள், மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் ஆனூர் கோ. ஜெகதீசன் அவர்கள் ஆகியோர் மரக்கன்றுகளை நட்டனர்.

தலைமைக் காவல்துறை அலுவலகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'வெள்ளரசு' மரக்கன்றுகளையும், இராணிமேரிக் கல்லூரியில் 'கிறிஸ்துமஸ்' மரக்கன்றையும், சாரணர் தலைமைக் காரியாலயத்தில் புன்னை மரக்கன்றையும், மாநிலக்கல்லூரியில் 'நாகலிங்க' மரக்கன்றையும், சென்னைப் பல்கலைக்கழகத்தில் 'மகிழ' மரக்கன்றையும் நட்டார்.

# புகழ் மணக்கும் குமரி

தொல்காப்பியப் பாயிரம் முதல் இக்கால இலக்கியம் வரை வண்டமிழ்ப் புலவர்களால் தண்துறைக் குமரியென மன முவந்து பாராட்டப்பட்டதும், வரலாற்றுச் சிறப்புமிக்கதுமாகும் கன்னியாகுமரி மாவட்டம்.

இந்தியத் துணைக்கண்டத்தின் தெனகோடியில் முக்கடலால் சூழப்பட்டு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நால் வகை நிலங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் இம் மாவட்டம் பல்வேறு தனிச் சிறப்புக்களை யுடைய மாவட்டமாகும். உருவில் சிறியதேயாயினும் இயற்கை யெழிலிலும், மலை வளத்திலும் மண்வளத்திலும், கடல் வளத்திலும், கல்வி வளர்ச்சியிலும் ஏனைய மாவட்டங்களுக்கு முன்னோடியாகத் திகழும் மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம்.

வானிடம் உறவு கொண்டாடும் மலைகள், வான் பொய்ப்பினும் தான் பொய்யாத வற்றாத நீராறுகள், நெஞ்சை அள்ளும் நீண்ட கடற்கரைப் பகுதிகள் வனப்புமிக்க காடுகள், வளங்கொழிக்கும் பசுமையான வயல்கள், வெள்ளியினை அள்ளித் தெளித்தாற் போல் சரிந்து விழும் அருவிகள், காண்போரைக் கவர்ந்திடும் கவின்மிகு கலைச் செல்வங்கள் அனைத்தும் இம்மாவட்டத்திற்கு உரிய சிறப்பு.

குமரி முனையில் சுமார் 200 மீட்டர் தொலைவில் கடலுக்குள் பாறையில் அமைந்திருக்கும் விவேகானந்தர் மண்டபம் உலகுன் அனைவரது பாராட்டையும் பெற்று, பல்வேறு இன மக்களும் நேரில்வந்து கண்டு களிக்கவும், வியக்கவும், சிற்பக்கலைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது. தமிழகச் சிற்பக் கலைஞர்களின் திறமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் வகையில் அமைந்துள்ள இம் மண்டபத்தில் சுவாமி விவேகானந்தர் அவர்களின் வெண்கலச்சிலை உருவம் ஆன்மீகததை அள்ளித் தரும் அடித்தளமாகக் காட்சியளிக்கின்றது.



திருநந்திக்கரை குடைவரைக் கோயில் திருவந்தியடிகளால் கட்டப்பட்டு (கி.பி.9-ஆம் நூற்றாண்டில்) மிகவும் பழமையான கோயிலாகக் காட்சியளிக்கின்றது. இம் மாவட்டத்தில் சோழர், பாண்டியர் காலத்தில் கட்டிய கோவில்கள் ஏராளம் உள்ளன. செண்பக ராமன் புதூர், தாழக்குடி அருகில் உள்ள பழைய ஆதிச்சன்புதூரில் 100 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டுள்ள அவ்வையார் கோவில் உள்ளது. கன்னியாகுமரியில் குகநாதேஸ்வரர் கோயில் ராஜராஜ சோழன் காலத்தில் கட்டப்பட்டுள்ளது.

உலகப் பொது இலக்கண நூலாகத் திகழ்வது அகத்தியரது சீடரான தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியம் என்ற பழம் பெரும் நூலாகும். இத்தொல்காப்பியத்தை அரங்கேற்றித் தந்தவர் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த அதங்கோடு என்னும் ஊரைச்சார்ந்த அதங்கோட்டாசான் என்ற புலவராவர்.

**சுற்றுலா இடங்கள்**

கன்னியாகுமரியில் அமைந்துள்ள காந்திமண்டபம் ஆயகலை





களில் ஒன்றான கட்டடக் கலைக குச் சான்றாகும். வாழ்விற்கோர் நற்ஜோதியாகவிளங்கும்அண்ணல் காந்தியடிகள் நினைவாக எழுப்பப்பட்ட இம்மண்டபத்தில் ஆண்டுதோறும் அக்டோபர் இரண்டாம் நாள் கதிரவனின் கதிர்கள், கட்டடத்தின் உச்சியிலுள்ள சிறு துவாரம் வழியாக அண்ணலின அஸ்தி பீடத்தின் மீது படர்வது இம்மண்டபத்தின் தனிச் சிறப்பாகும்.

குமரி மாவட்டம் சுசீந்திரத்தில் உள்ள தாணுமாலய மூர்த்தி திருக்கோவில் சரித்திரப் புகழ் வாய்ந்தது. ஊர் கூடி தேர் இழுக்கும் உன்னதமான சுசீந்திரத்தில் ஒவ்வொரு ஆண்டும் மார்கழித் திங்களில் தேர்த் திருவிழா நடைபெறுவது கண்கொள்ளாக் காட்சியாகவுள்ளது.

எழில் மிகு திற்பரப்பு நீர் வீழ்ச்சியில் நாள்தோறும் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்து அருவியில் நீராடிச் செல்வது மனதிற்கு மகிழ்ச்சியை மட்டுமின்றி உடலுக்குச் சிறந்த ஆரோக்கியத்தையும் நல்குகிறது.

மேலும், இம்மாவட்டத்தில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றார்-1 மற்றும் 2 நீர்த் தேக்கங்கள் அமையப்பெற்று மாவட்டத்திற்கு விவசாயத்திற்குத் தேவையான தண்ணீரை நிறைவு செய்து வருகின்றது. உலக்கருவி நீர்வீழ்ச்சி, நீரா்டுபவர்களின் நோய் நீங்கப் பெற்று உடலுக்கு நல்ல ஆரோக்கியத்தை நல்குகின்றது.

**திருத்தலங்கள்**

நாகர்கோவிலிலுள்ள நாகராஜகோயில் சைவ, வைணவ, ஜைன புத்தமதங்களின் இணைப்பாக வளர்ந்து, தமிழ்நாட்டில் நாகராஜனுக்கு என்று இருக்கும் ஒரே கோயில் இதுதான்.

நாகர்கோவிலின் அருகில் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சுசீந்திரம் சிறப்பு வாய்ந்த புனித இடமாகும். இங்கு படைத்தல், காத்தல், அழித்தல் முக்கடவுளும் தாணுமால்யன் பெருமாள் என்ற பெயரில் பள்ளி கொண்ட சரித்திரத்தில் இடம்பெற்ற கோயில் காணப்படுகின்றது. தமிழரின் சிற்ப, கட்டட இசைக்கலைகள் ஒன்றாக வெளிப்படும் வகையில் ஒரே கல்லில் 18 அடி உயரமுள்ள ஆஞ்சநேயர் சிலையும், வானளாவ்ய கோபுரங்களும் இசைத்தூண்களும் காணப்படுகின்றன.

பார்புகழும் புனித சவேரியார் கோயில் கோட்டார் என்னுமிடத்தில் உள்ளது. இக்கோய்லில் பல கல்வெட்டுகள் காணப்படுகின்றன. உரோமன் கத்தோலிக்க மக்களின் ஆலயங்களில் தொன்மை வாய்நததாகும்.

திருவிதாங்கோடு பள்ளிவாசல் முகமதியர்கள் வழிபடும் புனித இடமாகத் திகழ்கின்றது.

**மாவட்டத்தின் முக்கிய தொழில்**

பல தொழில்களுக்கும் பயன்படும் ரப்பா ஒரு முககிய பயிராகும். ரப்பர் பயா்டுவதற்கு ஏற்ற சீதோஷ்ணநிலை தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவடடத்தில் மட்டுமே உள்ளது. இந்தத் தொழிலை வளர்சசியடையச் செய்வதற்கு அரசானது ரப்பர் கழகத்தைய நாகர்கோவிலில் நிறுவியுள்ளது. இம்மாவட்டத்தில் அதிகமான நிலப்பரப்பில் ரப்பர்ப்யிர்ராகிறது. கன்யாஸ்பின் என அழைக்கப்படும் கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையில் (ஆரல்





வாய்மொழு) சுமார் 25 ஆயிரம கதிர்கள் உள்ளன. பாலியஸ்டர் கலப்பு ரக இழைகள் உட்பட பல்வேறு ரக நூல்களும் இங்கு உற்பத்தியாகின்றன. இவ்வாலையின் மூலம் ஆண்டு ஒன்றிற்குச் சராசரி 5½ கோடி ரூபாய் பெறுமானத்திற்கு நூல் உற்பத்தி செய்யப்படுகின்றது.

குமரி மாவட்டக் கைவினைப் பொருட்கள் இன்று நாடெங்கிலும் நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளன. கடலிலே இருக்கும் சிப்பியைக் கொண்டு பல்வேறு பொருட்கள் செய்யப்பட்டு குமரிக்குவருகை தரும் சுற்றுலாப் பயணிகளால் பெரிதும் விரும்பி வாங்கப்படுகின்றன.

இங்கு கிடைத்திடும் ஒருவகை வாழைநாரிலிருந்து அழகிய நார்ப்பைகள் செயயப்பட்டு பல பெண்கள இத் தொழிலில் ஆர்வமுடன் ஈடுபடுத்தப்பட்டு சிறந்த வருவாயினைப் பெற்று வருகின்றனர். கயிறு திரிக்கும் தொழில் நடைபெறுகின்றது. கால் மிதிகள், தரைவிரிப்புகள் மற்றும் பல்வேறு நார்ப் பொருட்களை டாக்புளோர் எனும் நிறுவனம் தயாரிக்கிறது. ஆசியாவிலேயே முழுதும் இயந்திரத்தால் இயங்கும் கயிறு திரிக்கும் தொழிறசாலையில் இது சிறந்த ஒன்றாகும்.

1965-ல் தொடங்கப்பட்ட மணவாளக்குறிச்சி மணல் ஆலையில் கிடைக்கும் அதிசய மணல் உலகத் தேவையில் மூன்றில் ஒரு பங்கை நிறைவு செய்கிறது. மீன்பிடித்தல் சிறப்பான தொழிலாக நடைபெறுகிறது.

தொல்காப்பியத்தை அரங்கேற்றித் தந்தவர் குமரி மாவட்டத்தைச் சார்ந்த அதங்கோடு என்னும் ஊரைச் சேர்ந்த அதங்கோட்டாசான் என்னும் புலவராவர். இவர் தமிழ மொழி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர். சமுதாயத்தில் புரையோடிக் கிடந்தமூடப்பழக்கவழக்கங்களை அகற்றுவதற்காகக் கவிதைகள் மூலம் சிறந்த கருத்துக்களை நாட்டிற்கு வழங்கியவர் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்கள். மொழி விடுதலைக்காகப் பாடுபட்டவர் அமரர் ஜீவா அவர்கள். கலைத்துறையின் மூலம் பல புரட்சிகளைச் செய்து மக்கள் இதயத்தில் வீற்றிருப்பவர் கலைவாணர் திரு.என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள். குமரி மாவட்டத்தைத்தமிழ்நாட்டுடன் இணைக்க அரும்பாடுபட்டவர் திரு நேசமணி அவர்கள். மற்றும் விடுதலைக்காகப் பாடுபட்ட தலைவர்கள் இம்மாவட்டத்தில் உள்ளனர். சதாவதானி செய்கு தம்பிப் பாவலர் அவர்கள் தமிழுக்காகப்பாடுபட்டபெரியார் ஆவார். இயல் இசை நாடக வல்லுநர்களான டி. கே. எஸ். சகோதரர்கள் இம்மாவட்டத்தைச் சார்ந்தவர்களே ஆவர்.

மாத்தூர் தொட்டில் பாலம் ஆசியாவிலேயே மிக உயரமான பாலமாகும். பழங்கால நினைவுச் சின்னமாக விளங்கும் சிதறால் மலைக்கோயில் கன்னியாகுமரி மாவட்டத்தில் சிதறால் என்னுமிடத்தில் உள்ளது. இது பண்டைக் காலத்தில் ஜைனர்களின் இருப்பிடமாகத் திகழ்ந்து வந்துள்ளது.

குளச்சல் மீன்பிடிதுறைமுகம் இயற்கை அழகு உள்ள துறைமுகமாகும். சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகம் தற்போது வேகமாக உருவாக்கப்பட்டு வருகிறது. முக்கூடல் அணையிலிருந்து மாவட்டத்திற்குத் தேவையான குடிநீர் கிடைக்கின்றது.

இவ்வாறு குமரி மாவட்டம் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கி வருகிறது.







# மருத்துவத் துறைக்கு ஐந்து மாடிக் கட்டடம்

தமிழ்நாடு மருத்துவப்பணி, குடும்ப நலத்துறை மற்றும் பொதுச் சுகாதாரம், தடுப்பு மருத்துவத்துறை ஆகிய இயக்ககங்களுக்கான 5 மாடிக் கட்டடம் சென்னை தேனாம்பேட்டை வளாகத்தில் 17.12.86 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்கள் தலைமை தாங்கிப் பேசுகையில் தெரிவித்ததாவது

''இந்த அரசு குக்கிராமங்களில் கூட மருத்துவ வசதி செய்துள்ளது. கர்ப்பமுற்ற தாய்மார்கட்கு இரும்புச் சத்து மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. ஆரம்பச் சுகாதார நிலையங்களின் பணிகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.''

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகையில், ''கல்வி வளர்ச்சிக்கும், மருத்துவ வளர்ச்சிக்கும் தமிழகத்தில் அதிக நிதி ஒதுக்கீடு செய்து திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன'' என்றார்.

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் பேசுகையில், ''ஐந்து மாடிகளாகக் கட்டப்பட்டுள்ள இக்கட்டடத்தின் மேல், மேலும் நான்கு மாடிகள் கட்டப்படும்'' என்றார்.

விழாவில் மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலாளர், பொதுப்பணித்துறைத் தலைமைப் பொறியாளர், மருத்துவப்பணி- குடும்ப நலத்துறை இயக்குநர் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தரக்குறைவான மருந்துகளைத் தயாரிப்பதைக் கண்டுபிடிக்க புதிய ஊர்தி ஒன்றினை விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மருத்துவக் கட்டுப்பாடு இயக்குநரிடம் வழங்கினார்.

## தெரிந்து கொள்வோம்

- கவி தாகூரின் புனைபெயர் பானுசின்ஹா.
- அமெரிக்காவில் 3,65,000 இந்தியர்கள் வாழ்கின்றனர்.
- உலகில் பாம்புக் கடிக்கு ஆளாகிறவர்களில் 80 சதவிகிதத்தினர் ஆண்களே.
- மாலைக்கண் நோய் பெரும்பாலும் 'ஏ' வைட்டமின் குறைவாலேயே ஏற்படுகிறது.



# கீரை — ஒரு பாதுகாப்பு உணவு

கீரை ஒரு பாதுகாப்பு உணவு. பாதுகாப்பு தரும் உணவு வகைகளில் முக்கியமானது கீரை வகைகளாகும். தானியங்களிலும் பருப்பு வகைகளிலும் காணப்படாத உடலுக்குத் தேவையான தாது உப்புகளும் உயிர்ச் சத்துக்களும் கீரை வகைகளில் தான் அதிகம் காணப்படுகிறது. சத்துணவில் நாள்தோறும் ஒரு நபர் சேர்க்க வேண்டிய காய்கறிகள் 300 கிராம். இதில் கீரை 125 கிராம் இருக்க வேண்டும் என உணவியல் வல்லுநர்கள் அறுதியிட்டுக் கூறியிருப்பதிலிருந்து, கீரையின் முக்கியத்துவம் மிகத் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

முக்கியமாக 10 வகைத் தாது உப்புகள் மனித உடலின் வளர்ச்சி, அமைப்பு போன்றவற்றிற்கு மிகவும் அவசியமென மருத்துவ ஆராய்ச்சிகளின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இரும்பு, சுண்ணாம்பு, பாஸ்பரஸ், பொட்டாசியம் போன்ற தாதுப் பொருள்கள் வேறு எந்த உணவுப் பொருள்களைக் காட்டிலும் கீரையில்தான் அதிக அளவில் உள்ளது.

கீரை உணவில் இரும்புச் சத்து நிறைந்திருப்பதால் உடலிலுள்ள சிவப்பு இரத்த அணுக்களைச் சீரிய நிலையில் வைக்கிறது. இரத்தச் சோகையைத் தடுக்க உதவுகிறது. அரைக்கீரை, தண்டுக்கீரை, பொன்னாங்கண்ணி, வெந்தயக்கீரை, சிறுகீரை, தவசிக்கீரை, குப்பைக்கீரை போன்றவைகளில் அதிக அளவு இரும்புச் சத்து உள்ளது. கீரைகளில் சுண்ணாம்புச் சத்து இருப்பதால் எலும்புகள் வலிவுற்று பற்களும், ஈறுகளும் ஆரோக்கியமும் வலிமையும் பெறுகின்றன.

அகத்திக் கீரை, கறிவேப்பிலை தவசிக்கீரை, பொன்னாங்கண்ணிக்கீரை இவற்றில் சுண்ணாம்புச்சத்து அதிகமாக உள்ளது. கீரைகளில் நார்ச்சத்து அதிகமாக உள்ளது. எனவே கீரையை உண்பதால் வயிறு நிரம்பி குடல்களின் வேலையை துரிதப்படுத்தி குடலுக்குப் புத்துணர்ச்சியை ஊட்டி, மலச்சிக்கலை நீக்க உதவுகிறது. பல நோய்களுக்கு ஆரம்பம் மலச்சிக்கல்தான். நார்ப்பொருள் கீரைகளில் அதிகமிருப்பதால் மலச்சிக்கலை நீக்கி நோய் நொடிகள் வராது பாதுகாக்கும் ஒரு கண்காணிப்பு உணவாகப் பயன்படுகிறது.

இந்தியாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கண்பார்வையற்றவர்களாக உள்ளனர். இதற்குக் காரணம் சத்துணவுப் பற்றாக் குறையும், குறிப்பாக வைட்டமின் 'எ' பற்றாக்குறையுமே தான் என உணவியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். உயிர்ச்சத்து 'எ' அதன் மூலப்பொருளான கேரோடினாகக் கீரைகளில் அதிக அளவில் இருப்பதால் நாள்தோறும் கீரையை உணவில் சேர்த்துக் கொள்வதால் கண் சம்பந்தமான கோளாறுகளைத் தவிர்க்கலாம்.

கீரைகளிலிருந்து கிடைக்கும் கேரோட்டின் சத்தானது நமது உடம்பில் உயிர்ச்சத்து 'எ' வாக மாற்றப்படுகிறது. பொதுவாக 125 கிராம் கீரைகளிலிருந்து 2000 முதல் 12000 அனைத்து நாட்டு அளவு உயிர்ச்சத்து 'எ' கிடைப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. முருங்கைக்கீரை, கொத்தமல்லிக் கீரை, கறிவேப்பிலை இவற்றில் வைட்டமின் 'எ' அதிக அளவில் உள்ளது. நாள்தோறும் 125 கிராம் கீரை உணவில் சேர்த்துக் கொண்டால் அதன் மூலம் கிடைக்கும் உயிர்ச்சத்து 'எ' நமது உடலுக்குப் போதுமானதாகக் கணக்கிட்டுள்ளனர். எனவே ஒளிமயமான எதிர்கால வாழ்க்கைக்கு ஒரு நபர் ஒரு நாளைக்கு 125 கிராம் கீரை உண்ண வேண்டும்.

கீரை உணவில் வைட்டமின் 'சி' எனப்படும் அஸ்கார்பின் அமிலம் அதிக அளவில் உள்ளது. உடல் நலத்திற்கு மிகவும் அவசியம் என நிரூபிக்கப்பட்ட இந்த வைட்டமின் 'சி' பற்றாக்குறையினால் பல்சொத்தை, பல் சிதைவு, ஸ்கர்வி நோய், சக்தி இழப்பு, காலதாமதமாகப் புண்கள் ஆறுதல், நோய்க்கு எளிதில் ஆளாகுதல், இருதயம், இருதய நரம்புகள் பெருத்தல் போன்ற வியாதிகள் ஏற்படுகின்றன. இதைத் தவிர்க்க உயிர்ச்சத்து 'சி' நிறைந்த தவசிக்கீரை, முருங்கைக்கீரை. குப்பைக்கீரை, வெந்தயக்கீரை, பாலக், லெட்டுஸ், முட்டைக்கோஸ் முதலிய கீரைகளை உணவில் அதிக அளவில் சேர்க்க வேண்டும். எனவே பல விதமான தாது உப்புகளும் உயிர்ச் சத்துக்களும் நிறைந்த கீரை உணவு உண்பதால் உடல் நோய் நொடியின்றிப் பாதுகாக்கப்படுகின்றது.

வைட்டமின் மாத்திரைகளையும், கால்சியம், மாத்திரைகளையும் 'அயர்ன் டானிக்கையும்' சாப்பிடுவதற்குப் பதிலாக நாள்தோறும் உணவில் 125 கிராம் கீரைகளைச் சேர்த்துக் கொள்ளலாம் அன்றோ. இன்னும் சிலருக்குக் கீரை என்றாலே 'அலர்ஜி'. கீரை மலிவானது என்பதால் அதன் மகத்துவம் உணரப்படவில்லை. நம் தமிழக மக்கள் சராசரியாக 15 கிராம் அளவே கீரையை உணவுடன் உட்கொள்ளுகின்றனர்.

சராசரி ஒரு இந்தியன் சுமார் 20 கிராம் கீரையைத் தன் உணவில் சேர்த்துக்கொள்கின்றான். அதாவது தான் சேர்த்துக் கொள்ள வேண்டிய கீரையின் அளவில் ஐந்தில் ஒரு பங்கு கூட சேர்த்துக் கொள்ளவில்லை. நமது தேசத் தந்தை காந்தியடிகள், பால் சாப்பிடுவதால் என்ன சத்துக்கள் கிடைக்கின்றதோ அதே சத்துக்களைப் பச்சைக் கீரை அளிக்கின்றது என்று பிரபல ஆங்கில டாக்டர் ஒருவர் கூறியதாக குறிப்பிட்டுள்ளார். டால்ஸ்டாய் கீரைத் தோட்டத்தைத் தனது 'மருத்துவப் பெட்டி' என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் மாட்டு மாமிசம், முட்டை, வெண்ணெய், பால், முதலிய சத்துணவே அதிகமாகச் சாப்பிடுகின்றனர். அப்படி இருந்தும் அமெரிக்கர் தங்கள் அன்றாட உணவில் கீரையை அதிகமாகச் சேர்த்துக் கொள்கின்றனர். குறிப்பாக கீரையைப் பச்சையாக உண்ணும் பழக்கம், அதிகமுள்ளது. கீரையை அதிகப்

பரப்பளவில் பயிர் செய்கின்றனர் ஒரு சில பருவத்தில் கீரையைச் சாகுபடி செய்ய முடியாவிட்டாலும வளையும் பருவத்தில் கீரையைப் பயிரிட்டுப் பதப்படுத்தி, விளைவிக்க முடியாத பருவத்தில் உபயோகிக்கின்றனர்.

நமது ஊர்களில் கீரை அதிகப் பரப்பளவில் சாகுபடி செய்யப்படவலலை. இதன் காரணம் வாஙகிப் பயன்படுத்துவோர் அதிகமில்லாததே. அதில் இருக்கும் சத்தை உணருவதில்லை. எனவே முதலில் உணவுப் பழக்க வழக்கங்களை மாற்றுவதற்கும் உணவிலுள்ள சத்துக்களைத் தெரிந்து கொள்ளுவதற்கும் ஆசிரியப் பெருமக்களும், சமூகசேவை நிறுவனங்களும் குறிப்பாக மகளிர் மன்றங்களும் அயராது பாடுபட வேண்டும்.

கீரைகளில் ஏராளமான வகைகள் உள்ளன. கீரைகள் சத்துக்கள் நிறைந்தது மட்டுமல்ல. அத்துடன் மருத்துவக் குணங்களும் நிறைந்தது. சாதாரணமாக நாம் பயன்படுத்தும் சில வகைக் கீரைகளையும், அதன் சத்துக்கள் மற்றும் மருத்துவக் குணங்களையும் பார்ப்போம்.

**முளைக்கீரை, தண்டுக்கீரை:**

இதன் கீரைகள் புரதம், தாது சத்துக்கள், உயிர்ச்சத்து 'எ', 'சி' இவைகளை அதிகமாகப் பெற்றிருக்கிறது. இதை வெங்காயம், பூண்டு, பச்சை மிளகாயுடன் சேர்த்துகடைந்துண்ண, உட்சூடு, இரத்தக் கொதிப்பு, பித்த எரிச்சல் கட்டுப்படுவதுடன் கண் குளிர்ச்சிபெறும். நல்ல பசியைத் தரும். சொறி, சிரங்கு நீங்கும்.

கீரைகளிலேயே அதிக அளவு இரும்புச் சத்து அரைக் கீரையில் தான் உள்ளது. மற்றும் சுண்ணாம்புச் சத்து, பாஸ்பரஸ், வைட்டமின் 'எ', 'சி' முதலியன நிறைந்துள்ளது. இக்கீரை பல பிணிகளுக்கு நல்ல மருந்தாகும். இதை உண்டால் சுரம், நடுக்கம், கபம், வாதநோய் இவைகள் நீங்கும்.

தாது விருத்தி உண்டாகும். இரத்த ஓட்டம் பெருகி, இரத்தச்சோகை நீங்கும். மேலும் இதன் விதையிலிருந்து தைலம் செய்து தலையில் தேய்த்துக் குளித்து வந்தால் தலைவலி நீங்கி தலைமயிர் கறுக்கும்.

**அகத்திக்கீரை:**

வாரம் ஒருமுறை உண்ண உடல் சூடு தணியும். கண்கள் குளிர்ச்சி பெறும். நீரடைப்பு, பித்த மயக்கம் நீங்கும். குடல் புண்களை ஆற்றும். வாய் துர்நாற்றத்தைப் போககும். வயிற்றிலுள்ள பூச்சிகளை அழிக்கும். அகத்திக்கீரை எல்லா மருந்துகளின் வீரியத்தையும் கெடுத்து விடும். எனவே மருந்துண்ணும் நாட்களில் அகத்திக் கீரை சேர்க்கக்கூடாது.

**கறிவேப்பிலை:**

இது ஒரு கீரையா என்கிறீர்களா? நிச்சயமாக, குணத்தை அறிந்தால் இலையிலிருந்து எடுத்து எறியமாட்டீர்கள். ஆம் கீரைகளிலேயே தலையாய குணமுடையது. தலைமுடி கொட்டுவதை நிறுத்தவும், மயிர்க்கால்களுக்கு உரமளிக்கவும் இதற்கு ஈடு எதுவும் இல்லை.

தமிழக மக்களின் சமையலில் கறிவேப்பிலை இடம் பெறாமல் இருக்காது. இரசம், சாம்பார், சட்னி எதிலும் வாசனைக்காக கறிவேப்பிலை இடம்பெறுகிறது. ஆனால் இதை ஒரு கீரையாக யாரும் நினைப்பதில்லை. கறிவேப்பிலையில் மற்ற எல்லாக் கீரைகளையும்விட அதிக அளவில் உயிர்ச் சத்து 'ஏ' உள்ளது. எனவே இதைப் பச்சையாக மிளகாய், புளி, உப்புடன் சேர்த்துத் துவையலாக அரைத்துச் சாப்பிட வேண்டும். இரும்புச்சத்து அதிகமாக உள்ளது. கண்பார்வைக்குச் சிறந்தது. பித்தம், ஜீரணம், இரத்தச்சோகைஇவற்றைப்போக்கும். இரைப்பைக்கு வலுவைக் கொடுக்கும்.

**கொத்தமல்லிக் கீரை:**

இதில் உயிர்ச் சத்து 'ஏ', 'சி', சுண்ணாம்புச் சத்து முதலியவை அதிகமாக உள்ளன. துவையலாக வைத்துச் சாப்பிடலாம். ரசம், சாம்பாரில் சேர்க்கலாம். கண் பார்வை வலுவடையும். மண்டையிலுள்ள சூடு தணியும், பித்தம் நீங்கும்.

**முருங்கைக்கீரை:**

இதில் உயிர்ச் சத்து 'ஏ', 'சி' மற்றும் இரும்புச் சத்தும் நிறைய உள்ளது. கண்பார்வைக்குச் சிறந்தது. சர்க்கரை வியாதிக்காரர் தினந்தோறும் உணவில்சேர்த்துக் கொள்ள, நோய் கட்டுப்படும். காச நோயாளிகளுக்கு மிகவும் நல்லது. முருங்கை இலைச்சாறு வயிற்று வலி போக்கும். இலைச் சாற்றுடன் சிறிது சுண்ணாம்பு, தேன் சேர்த்துக்குழைத்துதொண்டைக் குழியில் தடவ இருமல், குரல் கம்மல் நீங்கும்.

**தவசிக்கீரை:**

இதில் எல்லாவித உயிர்ச் சத்துக்களும் அடங்கியுள்ளது. எனவே இது 'மல்டிவைட்டமின்' கீரை என அழைக்கப்படுகிறது. இதன் இலையை நாள்தோறும் பச்சையாக உண்ணலாம். மற்றும் பொரியல், சாம்பார் செய்து சாப்பிடலாம். இலைகளை நறுக்கி வடையில் சேர்த்துத் தயாரித்து உண்ணலாம்.

**புதினா:**

புதினாவில் உயிர்ச் சத்து 'ஏ' சுண்ணாம்புச் சத்து, பாஸ்பரஸ், இரும்புச் சத்துக்கள் அதிகமாக உள்ளன. புதினாவை வதக்கி, நெய், உப்பு, புளி, மிளகாய் சேர்த்து அரைத்து துவையலாகச் சோற்றுடன் சேர்த்துண்ண நன்கு பசி எடுக்கும். இரத்தச் சுத்தி செய்யும். இரைப்பைக்குவலுவைக் கொடுக்கும். நல்ல மலம் வெளியேறும்.

நன்றி: வானொலி.



சமூக சேவை பயனுடையதாக இருக்க வேண்டுமானால் படாடோபமின்றிச் செய்யப்படல் வேண்டும். வலது கை செய்வதை இடது கை அறியாமல் செய்யும் பொழுதுதான் அது தலைசிறந்த சேவையாகும்.

எவ்வளவு தாழ்ந்ததாயினும் தான் செய்யக்கூடிய சேவையைச் செய்யாதிருத்தலும், எவ்வளவு உயர்ந்ததாயினும் பிறர் செய்யக் கூடிய சேவையைச் செய்யப் புகுதலும் தவறு.

# நூல் நயம்

நூல்நயம் பகுதிக்கு இரண்டு படிகள் அனுப்புதல் வேண்டும். அரசியல், சாதி, மதத் தொடர்பான நூல்கள் மதிப்புரை செய்யப்படுவதற்கில்லை.

—ஆசிரியர்.

## மகாத்மா காந்தியின் சுயசரிதை

தமிழாக்கம்: ரா. வேங்கட ராஜுலு

வெளியீடு: காந்திய இலக்கிய சங்கம், தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, மதுரை - 625 020.

விலை : ரூ. 20. பக் : 511

நம் நாட்டுத் தந்தையாக விளங்கிடும் அண்ணல் காந்தியடிகள், நம் நினைவுகளில் இன்றும் நிலைத்து நிற்கிறார் என்றால் அதற்கு மூலகாரணம், அவருடைய புனித வாழ்வே ஆகும். சத்தியம், அகிம்சை ஆகியவற்றை இரு கண்களாகக் கொண்டு வாழ்நாள் முழுவதும் அதில் இம்மியளவும் பிசகாது வாழ்ந்து காட்டியவர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, அண்ணல் காந்தியடிகள் நம் நாட்டு விடுதலைக்காகப் பாடு பட்ட வரலாறு பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கதாகும். அவரது வாழ்வும், விடுதலைப்போராட்ட நிகழ்ச்சிகளும் இந்நூலில் விளக்கப் பட்டுள்ளன.

அண்ணல் காந்தியடிகள், தம் வாழ்க்கையைப் பற்றி ஒளிவு மறைவு இல்லாமல் எழுதியிருப்பது அவரது உண்மையான வெள்ளை மனத்தைக் காட்டுகிறது. அவரது வாழ்க்கைக்கு வழி காட்டிய குஜராத்திப்பாடல் ஒன்று (பக்கம் : 33) நம் வாழ்க்கைக்கும் வழிகாட்டுவதாக உள்ளது. அந்தப் பாடலின் மையக் கருத்து: 'தீமை செய்தோருக்கும் நன்மையே செய்.'

காந்தியடிகள் கூச்ச சுபாவமுள்ளவர் என்றாலும், அதுவே அவருக்குப் பாதுகாப்பாக அமைந்தது (பக்: 59) என்பதை அப்பட்டமாகக் கூறியிருக்கிறார். அவரது எளிய வாழ்க்கையே அவர் ஏற்றத்துக்கு மற்றொரு காரணம் என்றும் கூறலாம். அது அவரது வாழ்க்கைக்குப் பெரும் மாற்றத்தை உண்டாக்கியிருக்கிறது (பக்: 213).

எல்லாவற்றுக்கும் மேலாக காந்தியடிகள் கடைப்பிடித்த கொள்கை, புலனடக்கம். அதில் அவர் உறுதியாக இருந்தார். அதை உளப்பூர்வமாக ஏற்று உண்மையாக வாழ்ந்தார் என்பதைப் படித்து உள்ளம் பிரமிக்கிறோம் (பக்: 332).

இவ்வாறு நூல் முழுதும் அவரது வாழ்க்கை ஏடுகளைப் புரட்டிக் கொண்டே போகலாம். 'சத்திய சோதனை' சத்திய வாழ்வுக்குநல்வழி காட்டும் நூல்.

பி. வி. கிரி

## பீர்பால் தந்திரக் கதைகள்

ஆசிரியர்: முல்லை முத்தையா

வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41, பி.சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-600 098

விலை: ரூ. 9.00 பக்கம்:108

நாடறிந்த பீர்பாலின் கதைகள் எழுபதைச் சுவை குன்றாமல் இளம் உள்ளங்களை ஈர்க்கும் வகையில் சிறப்பாகத்தொகுத்துத் தந்திருக்கின்றார் ஆசிரியர். கசப்பு மருந்தைத் தேனுடன் குழைத்துத் தருவதுபோல், நல்ல நீதிக்கருத்துக்களையும் சிறந்த அறிவுரைகளையும் கதைப்போக்கில் நகைச்சுவையுடன் கலந்து அளித்துக் கற்போரை மகிழ்வில் ஆழ்த்துகிறார் ஆசிரியர்.

பள்ளிக் குழந்தைகளும் பிறரும் விரும்பிப் படித்தற்குரிய நூல்.

## மனநோய் மருத்துவக் கதைகள்

ஆசிரியர்: டாக்டர் என். மாத்ருபூதம்,

வெளியீடு: குமரிப் பதிப்பகம், 20, பெருமாள் தெற்குவீதி, நாகப்பட்டினம்-611 010

விலை: ரூ.8.00 பக்கம்:107

மனநோயால் துன்புறுகின்றவர்களில் பெரும்பான்மையோர் இளம் வயதினரே; காரணம், அளவுக்கு அதிகமான கற்பனைகளும் எதிர்பார்ப்புகளும் தான். இவை நிறைவேறவில்லை என்றால் மனமுடைந்து மூளைக் கோளாறுகளுக்கு ஆளாகின்றனர்.

இக்கருத்தை விளக்கும் இந்நூல், நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. என்றோ-எங்கோ இளமையில் ஏற்படும் விருப்பு வெறுப்புகளை ஒட்டி மன நலம் கெடுகின்றது என்பதனை முதற் பகுதியில் அருமையாகச் சித்திரிக்கின்றார் டாக்டர் மாத்ருபூதம்.

தெளிந்த மனமும் உறுதி வாய்ந்த மனமும் உடையவர்கட்கு உள்ளமும் உடலும் பாதிக்கப்படுவதில்லை என்பதையும் இந்நூல் தெளிவுறுத்துகின்றது.

—டாக்டர்
சிவ அரசி முத்துக்காளத்தி

## செட்டி நாடு ஊரும் பேரும்

ஆசிரியர் : பழ. அண்ணாமலை

வெளியீடு: எம். எம். முத்தையா ஆய்வுத் தளம். 16, ராமசாமி தெரு, சென்னை-600 001.

விலை : ரூ. 14. பக் : 144.

நாட்டுக்கோட்டை நகரத்தார் வாழும் செட்டிநாட்டுப் பகுதியில் உள்ள ஊர்களின் பெயர்கள் எவ்வாறு அமைந்தன என்பதை ஆய்வு மனப்பான்மையில் இந்நூல் எடுத்துச் சொல்கிறது. பொதுவாக, ஆய்வு என்றாலே அதற்குத் தனிச் சுவை உண்டு. அதிலும் ஊரின் பெயர்களை ஆய்வு செய்யும்போது அச்சுவை அதிகமாகிறது. புராணக்கதைகள் வரலாற்றுக் கதைகள் - அரிய செய்திகள் ஆகியவற்றை இந்த ஆய்வு நூலின் வாயிலாக நாம் அறிந்து கொள்ள முடிகிறது. நூலாசிரியரின் கடும் உழைப்பு தெள்ளத் தெளிவாக விளங்குகிறது. செட்டிநாட்டுத் தாலாட்டுகளும் - வழக்குச் சொற்களும் மற்றும் பல இணைப்புச் செய்திகளும் நூலுக்குச் சிறப்பம்சங்களாக விளங்குகின்றன.

## பாண்டியன் மகுடம்

ஆசிரியர் : ஆர். சி. தமிழன்பன்

வெளியீடு: கோமதி பதிப்பகம். 247, அவ்வை சண்முகம் சாலை. சென்னை - 600 086.

விலை : ரூ. 15. பக் : 144.

குலசேகரபாண்டியன் - பராக்ரம பாண்டியன் இருவருக்குள் ஏற்பட்ட பிணக்கை நீக்கும் முயற்சியில் ஈடுபடுகிறான், அவர்களிடம் தளபதியாகப் பணியாற்றிய வேங்கைமார்பன். இந்த வரலாற்றுச் செய்தியை நாடகமாக்கியுள்ள நூலாசிரியர் கதையம்சத்தில் பல்வேறு சிக்கல்களையும் திருப்பங்களையும் புகுத்தி, நாடகத்திற்கு விறுவிறுப்புச் சேர்த்துள்ளார். அக்கிரமக்காரன் முடிவில் அழிந்து போவான் என்ற தத்துவம் நிலை நாட்டப்பட்டுள்ளது. நாகமாலினியின் பாத்திரம் மறக்க முடியாதது. நடிப்பதற்கும் படிப்பதற்கும் ஏற்ற முறையில் இந்நாடகம் அமைக்கப் பெற்றிருப்பது இதன் சிறப்பம்சமாகும். உரையாடல்களில் உள்ள செறிவும் வலிவும் படிப்போரைப் பரவசப்படுத்துகின்றன.

—தமிழ்ப்பித்தன்

## அறிவியல் முத்துக்கள்

ஆசிரியர் : தஸ்தகீர் சலாவுத்தீன்

வெளியீடு:

தமிழ்க்கடல் பதிப்பகம், ஐ. 19 டர்ன்புல்ஸ் சாலை, முதலாவது குறுக்குத் தெரு, நந்தனம், சென்னை-600 035.

பக் : 164. விலை ரூ.12.50

'அறிவியல் முத்துக்கள்' என்கிற பிரதானத் தலைப்போடும், 'ஏன், என்ன, எப்படி?' என்கிற உபதலைப்போடும் வெளியிடப்பட்டுள்ள இந்த நூல் 60-க்கு மேலான சிறுசிறு ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுப்பு நூலாகும். அத்தனையும் அறிவியல் தொடர்புடையவை.

ஹார்மோன், குருதி, தமனி, தந்துகி, நாடித் துடிப்பு, இதயம், பிளாஸ்மா, அதிர்ச்சி போன்ற உடலியல் பற்றி மட்டுமல்ல; நீர்த்துப்பாக்கி, ஜெராக்ஸ், ராட்சசர், பனிக்கட்டி, 24 காரட், துருவங்கள், மின்விளக்கு போன்ற பல்வேறு தலைப்பின் கீழான செய்திகளும் ஆராய்ந்து தேவையான விவரங்களோடு இந்நூலில் அளவோடு தரப்பட்டிருக்கின்றன.

அறிவியல் கல்வி அவசியம் எனப் பேசப்படும் இந்த நாளில், மாணவருலகுக்கு மிகவும் ஏற்ற நூல் இது.

—பி. எல். ஆர்.

## கவின் கலைகள்

ஆசிரியர் : டாக்டர் சோ. சேசாசலம்




வெளியீடு: சி. 413, 4-வது தெரு, சந்திரசேகரன்சாலை பெரியார் நகர், சென்னை - 600 008

விலை : ரூ. 8. பக் : 66.

இந்நூலில் உள்ள கட்டுரைகள் பற்பல கலைகளின் சிறப்பம்சங்களை எடுத்துச் சொல்கின்றன. கேரள நாட்டின் நடனக்கலை, பத்திரிகைக் கலை ஆகிய கட்டுரைகள் பாராட்டுக்கு உரியன. ஹரிகதா காலட்சேபக் கலை குறித்த கட்டுரை அற்புதம். இந்தக் கலையின் இலக்கணம் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அட்டைப் படத்தில் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம்.

—எம். எஸ். சுந்தரம்

## பிளவை நோயும் மருந்தும்

ஆசிரியர் : டாக்டர். சி. சிதம்பரதாணுப்பிள்ளை.

வெளியீடு: சித்த மருத்துவ நூல் ஆராய்ச்சி நிலையம், இ-32 அண்ணாநகர் (கிழக்கு) சென்னை - 600 102

பக். :116. விலை ரூ. 15.

தமிழ் மருத்துவமாம் சித்த மருத்துவம் தனிப் பெருமை உடையதாகும். புதியவைகளின் மீதான மோகம் மிகுந்து விட்ட இந்நாளில், பழமை வைத்தியமான அம்முறை பற்றி அனைவரும் விரும்பும் வகையில் பல நூற்களை எழுதிப் பண்பட்டவர் நூலாசிரியர். 'பிளவை நோயும் மருந்தும்' என்கிற இந்நூல் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை நிதி உதவியோடு வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்த நூலில் ஏறத்தாழ ஐம்பது வகைப்பட்ட பிளவை நோய்கள் பற்றிய விளக்கம்— அவற்றால் உண்டாகும் உபாதைகள் - அவைகளுக்கான சித்த வைத்திய சிகிச்சை முறை, மருந்துகள் ஆகியவை நுணுக்கமாக ஆராய்ந்து தெரிவிக்கப்பட்டுள்ளன.

நோயுற்றோர் மட்டுமல்ல; மருத்துவத் துறையிலிருப்பாரும் படித்துப் பயன்பெற வேண்டிய நூலாகும் இது.

—ஆர். செல்வி

# வளமான வாழ்வுக்கு
# வழிகாட்டும் வங்கி



வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி!
தாய்மையின் தனிப்பரிவுடன் உங்கள் சேமிப்பு
எங்களிடம் பூரிப்புடன் வளர்கிறது!

உங்களது அனைத்து சேமிப்புகளுக்கும் ½%
கூடுதல் வட்டியும் கிடைக்கிறது.

மக்களுக்கேற்ற வங்கி—
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி.

TNSC BANK

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001

TNSC—*வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*

TNSC/BANK/166

# மகளிர் வாழ்வில் மறுமலர்ச்சி!



சமுதாயத்தின் கரங்களால் உதறி விடப்பட்டவர்கள்—

சந்தர்ப்ப சூழ்நிலை காரண மாகக் குற்றவாளியாக்கப்பட்ட வர்கள்—

வரதட்சிணைக் கொடுமையால் வதைக்கப்பட்டவர்கள்—

கணவனால் கைவிடப்பட்டவர் கள்—

இவர்களெல்லாம் எங்கே யோவார்கள்? இவர்களுக்கு யார் ஆதரவு? இவாகளின் எதிர்காலம் எப்படி?

இந்த வினாக்களுக்கெல்லாம் விடையாக, விளக்கமாக விளங்கு வதுதான் சென்னை மயிலையில் உள்ள அரசினர் மகளிர் காப்பகம்.

இம்மகளிர் காப்பகம், 1930ஆம் பரத்த ஆண்டு தமிழ்நாடு மைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் துவங்கப்பெற்று, சென்னை விழிப் புக்கழகத்தின்கீழ் இயங்கி வந்தது. பிறகு 1948இல் தமிழக அரசு இவ்வில்லத்தினைத் தன் பொறுப் பில் ஏற்று நடத்தி வருகிறது.

விபச்சாரத்தால் பாதிக்கப் பட்ட பெண்களைச் சமூகம் இரக்கமற்ற பார்வையில் நோக்கு வதால் தீயசக்திகள் தங்கள் சுய நலத்திற்காக, ஆதரவற்ற பெண் களிடம் போலியான ஆசைகளைக் காட்டி அவர்களதுஎதிர்காலத்தை இருட்டடித்து விடுகின்றது.

இம்மகளிர் காப்பத்திற்கு நீதி மனறம் மூலம் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அனுப் பப்படும் மகளிர் மற்றும் அந்தத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வருபவ வர்களின் வழக்கு முடியும் வரை தங்கியிருக்க அனுப்பப்படும் விசாரணைக்குட்பட்ட இல்ல வாசிகள் ஆகியோர் அனுமதிக்கப் படுகின்றனர்.

ஒழுக்கக் கண்காணிப்புத்துறை இயக்குநரின் அனுமதி பெற்று தான் விரும்பிச் சேர்ந்த இல்ல வாசிகளும், காவல் துறையின ரால் கைப்பற்றப்பட்டு அனுப்பப் படும் சமூக விரோதிகளால் கடத் தப்பட்ட பெண்களும் நீதிமன்றத் தாரால் வரும் சான்றிட்டவர் களும் விபச்சார விடுதிகள் மற்றும் இல்லங்களிலிருந்து மீட்கப்பட்ட வர்களும், 'ஸ்திரிசதனா' என்ற மீட்புப் பயிற்சி நிலையத்தில் அனு மதிக்கப்படுகின்றனர்.

மகளிர் காப்பகம் மற்றும் 'ஸ்திரிசதனா' என்ற இவ்விரு நிலையங்களைத் தவிர கன்னித் தாய்மார்கள் இல்லும் ஒன்றும் இயங்கி வருகிறது. இந்த இல்லத் தில் மேற்கண்ட இரு இல்லங் களில் சேர்க்கப்படும இல்லவாசி கள் முறை தவறிய கர்ப்பிணி யாகக்கண்டறியப்பட்டாலும்,திரு மணமாகாது, முறை தவறி கர்ப் பிணிகளாக்கப்பட்ட அநாதைப் பெண்கள் ஆகியோர் இத்துறை இயக்குநரின் அனுமதியுடன் கன் னித்தாய் இல்லததில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

---

**பி. என். ரமாதேவி**
**கண்காணிப்பாளர்,**
**அரசினர் மகளிர் காப்பகம்,**
**சென்னை.**

1985ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இவ்விழிப்புப் பணி இல்லத்தில் 102 இல்லவாசிகளும், 2 குழந்தைகளும் இருந்தனர். மேலும் இவ்வாண்டில் 48 இல்லவாசிகளும் ஒரு குழந்தையும் சேர்க்கப்பட்டனர். இதே ஆண்டில் பயிற்சி முடிந்த 54 இல்லவாசிகளும் ஒரு மாணவியும் நீக்கம் செய்யப்பட்டனர். ஆண்டு முடிவில் 96 இல்லவாசிகளும் 2 குழந்தைகளும் உள்ளனர்.

ஸ்திரி சதனா இல்லத்தில் ஆண்டுத் தொடக்கத்தில் 56 இல்லவாசிகள் இருந்தனர். நடப்பு ஆண்டில் 67 இல்லவாசிகள் சேர்க்கப்பட்டனர். இவ்வாண்டில் இல்ல நீக்கம் செய்யப்பட்ட இல்லவாசிகள் 62 பேர் ஆகும். ஆண்டு இறுதியில் 61 இல்லவாசிகள் உள்ளனர்.

ஆண்டுத் துவக்கத்தில் 31 விசாரணைக் குற்றவாளிகள் இருந்தனர். 1985-86ஆம் ஆண்டில் 941 விசாரணைக்குட்பட்ட இல்லவாசிகளும், 4 குழந்தைகளும் நீதிமன்றத்தின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர். இதில் இல்ல நீக்கம் செய்யப்பட்டவர்கள் 940 பேர் இல்லவாசிகள் 2 குழந்தைகள் ஆண்டு இறுதியில் விசாரணைக்குட்பட்ட இல்லவாசிகள் 32 பேர்களும் 2 குழந்தைகளும் ஆகும்.

இவ்வில்லத்திலேயோ அல்லது இந்நகரத்திலுள்ள வேறு நிறுவனங்களில் பணிபுரியும் முன்னாள் இல்லவாசிகளை (பெற்றோர் ஆதரவு இல்லாதவர்கள்) ரூ.60 பராமரிப்புத் தொகையாகப்பெற்று பிற்காப்பு இல்லத்தில் (தங்கும் விடுதி) அனுமதிக்கப்படுகிறார்கள். தற்போது ஒரு பெண் தங்கி வருகிறாள்.

இல்லவாசிகளுக்குச் சத்துள்ள உணவு வகையறாக்கள் அரசு நிர்ணயித்துள்ள அளவின்படி தூய்மையாகவும், சுவையாகவும் தயாரிக்கப்பட்டு அதிகாரிகளால் சுவைத்துப் பார்க்கப்பட்ட பின்னரே இவ்வில்லவாசிகளுக்கு வழங்கப்படுகிறது. பண்டிகை நாட்களில் அவர்களுக்குச் சிறப்புணவும் உணவைப் போலவே உடைகளும் அரசு நிர்ணயித்தபடியே ஆண்டிற்கு 4 இணை கதர், கைத்தறி உடைகள் இவ்வில்லத்திலேயே தைக்கப்பெற்று விநியோகிக்கப்படுகின்றன.

இத்தகு இல்லத்தில் ஒரு மருத்துவமனை உள்ளது. இல்லவாசிகள் உடல்நிலை இத்துறை மருத்துவரால் பரிசோதனை செய்யப்பட்டு அவரது ஆலோசனையின்படி நகர மருத்துவமனைக்கு அனுப்பப்படுகின்றனர். உடல் பலவீனமான நிலையிலுள்ள இவ்வில்லவாசிகளுக்கு மருத்துவரின அறிவுரையின்படி சிறப்புணவாகப் பால், முட்டை முதலியன சேர்த்து வழங்கப்படுகிறது. இல்லவாசிகளுக்கு நல்லமுறையில் மருத்துவ வசதிகள் செய்து தரப்படுகின்றன.

இந்நிலையத்திலுள்ள இல்லவாசிகள் கல்வி அறிவு பெறுவதற்காக ஒரு நடுநிலைப்பள்ளி இங்கு செயலபட்டு வருகிறது. இது கல்வித்துறையினரால் ஓர் வமசடப்பள்ளியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இயங்கி வருகிறது. இப்பள்ளி ஒவ்வொரு ஆண்டும் மாநிலப்பள்ளி மகளிர் ஆய்வாளரால் தணிக்கை செய்யப்படுகிறது. பள்ளியில் 1 முதல் 8 வரை வகுப்புகள் உள்ளன. எட்டாம் வகுப்புத் தேர்ச்சி பெறும் இல்லவாசிகள், மேலும் படிக்க ஆர்வம் உள்ளவரெனில் மேற்கொண்டு படிப்பதற்கும் இந்நிறுவனம் வேண்டிய உதவிகளைச் செய்துவருகிறது. இம்முறையில் சென்ற ஆண்டு 10ஆம் வகுப்பில் 3 மாணவிகளும், 9ஆம் வகுப்பில் ஒரு மாணவியும் புனித ரபேல் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் படித்துத் தேர்வு பெற்றுள்ளனர்.

மேல்படிப்பில் ஆர்வம் இல்லாதவர்களும் இவ்வில்லத்தில் குறைந்த ஆண்டுகளே இருக்க வேண்டியவர்களுமான இல்லவாசிகளின் எதிர்காலம் பயனுள்ள வகையில் அமைய பாய்நெசவு, பூத்தையல், தையல், நெசவு முதலிய கைத்தொழில்களில் அந்தந்தக் கைத் தொழிலில் சிறப்பான அனுபவம் பெற்றுள்ள ஆசிரியைகளைக் கொண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆர்வமும் திறமையும் உள்ள மாணவிகளுக்கு அரசு நடத்தும் தொழில் நுட்பத் தேர்வுகளில் கலந்து கொள்ள வாய்ப்பும் ஏற்படுத்தித் தருகின்றது. மேலும் தொழில் பயிற்சி அளிக்கும் பொழுதே அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு ஏற்ப வெளியில் இருந்து இவ்வில்லத்திற்கு வரும் துணிகளைத் தைத்துக் கொடுத்தல், புடவைகளுக்குச் சித்திரத்தையல் தைத்தல், தங்கள் உடைகளைத் தாங்களே தைத்தல் போன்றவைகளை ஆசிரியையின் மேற்பார்வையில் இவ்வில்லவாசிகளைச் செய்யவைத்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயில் அவர்களை ஊக்குவிக்க 50 (சதவிதம்) இல்லவாசிகளுக்கும், மீதி அரசுக் கணக்கில் செலுத்தப்படுகிறது.

இல்லவாசிகள் படிப்பில் முன்னேறி, மேலும் வேலைவாய்ப்புகள் பெற, அவர்கள் தங்கும் குறுகியகாலத்தில் ஏற்பாடு செய்ய மிகவும் சிரமமானதாகும். ஆகையால் படிப்பில் ஆர்வம் இல்லாதவர்கள், முதியோர்கள் போன்ற பெண்களைத் தொழிலில் ஈடுபடுத்தி வருங்காலத்தில் வேலைவாய்ப்பு அளிக்கவும் வசதியாக ஒரு மின்சலவையகம் ரூ.5.5 இலட்சத்தில் 4.2.87 அன்று மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராஜன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தச் சலவையகத்தில் பயிற்சி பெற்று மேலும் மறுவாழ்வு அடைய மாணவிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

## திருக்கோயில் திருப்பணிகள்

திருநெல்வேலி இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் 1706 கோயில்கள் உள்ளன. ரூ. 10 ஆயிரத்திற்கும் கீழ் வருமானம் உள்ள கோவில்கள் 1574. ரூ. 10 ஆயிரத்திற்கு மேல் வருமானம் உள்ள கோவில்கள் 132. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டத்தில் உள்ள திருக்கோயில்களில் திருப்பணி வேலைகள் மற்றும் கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

தென்காசி அருள்மிகு காசி விசுவநாதர் திருக்கோயில் திருப்பணி வேலைகள் ரூ. 90 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வருகின்றன. இத்திருப்பணி வேலைகள் தவிர நலிவடைந்த திருக்கோயில்களின் திருப்பணிகளுக்காகக் கோவில் ஒன்றுக்கு ரூ.10 ஆயிரம் வீதம் 16 கோவில்களுக்கு ரூ. 1,60,000 வழங்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

ஒரு கால பூசை கூட நடத்த இயலாத கோயில்களுக்குப் பூசை நடத்துவதற்கு "ஆலய மேம்பாட்டுத் திட்டம்" ஒன்று ஏற்படுத்தி இந்த இரு மாவட்டங்களில் 220 கோயில்களுக்கு ரூ. 5000 வீதம் ரூ. 11 இலட்சம் ஒதுக்கப்பட்டு பூசைகள் நடைபெற்று வருகின்றன.



# வளர்ச்சிப் பாதையில் தென்னார்க்காடு மாவட்டம்

தென்னார்க்காடு மாவட்டத்தின் தலைமையகமாக விளங்கும் கடலூர், சென்னையிலிருந்து தெற்கே 200 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள சிறப்பான நகரமாகும். இம்மாவட்டத்தின் மக்கள் தொகை சுமார் 42 இலட்சமாகும். இதில் 21 இலட்சம் பேர் ஆண்கள். 20 இலட்சம் பேர் பெண்களாவர். பின்தங்கிய வகுப்பினர் சுமார் 11 இலட்சம் பேர்களும், மலை ஜாதியினர் சுமார் 54 ஆயிரம் பேர்களும் உள்ளனர்.

இம்மாவட்டத்தில் 13 தாலுக்காக்களும், 34 ஊராட்சி ஒன்றியமும், வெள்ளிமலை என்ற மலை வாழ் மக்கள் மேம்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்ட ஊராட்சி ஒன்றியமும் உள்ளன. கிராமங்கள் மொத்தம் 1,721 ஆகும். வெள்ளிமலை ஊராட்சி ஒன்றியத்தில் 161 கிராமங்கள்உள்ளன.

நகராட்சிகள் இம்மாவட்டத்தில் ஏழு உள்ளன. அவை கடலூர் நெல்லிக்குப்பம், பண்ருட்டி, விழுப்புரம், திண்டிவனம், விருத்தாசலம்,சிதம்பரம் ஆகியவை, நகரியம் ஒன்று - அண்ணாமலை நகர்.

இம்மாவட்டம் பூகோள ரீதியாக 10,89,984 ஹெக்டேர் பரப்பளவில் விரிந்து காணப்படுகிறது. பெரும் தொழிற்சாலைகள் 35 உள்ளன. மாவட்டத்தின் மொத்த கடற்கரை நீளம் 89 கிலோ மீட்டராகும். இக்கடற்கரை பகுதி மீன் வளங்களை ஆதாரமாகக் கொண்டு, தொழில்கள் இயங்கி வர உகந்ததாக காணப்படுகிறது.

**இம்மாவட்டத்தின் தொழில்கள் :**

இம்மாவட்டத் தொழில்மையம், மாவட்டத்திற்கு உகந்த தொழிலகங்களுக்கு பிரத்தியேகமாக திட்டங்கள் தீட்டி, அவைகள் வேலைவாய்ப்பு வசதிகள் உண்டாக்க செயல்படுகிறது. வேலை இல்லாத படித்த மற்றும்தொழில் நுணுக்கங்களில் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு மாண்புமிகு பிரதமரின் சுயவேலைவாய்ப்புத் திட்டம் ஒரு சிறப்பு வாய்ப்பை அளிக்கிறது. தென்னார்க்காடு மாவட்டத்தைப்பொறுத்தவரை தொழில் முன்னேற்ற கண்ணோட்டத்தில் சுமார் 13,000 எக்டேர் பரப்புடன் 13 தாலுக்காக்களை கொண்டு இயங்கி வருகிறது.

மாவட்டத்தில் முக்கியவளங்கள் பயிர்முறையில் நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, பருப்பு, மிளகாய், மஞ்சள், கரும்பு, எண்ணெய்வித்துக்கள், பருத்தி, புகையிலை, வாழை, பலா, முந்திரி, தென்னை, கிழங்குகள், வன வளத்தில் கடுக்காய், மற்றும் காட்டு மரங்கள், கனி வளத்தில் கருங்கல், வெள்ளைக்கல், நாகம், ஈயம், பழுப்பு நிலக்கரி, சுண்ணாம்புக்கல், குறைந்த அளவில் இரும்புத்தாது, கடல் கிளிஞ்சல்கள், சிலிகாமண்,இவைகளை ஆதாரமாகக்கொண்டு சுமார் 30 கனரக தொழில்கள், உணவு, பீங்கான், நூற்புஆலை, இரசாயனம், சாயக் கலர்கள், மிட்டாய்கள், சர்க்கரை பிஸ்கட் கடலை எண்ணெய், உரங்கள், அச்சிடும் காகிதங்கள் ஆகியவை போன்ற தொழிலகங்கள் இயங்கி வருகின்றன.

3590 சிறு தொழில்களும், 4655 கைவினைத் தொழில்களும் உணவு, பருத்தி, மரம், பட்டு, காகிதம், தோல், கயிறு, ரப்பர், இரசாயனம், களிமண், இரும்பு, எஃகு இவைகளை ஆதாரமாகக் கொண்டு இயங்கி வருகின்றன.

**கலை இலக்கியம்:**

இலக்கிய அடிப்படையில் இம்மாவட்டத்தை நோக்கினால் சங்க காலம் தொட்டே சிறப்புப் பெற்றிருப்பதைக் காணலாம். புறநானூறு,அகநானூறு போன்ற சங்க நூல்களில் இம்மாவட்டச் செய்திகள் குறிப்பிடப்பட்டுள்




ளன. தேவாரம் பாடிய மூவருள்
திருநாவுக்கரசரும், சுந்தரரும்
இம்மாவட்டத்தைச் சார்ந்தவர்
களே. திருத்தொண்டர்புராணம்
என்னும் பெரிய புராணம்பாடப்
பெற்றதும், அரங்கேற்றப் பெற்ற
தும் இம்மாவட்டத்தைச்சார்ந்த
சிதம்பரத்திலேயே ஆகும். சிவ
ஞான போதம், முதலிய சைவ
சமய நூல்களை இயற்றியவர்கள்
இம்மாவட்டத்தைச் சார்ந்த
வர்களே. திருவருட்பா இயற்றிய
வள்ளலார் இம்மாவட்டத்தவர்.
உரைநடை நூல்கள் பல செய்த
யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர்
இருந்த இடம் சிதம்பரமேஆகும்.
பிற்காலத்தில் பல கவிஞர்கள்
இங்குத் தோன்றிப்பல நூல்
களைச் செய்து மாவட்டத்துக்கு
அணிசேர்த்துள்ளனர்.

**சுற்றுலா இடங்கள்:**

தென்னார்க்காடு மாவட்டம்
வானுயர்ந்த மலைப்பகுதியை
யும், தங்கமணற்பரப்பினைக்
கொண்ட கடற்கரைப் பகுதியை
யும், புன்னை மரக்காடுகள்
நிறைந்த சதுப்பு நிலத்தினையும்
நாட்டிய உலகிற்கே பிறப்பிட
மாக விளங்கும் தில்லை நடராசர்
ஆலயத்தையும், அருள்நெறி
போதித்த வள்ளலாரின் நினை
வாக விளங்கும் சத்திய ஞான
சபையையும், நவீன இந்தியாவின்
பொருளாதாரச் சாதனையாக
விளங்கும் நெய்வேலி பழுப்பு
நிலக்கரி தொழிற்கூடத்தையும்,
வீர வரலாறு படைத்த செஞ்சிக்
கோட்டையையும், இந்துயா
விலேயே அரிதாகக் காணக்கூடிய
திருவக்கரை கல்மரத்தினையும்,
பிச்சாவரம் சதுப்பு நிலக்காடு
களையும் உடைய சுற்றுலாக்
கூறுகளை தன்னகத்தே பெற்ற
சிறப்புமிகு மாவட்டமாகும்.

இயற்கையன்னையின் எழில்
மகளாக விளங்கும் பிசசா
வரத்தினை ஒரு சிறப்பு வாய்ந்த
சுறறுலா மையமாக வளர்ச்சி
யடையச் செய்வதற்காக பெருந்
திட்டம் தயாரிப்பதற்காக உயர்
நிலை அலுவலர்களின் கூட்டம்
கடந்த 23-11-86-நாள் மாண்பு
மிகு சுற்றுலாத் துறை அமைச்சர்
திரு வி.வ்.சுவாமிநாதன்அவர்கள்
தலைமையில் நடைபெற்றது.
பிச்சாவரத்திற்கு வரும் பயணி
களின் தேவைக்காக ஒரு பார்வை
யாளர் கோபுரம், படகுவீடு,
சிறுவர்பூங்கா, புதுவிதப்படகுகள்
முழுக்குத்துறையில் படகுகுழாம்
போன்றவை அமைக்க அரசு
அனுமதித்துள்ளது.

**சிறப்பு வாய்ந்த திருத்தலங்கள்:**

இறைவழிபாட்டில் ஏற்றம்
மிககது இம்மாவட்டம். சைவம்,
வைணவம் ஆகிய இருபெரும்
சமயங்களுக்கும் சிறந்த திருத்
தலங்கள் பல இம்மாவட்டத்துல்
உள்ளன. சைவ சமயத்தின் முழு
முதல்வனாகிய சிவபெருமானும்,
வைணவத் தெய்வமாகிய
திருமாலும் ஒரு சேரக் காட்சி
தரும் இடம் தில்லைத் திருத்தல
மாகும். எனினும் ஆடல் வல்லா
னாகிய நடராசன் ஆனந்தத்
தாண்டவம் புரியும் இடம்தில்லை
எனும் சிதம்பரமாகும். சிதம்பரத்
துககு அருகில் உள்ள திருநாறை
யூரில் பொல்லாப் பிள்ளையார்
ஆலயம் சிறப்புப் பெற்றதாகும்.
மற்றும் பெண்ணாகடம், பழ
மலைநாதர் அருள் வழங்கும்
விருத்தாசலம், திருவதிகை,
திருநாவலூர், திருப்பாதிரிப்
புலியூர், திருவெண்ணெய் நல்
லூர், திருவாமூர், ஆகிய ஊர்கள்
சிவம் பெருக்கும் ஆலயங்கள்
விளங்கும் திருத்தலங்களாகும்.
திருக்கோயிலூர், திருவ மிந்தி
புரம், திருமுட்டம் ஆகிய திருத்
தலங்கள் வைணவத் திருத்கோயில்
களாகும். மைலம் குன்றுதோ
றாடும் முருகன் கோயில் கொண்
டுள்ள திருத்தலமாகும். வாடிய
பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடிய வள்ளல் பெருமாள்கண்ட
இடங்கள் பார்வதிபுரமென்னும்
வட லூர் மேட்டுக்குப்பம்ஆகியவை
களாகும். இவ்வாறு நாயன்மார்



களும், ஆழ்வார்களும் பிறந்தும், பாடியும் சிறப்பித்துள்ள திருத் தலங்கள் பல விளங்கிச் சிறப்புச் செய்துள்ள மாவட்டம் தென்னார்க்காடு மாவட்டம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**மலை வாசஸ்தலம்:**

இம்மாவட்டத்தில் அமைந்துள்ள கல்வராயன் மலையை, ஊட்டி கோடைக்கானல் போன்ற மலைவாசஸ்தலத்திற்கு ஒப்பிடலாம். இம்மலைப்பகுதி ஏறத்தாழ 600 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும். இம்மலை கடல் மட்டத்திலிருந்து 1,000 முதல் 3,500 அடி உயரம் வரை விரிந்து பரந்து காணப்படுகிறது. மணிமுத்தாறு, கோமுகி, மாயூரா, பாப்பக்கால் ஓடை முதலிய நதிகள் இம்மலையில் உற்பத்தியாகின்றன. மேக நீர் வீழ்ச்சியும், வனப் பகுதியும், பார்ப்போர்க்கு கண் கொள்ளாக் காட்சிகள். சந்தனம், மா, பலா, வாழை, கடுக்காய், தேக்கு, கருவேப்பிலை முதலிய மரங்கள் அதிகஅளவில் காணப்படுகின்றன. இங்கு வாழும் மலைச்சாதி மக்கட்கு அரசு எல்லாவித மேம்பாட்டுத் திட்டங்களையும் செயலாற்றி வருகிறது.

இம்மலையை சுற்றுலா சிறப்பு வாய்ந்த இடமாக்க அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

இம்மாவட்டத்தில் தோன்றிய சமயச் சான்றோர்கள் பலராவர் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சைவ சமய குரவர்கள் நால்வரில் இருவராகிய திருநாவுக்கரசரும், சுந்தரரும் ஆவார்கள். திருநாவுக்கரசர் திருவாமூரிலும் சுந்தரர் திருநாவலூரிலும்தோன்யவர்கள். திருநாவுக்கரசரின் தமக்கையார் திலகவதியாரும் திருவாமூரில் பிறந்தவரே.

சைவ சமயத்தின் சாரமாக விளங்கும் நூலைச் செய்த மெய்கண்ட தேவர் பெண்ணாகடத்தில் தோன்றியவர். அருணந்தி சிவாச்சாரியார் திருத்துறையூர் என்னுமிடத்தில் தோன்றியவர். வைணவ நூல்கள் செய்த வேதாந்த தேசிகர் திருவமிந்திபுரத்தில் தோன்றியவர். இவர்கள் அனைவரும் சைவ, வைணவ சமய வழிகாட்டிகளாவர்.

1823-ல் மருதூரில் தோன்றிய வள்ளலார் வடலூரில் சத்திய ஞான சபை தோற்றுவித்து எம்மதமும் சம்மதம் என்னும் கொள்கையைப் பரவச் செய்தார். இவர் 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய சமய மறுமலர்ச்சிச் சிந்தனையாளராகப் புகழப்படுகிறார். கடலூர் திருப்பாதிரிப் புலியூரில் வாழ்ந்த ஞானியாரடிகள் தமிழ்க்கடல் என்று போற்றப்பட்டவர். இவரால் தோற்றுவிக்கப்பட்ட ஞானியார் மடாலயம் ஒன்று இங்கு உள்ளது.



பிற்கால இலக்கிய சிந்தனையாளர்கள் எனறு எடுத்துக்கொண்டால் இம்மாவட்டத்துன் மையத்தில் ஒரு தீவு போல அமைந்துள்ள புதுவையில் கவிஞர்களை குறிப்பிட வேண்டும். பாரதியும் பாரதிதாசனும் படைத்த கவிதைகளின் சாயல் இம்மாவட்டத்தில் எங்கும் காணலாம். மதன்னார்க்காடு மாவட்டத் தமிழ்க் கவிஞர் மன்றம் ஒன்று இங்கு உள்ளது. இந்த பகுதியில் திருப் பாதிரிப்புலியூருக்கு அருகிலுளள வண்டிப்பாளையத்தைச் சேர்ந்த முதுபுலவர் நடேசமுதலியார், தறபோது புதுவையில் வாழ்ந்து வரும் தமிழறிஞர் சுந்தர சணமுகனார் குறிப்பிடத்தக்கவர்கள். சுந்தரசண்முகனார் எழுதியுள்ள 'கடிலக்கரை நாகரிகம்' என்ற ஆய்வு நூல் இம்மாவட்டத்தைப் பற்றிய பல அரிய செய்திகளைத் தாங்கிய ஆய்வு நூலாகும்.

வரலாற்று அடிப்படையில் நோக்கினால் பண்டைக் காலத்தில் சிறந்து விளங்கிய இடம் திருக்கோயிலூர். இங்கு ஒரு காலத்தில் இம்மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளைக் கொண்ட நடுநாடு - சேதிநாடு- விளங்கியது. மலையமான் திருமுடிக்காரியும், மெய்ப் பொருள் வேந்தனும் திருக்கோயிலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். பிற்காலத்தில் நவாபுகள், நாயக்கர்கள், காடவர்கள் முதலியவர்கள் ஆண்டுள்ளனர்.

இம்மாவட்டத்திலுள்ளசெஞ்சி பல போர்களைக் கண்ட இடமாகும்.

தற்போது இம்மாவட்டத்தின் தலைநகரமாக விளங்கும்கடலூர் அதற்கு அருகில் உள்ள பரங்கிப்பேட்டை ஆங்கிலேயர் காலத்தில் சிறந்து விளங்கிய இடமாகும். ஆங்கிலப் பிரதிநிதியாகிய ராபர்ட் கிளைவ் இருந்து ஆட்சி செய்த இடம் கடலூர். அக்காலத்தில் கோட்டை, அகழி என் விளங்கிய செயிண்ட்ஜார்ஜ் கோட்டை இப்போது அழிந்து காணப்படுகிறது. அடிக்கடி பிரெஞ்சு பகுதியிலிருந்து டூப்ளே சண்டை செய்ததால் ஆங்கிலேயர்கள் தங்கள் தலைநகரை சென்னைக்கு மாற்றினர். இல்லையேல் இம்மாவட்டமே பெரிய தலைநகராக விளங்கி இம்மாநிலத்திற்கு மத்தியில் எழிலோடு விளங்கியிருக்கும்! இன்னும் இத்தகைய பழம் பெருமைக்குச் சான்றாக கோட்டை, கட்டிடங்கள், அகழி, ஆகியவற்றைக் காணலாம். இங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் டெல்லி செங்கோட்டைபோல சிறந்துதோற்றமளிக்ககாணலாம்.

எனவே இம்மாவட்டத்தின் சுற்றுலா இடமும், திருக்கோயில்களும், சமயச் சான்றோர்கள் ஆற்றிய பணிகளும் இம்மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கிறது. தொழிற்துறையிலும் இம்மாவட்டம் முன்னேற்றம் அடைந்து வருகிறது. இம்மாவட்டத்தில் அமைந்துள்ள, உலகத்திலேயே அரிதாக காணப்படும் பிச்சாவரம் வனப்பகுதி, வெளிநாட்டவரை கவர்ந்து, அந்நிய செலாவணியை ஈட்டித்தந்து இம்மாவட்டத்தின் மேம்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் முக்கிய பங்காற்றும் என்பதில் ஐயமில்லை.

# திரைப் படத்தின் கதை

திரைப்படங்கள் பிடிப்பதற்கான எண்ணம், போட்டோ பிடிக்கும் கருவியான காமிரா கண்டுபிடிக்கப்படும் வரை யாருக்கும் தோன்றவில்லை.

நம் கண்ணின் படலம் ஒரு பொருளைப் பார்த்த மாத்திரத்தில் அதன் உருவம் மறைந்துவிடுவதில்லை. மேலும் சிறிது காலம் நீடித்து இருந்து கொண்டிருக்கிறது - என்ற இந்த உண்மையை ஜோசப் பிளாட்டோ என்ற ஒரு பெல்ஜிய நாட்டுப் பேராசிரியர் கண்டுபிடித்திராவிட்டால், சினிமா படம் பிடிப்பதற்கான சினி-போட்டோ கிராஃபே கண்டுபிடிக்கப்பட்டிருக்க முடியாது.

1864ஆம் ஆண்டில் ஹெர் ஜேம்ஸ் என்ற ஜெர்மானியர் 'போட்டோகிராப் ரிவால்வரி' என்ற பெயருள்ள ஒரு திரைப் படக் காமிரா கண்டுபிடித்தார். அதன்மூலம் சேர்ந்தாற்போல் சிறிது நேரத்திற்கு 12 படங்கள் பிடிக்கமுடியும். பிறகு அவர்தனது காமிராவை மேலும் அபிவிருத்தி செய்து 72 வினாடிகளில் சேர்ந்தாற்போல் 48 படங்கள் பிடிக்கும்படி செய்தார்.

பிறகு பேராசிரியர் மேராய் என்ற பிரெஞ்சுக்காரர் குறுகிய நேரத்தில் மேலும் அதிகப் படங்களைப் பிடிக்கும் காமிரா ஒன்றைக்கண்டுபிடித்தார். மற்றும் பிடித்தபடங்களைப் போட்டுக் காட்டும் 'புரொஜக்டர்' என்ற இயந்திரத்தையும் அமைத்தார்.

அவரது இந்தக் கண்டுபிடிப்புதான், மனிதர்கள், மிருகங்களின் செய்கைகளையும் படம் பிடித்துக் காட்டமுடியும் என்று எண்ணச் செய்தது. அதன் பிறகு திரைப் படம் பிடிக்கும் முறையில் எத்தனையோ அபிவிருத்திகள் செய்யப்பட்டு வந்தன. நாளடைவில் புகழ்பெற்ற நாவல்கள், நாடகங்கள் முதலியன படமாக்கப்பட்டன. ஆனால் இந்தப்படங்கள் மௌனப் படங்களே!

1889ஆம் ஆண்டுதான் பேசும் படம் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தியாவிலேயே 1912 ஆம் ஆண்டில்தான் முதன் முதலில் திரைப்படம் தயாரிக்கப்பட்டது. அது மகாத்மா காந்திஜி பார்த்த ஒரே படமான ''ஹரிச்சந்திரா'' தான். அப்படத்தைத் தயாரித்தவர் ''தாதா சாகேப் பால்கே''. இவர் பெயரில்தான் நம்நாட்டில் தேசிய திரைப்பட விருது வழங்கப்பட்டு வருகிறது.

1931ஆம் ஆண்டில்தான் ''ஆலம் ஆரா'' (Alam Ara) என்ற பேசும்படம் தயாரிக்கப்பட்டது. எனினும் எடிஸன் கண்டுபிடித்த 'சினிமா ஸ்கோப்' தான் சினிமாவின் முன்னோடியாகும்.

**ஆதாரம்:** இந்துஸ்தான் இயர்புக் 1957.

**தகவல்:** ச. புகழேந்தி
இளங்கலை (தாவரவியல்) மூன்றாம் ஆண்டு,
அ. வீ. வா. நினைவு ஸ்ரீபுட்பம் கல்லூரி,
பூண்டி.



**மாணவர் பக்கம்**



# தமிழே வலிமை

—இரா. இரகுபதி

மான் என்பது அஃறிணை
மரம்செடி கொடியும் அத்திணையே
மனிதன் என்பவன் உயர்திணை
மாதேவர் நரகர் இத்திணையே!

ஒன்றைக் குறிப்பது ஒருமை
ஒன்றல்ல தெல்லாம் பன்மை
நன்றே கற்பது நன்மை
நாளும் அறிக இவ்வுண்மை!

காலம் அறிக மூன்றே
கடந்தான் என்பது இறப்பு
கடப்பான் என்பது எதிர்வு
கடக்கிறான் என்பது நிகழ்வு!

தமிழின் பொருளே இனிமை
தங்கச் சங்கத்தமிழும் இனிமை
தமிழைக் கற்பது எளிமை
தாய்மொழிக் கல்வி வலிமை!



# சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு

சிறந்த நூல்கள் எழுதிய எழுத்தாளர்களுக்கும், பதிப்பகத்தாருக்கும் பரிசுகளும், சிறந்த தமிழ் அறிஞருக்குத் திருவள்ளுவர் விருதும், ஏழ்மை நிலையிலுள்ள தமிழ் அறிஞர்கட்கு உதவித் தொகையும் வழங்கும் விழா இந்த ஆண்டும் திருவள்ளுவர் திருநாளில் வள்ளுவர் கோட்டத்தில் 15.1.1987 அன்று நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்தோரைத் தமிழ்ப் பண்பாட்டுத்துறைச் செயலர் டாக்டர் ஔவை நடராசன் வரவேற்றார்.

தலைமை வகித்துப் பேசிய மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

''திருவள்ளுவர் கூறிய ''அற்றார் அழிபசி தீர்த்தல்'' என்ற முறையில் ஒரு கோடி குழந்தைகளுக்கு உணவு வழங்கி வள்ளுவர் வாக்கை நனவாக்குகிறார் முதல்வர். இந்த ஆண்டு வரை முதிர்ந்த தமிழ் அறிஞர்கள் 274 பேருக்கு மாதம் ரூ. 250 உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

''நூலகங்களில் முதல்பரிசு பெற்ற புத்தகங்கள் 1000-த்திலிருந்து 1500 வரையும், இரண்டாம் பரிசு பெற்ற புத்தகங்கள் 600லிருந்து 1000 வரையும் முதல்வர் அவர்களின் ஆணைப்படி வாங்கப்படும்.

''திருவள்ளுவர் திருநாளை விடுமுறையாக அறிவித்த பெருமை இந்த அரசைச் சாரும். கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட உள்ளது. 1978ஆம் ஆண்டு முதல், அரசு விரைவுப் பேருந்திற்குத் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் என்று பெயரிட்டது. தமிழ் மொழியை அனைத்துத் துறைகளிலும் தொண்ணூறு சதவிகிதம் இந்த அரசு பயன்படுத்தி வருகிறது''

விழாவில் சிறப்புரையாற்றிய மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகையில், ''உடல் உழைப்பிற்கும் அறிவுக்கும் மரியாதை செலுத்தும் நாள் பொங்கல் திருநாளாகும். பேரறிஞர் அண்ணா வழியில், புரட்சித் தலைவர் தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் தொண்டாற்றி வருகிறார். வள்ளுவர் வழியில் பசியைப் போக்கவும், பிணியைப் போக்கவும் புதிய சமுதாயத்தை உருவாக்கி வருகிறார் மாண்புமிகு முதல்வர்'' என்றார்.

தமிழ் வளர்ச்சி உயர்மட்டக் குழுத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் உரையாற்றுகையில், ''இந்த ஆண்டுகள், சாராயக் கடைகள் மூடிய நிலையில், வள்ளுவர் விழாவை இன்று கொண்டாடுகிறோம். எனவே வள்ளுவர் வாழ்த்துகிறார். மூடிய கடைகள் மூடியவாறே இருக்கட்டும். இனி திறக்க வேண்டாம். வள்ளுவர் பற்றி உலகம் முழுவதும் உள்ள அறிஞர் பெருமக்கள் எழுதிய புத்தகங்கள் இங்குள்ள வள்ளுவர் கோட்டத்தில் நூல்நிலையமாக அமைக்கப்பட வேண்டும்'' என்றார்.

விழாவில் திருவள்ளுவர் விருதினையும், பாவேந்தர் விருதினையும், முதிர்ந்த நிலையில் உள்ள தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகைகளையும் வழங்கி, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''திருக்குறள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் புத்தகமாகும். அது பொது நூலாகச் சிறந்த நூலாக விளங்குகிறது. இந்தப் பொங்கல் திருநாளில் அன்பு, அறம், பண்பு, வளம் பொங்கட்டும் என்று வாழ்த்துகிறேன். எழுத்தாளர்களுக்கும், கவிஞர்கட்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

இந்த விழாவில் திருமதி ராஜேஸ்வரி அம்மையார் திருக்குறளை இசை நயத்தோடு பாடினார்.

மதுரை அரசு இசைக் கல்லூரி மாணவர் சோமசுந்தரம் கரக ஆட்டம் ஆடினர்.



1987-ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கட்கு வழங்கப்பட்டது. திருவள்ளுவர் விருது, ரூபாய் 10 ஆயிரத்துக்கான ரொக்கப் பரிசு ஆகியவற்றை அவருடைய மகன் புலவர் திரு வி. கதிரேசன் பெற்றுக் கொண்டார்.



1986-க்குரிய பாவேந்தர் பாரதிதாசன் விருது, கவிஞர் மு. மேத்தா அவர்களுக்கு வழங்கப்பட்டது. 4 சவரன் மதிப்புள்ள பதக்கமும் மற்றும் ரூ. 10 ஆயிரம் ரொக்கப் பரிசும் இதில் அடங்கும்.

1985-ஆம் ஆண்டுக்குரிய சிறந்த புத்தகங்களை எழுதிய எழுத்தாளர்களுக்கு ரொக்கப்



பரிசும், முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு உதவித்தொகையும், சிறந்த பதிப்பகத்தார்கட்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



சிறந்த நாடக நூலுக்குரிய முதற்பரிசை திரு ஆர்.சி. தமிழன்பன் பெற்றார்.



சிறந்த வாழ்க்கை வரலாற்று நூலுக்குரிய முதற்பரிசை திரு மன்னர் மன்னன் பெற்றார்.



# கரிய கோயில் நீர்த்தேக்கம்

கரிய கோயில் ஆறு சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்திலுள்ள கல்ராயன் மலைச்சரிவுகளில் உற்பத்தியாகிறது. பின்னர் இந்த ஆறு தும்பல் கிராமத்திற்கு அருகே ஓடி வரும் அம்மாபாளையம் ஆற்றுடன் கலந்த பிறகு தும்பல் ஆறு என்று அழைக்கப்படுகிறது. பின்னர் தும்பல் ஆறு பெரிய கிருஷ்ணாபுரம் கிராமத்திற்கு அருகில் வசிஷ்ட்டா நதியுடன் கலந்த பிறகு வசிஷ்ட்டா நதி என்று அழைக்கப்படுகிறது. பின்னர் இந்த ஆறு சுவேதா நதியுடன் கலந்த பிறகு வெள்ளாறு என்று அழைக்கப்படுகிறது. இந்த வெள்ளாறு சிதம்பரத்தை அடுத்த பரங்கிப்பேட்டை அருகே வங்கக் கடலில் கலக்கின்றது.

இத்திட்டத்தின் மூலம் மே மாதம் முதல் ஆகஸ்ட்டு மாதம் முடிய 1214.08 ஹெக்டேருக்கு (3000 ஏக்கர்) முதல் போக புஞ்சை சாகுபடிக்கும், செப்டம்பர் முதல் டிசம்பர் முடிய 1456.92 ஹெக்டேருக்கு (3600 ஏக்கர்) இரண்டாம் போக புஞ்சை சாகுபடிக்கும் பாசன வசதி கிடைக்கும். இது தவிர குமாரபாளையம் அணைக்கட்டின் கீழ் ஏற்கனவே உள்ள 95 ஏக்கர் நன்செய் நிலங்களுக்கு நிலையான பாசனவசதி கிடைக்கும். மேலும் இத்திட்டத்தால் மலையாளப்பட்டி, தும்பல், இடையப்பட்டி கிராமங்கள் பாசனவசதி பெறுவதுடன் இப்பகுதியில் நிலத்தடி நீர்வளம் பெருகி அதன் வாயிலாக ஏற்கனவே ஆயக்கட்டில் தோண்டப்பட்டுள்ள கிணறுகளில் நீருற்றுப் பெருகும். அதன் வாயிலாக அக்கிணறுகளின் கீழ் உள்ள நிலங்கள் நிலையான சாகுபடிக்கு வரும் வாய்ப்பு ஏற்படும்.

இப்பகுதியில் வாழும் மக்கள் பெரும்பாலும் மலைவாழ் பழங்குடியினர் ஆவார்கள். இவர்களது வாழ்க்கைத் தரம் எல்லா வகையிலும் பின் தங்கிய நிலையில் உள்ளது. இவர்கள் தற்போது விறகு, மூங்கில் இவற்றை வெட்டிப் பிழைத்து வரும் சட்டத்திற்குப் புறம்பான காரியங்களை செய்யும் நிலைமாறி,




**பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வல்லம் ஊராட்சியில் ரூ. 1 இலட்சத்து 60 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட புதிய பள்ளிக் கட்டடத்தை மேதகு கேரள ஆளுநர் திரு பா. இராமச்சந்திரன் அவர்கள் 6.1.1987 அன்று திறந்து வைத்தார்.**

விவசாயக் கூலி வேலை கிடைக்கும். அணைப்பணிகளில் இவர்கள் அமர்த்தப்படுவதால் பணிமுடியும் வரையிலும் வேலை கிடைக்கும். அணை கட்டி முடிக்கப்பட்ட பின் கூடுதல் உணவு உற்பத்தியாகும், கால்நடைவளம் பெருகும். அணையில் மீன் வளர்க்கப்பட்டு மீன் வளம் பெருகும்.

**தலைமைப் பகுதியில் உட்பட்டிருக்கும் பணிகள் :-**

1. அணையின் மொத்த நீளம் 748.5 மீட்டர் (உபரி நீர்ப்போக்கி கட்டிடம் உட்பட)
2. அதிக பட்ச வெள்ள அளவான விநாடிக்கு 27,200 கனஅடி நீரை வெளியேற்ற ஆற்றின் குறுக்கே நீள வெட்டில் 475 மீட்டர் முதல் 508 மீட்டர் வரை நீர்வழிந்தோடி (Spill way) அமைத்தல்.
3. 3600 ஏக்கர் பாசனம் பெறும் வகையில் முறையே நீளவெட்டில் 182 மீட்டர் மற்றும் 592மீட்டரில் இரண்டு மதகுகள் அமைத்தல்.

இத்திட்டத்திற்காக சுமார் 393 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தை அக்டோபர் 88-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரை இத்திட்டத்திற்கு 502 லட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. மேலும் 364 லட்சங்கள் செலவிடப்பட உள்ளது.



# பம்மல் சம்பந்தனார் விழா

நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்தனாரின் பிறந்தநாள் விழா, கலைவாணர் அரங்கில் சிறப்புற நடைபெற்றது.(5.2.87)

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில நடத்தப்பட்ட இவ்விழாவில் மாண்புமிகு சுற்றுலா-மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் பங்கேற்று நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்தனார் நினைவுப் பணமுடிப்பை நாடகக் கலைஞர்களுக்கு வழங்கிச் சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாடு இயல்இசை நாடக மன்றச் செயலாளர் திரு வி.எஸ். இராகவன் வரவேற்புரையாற்றினார். ''இதுவரை சிறந்த கலைஞர்களுக்கு நினைவு நாளையே நாம் கொண்டாடி வந்தோம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஆலோசனையின் பேரில் சிறந்த கலைஞர்களின் பிறந்த நாளையும் கொண்டாட முடிவு செய்யப்பட்டது. அந்த வகையிலேயே பம்மல் சம்பந்தனாரின் பிறந்தநாள் விழா நடைபெறுகிறது. கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், தவத்திரு சங்கரதாசர் ஆகியோரின் பிறந்தநாள் விழாக்களும் இனி கொண்டாடப்படும்'' என்று தமது வரவேற்புரையில் அவர் குறிப்பிட்டார்.

**அமைச்சர் உரை**

மாண்புமிகு தமிழ்நாடு சுற்றுலா-மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் தமது சிறப்புரையில்குறிப்பிட்டதாவது:

''முத்தமிழில் நாடகக்கலை ஓர் அங்கம். இடையில் சில காலம் இசைத்தமிழைப் போலவே நாடகக்கலையும் மதிப்பிழந்திருந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில்தான் நாடகக்கலை மகோன்னத நிலையை அடைந்தது; கூத்தாடிகள் என்று கூறப்பட்டு வந்த நிலை மாறி கலைஞர்கள் என மதிப்போடு குறிப்பிடப்படும் நிலை வந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் சந்திரமோகன் ,வேலைக்காரி போன்ற பல நாடகங்களை எழுதியது மட்டுமல்ல-அவரே நடிப்பார்.

''1977 முதல் இந்த 1987லும் தமிழகத்தைச் சிறப்புற நிர்வகித்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் அவர்களும் நாடகத்தில், திரைப்படத்தில் நடிப்புக் கலை வளர்த்தவர்தான். அமெரிக்கக்குடியரசுத் தலைவராக இருக்கும் ரீகனும் ஒரு காலத்தில் நடிகர்தான்.

''நாடகங்களிலெல்லாம் நடித்துப் பண்பட்டவர்கள் தான் நடிப்பது என்ற நிலைமாறி, இப்போது +2 படிக்கிறவாகளெல்லரம் நடிக்க வருகிறார்கள். முற்றாதபடி அவர்கள் பிஞ்சாகவே வெம்பி உதிருவதையும் பார்க்கிறோம். இது மாறியாக வேண்டும். நாடகக் கலைக்குப் புத்துயிர் தந்தாக வேண்டும்.

''மேனாடுகளில் எல்லாம் சினிமா உத்திகளை நாடகத்திலும் கையாளுகிறார்கள். பார்த்தால் திரைப்படம் பார்ப்பது போலவே இருக்கிறது. நாமும் அப்படியெலலாம்செய்து நாடகக் கலையை வளர்க்க வேண்டும். இந்த வகையில் அரசும் உதவும். புரட்சித் தலைவர் காலத்தில் நாடகக் கலையை முன்னேற்ற நாம் தவறிவிட்டால் வேறு யார் காலத்திலும் முடியாது. நாடகம் என்றால் என்ன என்று கேட்கிற நிலையே வந்துவிடும்.

''அந்த நாளில் வழக்கறிஞராக இருந்த பம்மல் சம்பந்தனார் நாடகத் தமிழில் ஆர்வம் காட்டினார். பல நாடகங்களை எழுதியதோடு நடித்தும் சிறப்படைந்தார். அவருக்குப் பிறந்தநாள் விழா எடுப்பதில் அரசு பெரிதும் மகிழ்கிறது. நாடகக் கலை மறுமலர்ச்சி அடைய எல்லோரும் பாடுபடவேண்டும்.''

—இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்.

விழா முடிவில், நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்தனார் எழுதிய நாடகங்களான 'சபாபதி', 'கள்வர் தலைவன்', சங்கீதப் பயித்தியம்', 'மனோகரா' ஆகியவற்றிலிருந்து சில காட்சிகள்—எஸ்.ஆர்.டி. நாடக மன்றம். டி.கே.ஆர். நாடக மன்றம், இராமநாதன் நாடக மன்றம் ஆகிய நாடகக் குழுவினரால் நடித்துக் காட்டப்பட்டன.

விழா மேடையில் பம்மல் சம்பந்தனாரின் திருவுருவப்படம் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது.

## நாடகக் கலைஞர்களுக்கு நிதியுதவி

நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்தனார் பிறந்தநாள் விழாவில், தலா இரண்டாயிரம் ரூபாய் வீதம் பணமுடிப்பு பெற்ற நாடகக் கலைஞர்கள் விவரம் வருமாறு :

திரு ஜி. மணி—நடிகர்

திருமதி மதுரை ஜெயந்தி—நடிகை

திரு கே.ஏ. ஆறும்கம்—நடிகர்

திரு ஆர். பக்கிரிசாமி—நடிகர்

திரு பி.ஏ. பூபாலன்—நடிகர்

திரு கே.டி. ராஜகோபால்—நடிகர்

திரு ராஜாமணி—நடிகர்

திருமதி டி.கே. திருக்கண்ணாமணி—நடிகை

திரு ஏ.ஆர். அமுதன்—நாடக ஆசிரியர்

திரு எம். கோதண்டபாணி—நாடக ஆர்மோனியக் கலைஞர்



1



2

# நினைத்தது

வாழ்க்கையில் முன்னேறத் துடிப்பது இயல்புதானே?

சமுதாயத்தில் மற்றவர்கள் போல் வாழ வேண்டும், வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்று எத்தனை பேர் கனவு காண்கின்றனர்!

அந்தக் கனவு நனவாகிறவரையில், அரசும், அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் உதவிக்கரமாக விளங்கி வருகின்றன. இதன் மூலம் அடித்தளத்தில் உள்ளவர்கள் மேலே உயரவும், நடுத்தரத்தில் உள்ளவர்கள் நல் வாழ்வு பெறவும் முடிந்திருக்கிறது. ஆம். அவர்கள் நினைத்தது நடந்திருக்கிறது.

மதுரை மாவட்டத்தின் தொழில் மையத்தின் சார்பில், இந்தியப் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பின் தங்கிய வகுப்பினர் பலர் பயன் பெற்றுள்ளனர்.

மேற்கூறிய திட்டத்தின் கீழ், உதவி பெற்று, நல்லமுறையில் தொழில் நடத்தி வரும் சிலரின் விவரம் வருமாறு:



3



4

# நடந்தது !

1 உதயா டெயிலர்ஸ், சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடனுதவி பெற்றது.

2 கிரேட்சன் இந்தியா (மருந்து தயாரித்தல்) எட்டுப்பேர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் உதவி பெற்றது.

3 ஜோதி மொசைக் டையில்ஸ், ஒன்பது பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். சுயவேலை வாய்ப்புத்திட்டத்தின்கீழ் கடன்.

4 ஆர்ட் இண்டஸ்டிரீஸ் (தச்சு வேலை) பாரத ஸ்டேட் வங்கி உதவியுள்ளது. ஏழு பேர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

5 ஸ்ரீ லலிதா போட்டோ கிராபிக் (அச்சகம்) 12 பேர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், பாரத ஸ்டேட் வங்கி ஆகியவை கடனுதவி அளித்துள்ளன.

6 முருகன் ஷு மார்ட், பாரதஸ்டேட் வங்கி கடன் தந்துள்ளது.



5



6



## சத்துணவுத் தானியங்களில் முதல்வர் படம்

குமரி மாவட்டம் பேயன்குழியில் அரசு உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றும் திரு ரெ. ஐயப்பன் என்பவர், மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஓவியத்தை, சத்துணவிற்கு வழங்கும் தானியங்களைக் கொண்டு அமைத்துள்ளார்.

தமிழக முதல்வர் அவர்களின் சத்துணவுத் தானிய உருவப்படம் பற்றிய விளக்கம்:

அரிசி-சட்டையும் தொப்பியும்
கேழ்வரகு-பின்னணி
பருப்பு-முகம்
சிறுபயறு-நெற்றியின் இடப் பக்கம்
உடைத்தஉளுந்து-கண்ணாடியின் தோற்றம்.
கறுப்பு அரிசி-முகத்தின் இடப் பக்கம்
காணம்-கண்ணாடி

ஏழு வகையான தானியங்களால் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் உருவம் தீட்டப்பட்டுள்ளது.

## இளைஞர்கள் போட்ட புதிய பாதை

புதுக்கோட்டை மாவட்டம் நேரு இளைஞர் மையத்தின் சார்பில் 100 இளைஞர்களைக் கொண்டு அன்னவாசல் ஒன்றியத்தைச் சார்ந்த மணிக்கட்டிப்பட்டி கிராமத்தில் நற்பணி முகாம் நடைபெற்றது.

மணிக்கட்டிப்பட்டி கிராமத்தில் இடுகாட்டுக்குச் செல்வதற்கு ஒரு கிலோ மீட்டர் தூரம் புதிய சாலை, நற்பணி முகாம் மூலம் அமைக்கப்பட்டது. மேலும் சாலையில் இரு மருங்கிலும் மரக்கன்றுகள் நடப்பட்டிருக்கின்றன.

## மீனவர் வங்கி

கடலில் தொழில் புரிய வாய்ப்பில்லாத காலங்களிலும், புயல் மற்றும் வெள்ள அபாய காலங்களிலும் மீனவர் வங்கி மீனவர்களுக்கு உதவும். ரூ.20 லட்சம் மதிப்பில் மீனவர் வங்கி விரைவில் புதுக்கோட்டை மாவட்டம் மணல்குடியில் ஏற்படுத்தப்பட உள்ளது. இத் திட்டத்தினால் 50,000 கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்கள் பயன் அடைவார்கள். மீனவர்கள் இடைத்தரகர்களின் பிடியிலிருந்து விடுபடுவார்கள்.



## சமாதானப்படை

சமாதானப்படை(சால்வேஷன் ஆர்மி)யின் ஜெனரல், ஈவா பரோஸ் 30.1.1987 அன்று சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

சமாதானப்படை என்பது சர்வதேச கிறிஸ்தவத் தொண்டு நிறுவனம். இது 90 நாடுகளில் உள்ளது. இந்த அமைப்பில் ஏறத்தாழ 20 இலட்சம் உறுப்பினர்கள் இருக்கின்றனர். இந்தியாவில் 5 கிளைகள் உள்ளன. இவை, பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், தொழுநோய் மருத்துவமனைகள், தொழிற்கல்விப் பயிற்சிக்கூடங்கள், அனாதை விடுதிகள், அபலைகள் மறுவாழ்வு இல்லங்கள் போன்றவற்றை நடத்தி வருகின்றன.

இந்தியாவில்மேலும் எத்தகைய சமூக நலத் திட்டங்களை "சமாதானப் படை"யின் மூலமாக ஆற்றலாம் என்று சமாதானப் படைத்தலைவர் ஆராய்ந்து வருகிறார். இத்திட்டங்கள் பற்றி 1988 ஜனவரியில் அறிவிக்கப் படும்.

4—ஆம் பக்கத் தொடர்ச்சி

'பாரததேசம் என்று பெயர் சொல்லுவார்' என்ற கவிதை முழுவதையும் தமது குழுவின ருடன் பாடினார். பாடலின் இனி மையை ரசித்த பிரதமர் அந்தப் பாடல் வரிகள் அனைத்தின் ஆங் கில மொழிபெயர்ப்பைப் பார்த் துக் கொண்டு பொருளையும் புரிந்து மகிழ்ந்தார்.

டில்லியில் உள்ள தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு பட்டுராசன் நன்றி தெரிவித்தார்.

முறை டில்லியில் சிலை திறப்புத் தலத்திற்கே சென்று விழா ஏற்பாடுகளை மேற்பார்வையிட் டார்கள்.

தமிழகச் செய்தித் துறைப் பொறுப்பினை ஏற்றுள்ள மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமி நாதன் அவர்கள் விழாவுக்கு முன்னே சென்று இரவு பகல் எந்நேரமும் விழா ஏற்பாடு களைப் பார்வையிட்டு விழா வெற்றி பெற உதவினார்கள்.

மற்றும் உள்துறை இணை அமைச்சர் திரு ப. சிதம்பரம், மாண்புமிகு மத்திய வேளாண்மை உரத்துறை இணை அமைச்சர் திரு ஆர். பிரபு, மேதகு டில்லி லெப்டினன்ட் கவர்னர் திரு. எச்.எல். கபூர், இந்திய வர்த்தக குழுமத் தலைவர் திரு. முகமது யூனஸ், மாண்புமிகு தமிழக நிதி யமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மாண்பு மிகு உணவமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன், மாண்புமிகு தொழிலமைச்சர் திரு க. இராசாராம், தமிழ்நாடு



பேரறிஞர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு புதுடில்லியில் உள்ள அண்ணா திருவுருவச்சிலைக்கு 3-2-'87 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள், மாலை அணிவித்தார்கள்.

புதுடில்லியில் தமிழக அரசு நடத்திய இவ்விழாவினை டில்லி யில் இருக்கும் தமிழ்நாடு இல்ல உள்ளுறை ஆணையர் திரு சி. என். ராம்தாஸ், இ.ஆ.ப., செய்தி சுற்றுலாத்துறை ஆணை யர்-செயலர் திரு ஏ.பி. முத்து சாமி, இ.ஆ.ப., செய்தி - மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு ஆர். கற்பூரசுந்தர பாண்டி யன், இ.ஆ.ப., இணை இயக்கு நர் திரு ஏ. இராசமாணிக்கம் ஆகியோரும் மற்றும் அரசு அலு வலர்களும் ஏற்பாடு செய்தனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடுங்குளிரையும் பொருட்படுத்தாமல் இரண்டு

புதுடில்லியில் மாலை, இரவு, காலை மூன்று வேளையும் நடுக் கும் குளிர்தான். ஆனால் விழா நடைபெற்ற நேரமோ முற்பகல் 11 மணி. அப்போதிருந்த பத மான வெயில், இதமான குளிர் விழா வுக்கு மெருகேற்றியது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இவ் விழாவுக்கு மாண்புமிகு மத்திய சுற்றுப்புறச் சூழல் வனத்துறை அமைச்சர் திரு. பஜன்லால் மாண்புமிகு நாடாளுமன்ற துணைத் தலைவர் திரு தம்பித் துரை, மாண்புமிகு மத்திய தொழில்துறை இணை அமைச்சர் திரு எம். அருணாசலம், மாண்புமிகு மத்திய பணியாளர்

மாநிலத் திட்டக்குழுத் துணைத் தலைவர் திரு. மா. முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு ஜி. கே. மூப்பனார், திரு ஜி. வரதராஜலு, திரு. ஜி. சாமி நாதன், திரு ப. குழந்தைவேலு, திரு. ஜெகத்ரட்சகன், திரு. ஏ. சி. சண்முகம், திரு. அண்ணா நம்பி, திரு. கடம்பூர் ஜனார்த் தனம், திரு. ஜீவரத்தின முதலியார், திரு. கம்பம் கோபால், திருமதி மரகதம் சந்திரசேகர், சட்டப் பேரவை உறுப்பினர் திரு குமரி அனந்தன், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத் தலைவர் திருமதி சுலோசனா சம்பத் ஆகியோரும் டில்லிவாழ் பெருமக்களும் வருகை தந்து சிறப்பித்தனர்.

—நமது செய்தியாளர்.





# அனைத்து இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகள்

தமிழ்நாட்டில் திருச்சி நகரில், அண்மையில் நடைபெற்ற பதினேழாவது அனைந்திந்திய ஊரக இரண்டாம் தொகுதி விளையாட்டுப் போட்டிகளில் மொத்தத்தில் தமிழ்நாடு முதன்மை பெற்றது.

கோவையில் நடைபெற்ற பத்தாவது தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு முதன்மை பெற்றது. இப்பொழுது அனைத்து இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளிலும் முதன்மையான இடம் கிடைத்துள்ளது.





திருச்சியில் நடைபெற்ற ஊரக விளையாட்டுப் போட்டிகளில் தடகளம், கூடைப் பந்து, ஹாக்கி ஆகிய விளையாட்டுகள் இடம் பெற்றிருந்தன. பதினாறு வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்கான போட்டி இது.

சிறுவர் தடகளப் போட்டியில் தமிழ்நாட்டுக்கு முதன்மை; போட்டிகளில் அஸ்ஸாம், கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலச் சிறுவர்கள் முறையே இரண்டாம் மூன்றாம் நான்காம் நிலைகளைப் பெற்றனர்.



சிறுமியர் தடகளப் போட்டியில் தமிழ்நாட்டுக்கு இரண்டாம் நிலை. முதல்நிலை கர்நாடக மாநிலத்திற்கு.

எச். ஜி. அப்சரா என்ற கர்நாடகத்துப் பெண் 100 மீட்டர், 200 மீட்டர், 400 மீட்டர், 400 மீட்டர் தொடர் ஓட்டம், 1600 மீட்டர் தொடர் ஓட்டம் ஆகியவற்றில் ஐந்து தங்கப் பதக்கங்களைப் பெற்றுக் கர்










# தமிழ்நாட்டிற்கு முதலிடம்

நாடகத்தை முதல்நிலைக்குக் கொண்டு வந்து விட்டார். அப்சரர் திருச்சியில் கர்நாடகத்திற்குப் பெருமை சேர்த்தார். அப்சரா எதிர் காலத்தில் சிறந்த ஓட்டப் பந்தய வீரங்கனையாக வருவார் என்று அனைவரும் கருதினர்.



சிறுமியர் தடகளப் பிரிவில் மேற்கு வங்கத்திற்கு மூன்றாம் நிலை. நான்காம் நிலையினை அஸ்ஸாம் மாநிலமும் ஆந்திர மாநிலமும் பங்கிட்டுக் கொண்டன.

சிறுவர் கூடைப்பந்து, சிறுமியர் கூடைப் பந்து, சிறுவர் ஹாக்கி ஆகிய மூன்று விளையாட்டுகளில் தமிழ்நாடு முதன்மை பெற்றது.



சிறுமியர் ஹாக்கியில் தமிழ்நாடு மூன்றாம்நிலை பெற்றதுகூடப் பெரிய முன்னேற்றம்தான். இதற்கு முன்பு 12 ஆண்டுகளில் நடைபெற்ற போட்டிகளில் தமிழ்நாட்டுச் சிறுமியர் ஹாக்கி அணி இந்த நிலையைக் கூடப் பிடிக்க முடியவில்லை.

சிறுவர் கூடைப்பந்தில் கர்நாடகம், ராஜஸ்தான், அரியானா மாநிலங்கள் இரண்டாம் மூன்றாம் நான்காம் நிலைகளை முறையே பெற்றன. சிறுமியர் கூடைப்பந்தில் அந்த நிலைகளை முறையே மகாராட்டிரம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்கள் பெற்றன.

சிறுவர் ஹாக்கியில் ஓரிசா ஜம்முகாஷ்மீர் மணிப்பூர் மாநிலங்கள் இரண்டாம் மூன்றாம் நான்காம் நிலைகளைப் பெற்றன. சிறுமியர் ஹாக்கியில் மத்தியப் பிரதேசம் முதல் நிலையையும், மகாராட்டிரம் இரண்டாம் நிலையையும், தமிழ்நாடு மூன்றாம் நிலையையும், உத்தரபிரதேசம் நான்காம் நிலையையும் பெற்றன.





அனைத்து இந்திய ஊரக விளையாட்டுப் போட்டி முதன் முதலாக 1970-71-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. முதல் மூன்று போட்டிகளில் ஊரக விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றோர் வயது வரம்பின்றிக் கலந்து கொண்டனர். 1973-74- ஆம் ஆண்டு முதல் போட்டியாளர்கள் 16 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டுமென்ற வரையறை கொண்டுவரப்பட்டது.

தமிழ்நாட்டில் இதற்கு முன்னால் ஒரு முறை அனைத்து இந்திய ஊரக விளையாட்டுப் போட்டி நடைபெற்றுள்ளது.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் அனைத்து மாநிலங்களில் இருந்தும் மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர். இது போன்ற விளையாட்டுப் போட்டிகள் ஒருமைப்பாட்டு உணர்வை வளர்க்க உதவுகின்றன என்பதை இந்த விளையாட்டுப் போட்டிகளைப் பார்வையிட்ட அனைவரும் உணர்வார்கள்.



பஞ்சாப் மாநிலம் ஊரக விளையாட்டுப் போட்டிகளுக்காகத்தனியான இயக்ககத்தையே உருவாக்கியுள்ளது. நம் தமிழ்நாட்டு மாணவர்களும் இப்பொழுது விளையாட்டுப் போட்டிகளில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சிறுவர் ஹாக்கி, சிறுமியர் கூடைப்பந்து, சிறுவர் கூடைப் பந்து, சிறுவர் தடகளம் போன்றவைகளில் தமிழ்நாடு முதலிடம் வகித்தது. மொத்தத்தில் தமிழ்நாட்டுக்கு 15 தங்கப்பதக்கங்கள் 14 வெள்ளிப்பதக்கங்கள் 5 வெண்கலப்பதக்கங்கள் கிடைத்தன.

விளையாட்டுப் போட்டிக்களில் தமிழ்நாடுவருங்காலத்தில் முதன்மையான இடத்தைப் பெறும்என்பதைஉறுதி படுத்துவதாகஅமைந்தன திருச்சியில் நடைபெற்ற அனைத்து இந்திய விளையாட்டுப் போட்டிகள்.

—நமது செய்தியாளர்



–'தமிழரசு' இதழில் உதவி ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவரும் 'பாசொலி' என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதி வந்தவருமான வித்வான் பா. சொக்கலிங்கம் அவர்கள் 4.2.87 அன்று மறைவெய்தினார். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பாசொலி தமிழக அரசின் மகளிர் நலத்துறையின் சார்பில் வெளிவந்த 'சௌபாக்கியம்' 'பாக்யலட்சுமி' ஆகிய இதழ்களில் துணை ஆசிரியராகவும் பணிபுரிந்திருக்கிறார்.


இதயத்திற்கு இதமானது



இதயம் நல்லெண்ணெய்

LEKHA/VVV/TAMIL

நலமான இதயம் வளமான வாழ்வு



# தருமபுரி தழைக்க...

தருமபுரி மாவட்டத்தின் வளர்ச்சிக்குப் பல்வேறு துறைகளின் கீழ் ரூ. 26 கோடி செலவிலான மக்கள் நலத் திட்ங்களைத் துவக்கி வைக்கவும் மக்கள் நல் வாழ்வை மலரச் செய்யவும் 10.2.87, 11.2.87; 12.2.87 ஆகிய நாட்களில் தருமபுரி மாவட்டத்தின் ஒசூர், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய நகரங்களில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

இவ்வூர்களில் நடைபெறும் விழாக்களையொட்டி மாவட்டம் முழுவதும் விழாக் கோலம் பூண்டிருந்தது. பல்வேறு இடங்களில் பிரம்மாண்டமான அலங்கார வளைவுகளும், தோரணங்களும் அமைக்கப்பட்டிருந்தன. மக்கள் பெருமளவில் திரண்டிருந்து விழாக்களைச் சிறப்பித்தனர்.

வீட்டுவசதி வாரியத்தால் ரூ. 92 இலட்சம் செலவில் கட்டப்பட்ட 82 குடியிருப்புக்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் 10.2.87 அன்று ஒசூரில் திறந்து வைத்தார். தளிரோடு புறநகர்த் திட்டத்தின் கீழ் ரூ. 330 இலட்சத்தில் 173 ஏக்கர் நிலப்பரப்பில் மனை அபிவிருத்தி செய்து அதில் 640 குடியிருப்புகளை ரூ. 454 இலட்சம் செலவில் கட்டுவதற்கான திட்டம் தீட்டப்பட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இத்திட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்.

ரூ. 20 இலட்சம் செலவில் ஒசூரில் நிறுவவிருக்கும் தமிழ்நாடு ஒட்டல் கட்டடத்திற்கும், ரூ 5 இலட்சம் மதிப்பில் தீர்த்தமலையில் கட்டப்படயிருக்கும் பயணியர் விடுதிக் கட்டடத்திற்கும், ஒகேனக்கல்லில் ரூ. 50 இலட்சம் மதிப்பில் தொங்கும் பாலம் அமைக்கும் பணிக்கும் கால்கோள் நாட்டப்பட்டது.

மேலும் ரூ. 36.15 இலட்சம் செலவில் அமையவிருக்கும் நகர மற்றும் ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி ரூ. 27.13 இலட்சம் செலவில் நிறைவேற்றி முடிக்கப்பட்ட நகர மற்றும் ஊரகக் குடிநீர்த் திட்டங்களைத் துவக்கி வைத்தபின் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

தமது உரையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே! என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே!

"இந்த மாபெரும் விழாவில் கலந்து கொண்டு உங்களைக்

காண்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாவட்ட மக்கள் எல்லோரும் என் மீது மிகுந்த அன்பும், பாசமும் பற்றும் கொண்டவர்கள். உங்களையெல்லாம் காணவேண்டும் என்ற என்னுடைய நீண்ட நாள் ஆசை இன்று நிறைவேறியது. உங்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவன் நான். உங்கள் முன்னேற்றத்திற்காக என் வாழ்நாள் முழுவதும் பாடுபடுவேன்.

"தருமபுரி மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம். இந்த மாவட்ட முன்னேற்றத்திற்காக இந்த அரசு பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

"நான் போடும் திட்டங்களுக்கு முழுமையான பலன் கிடைக்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டவன் நான்.

"திட்டங்களை அமல்நடத்துவதில் தவறுக்கு யார் காரணமாக இருந்தாலும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க நான் தயங்கமாட்டேன். நீங்கள் எல்லோரும் நான் செயலாற்றும் திட்டங்களுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும்.

"எங்கே, யார் தவறு செய்தாலும் அவற்றைக் கண்டிப்பாக என் கவனத்திற்கு நீங்கள் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தருமபுரி மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கு ஓசூர் நகரில் ஒரு தொழிற்பேட்டை மையம் அமைக்கப்பட்டது. தொழிற்கூடங்கள் நடத்த முன்வருபவர்களுக்கு அரசு பல சலுகைகள் கொடுத்து அனுமதி அளித்து வருகிறது.

"இந்த மாவட்டத்தைத் தொழில் நிறைந்த பகுதியாக ஆக்க நான் எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறேன். இங்கு வாழும் மக்களுக்கு அரசு பல வளர்ச்சித் திட்டங்களைச் செய்து கொடுக்கிறது. இந்த வளர்ச்சிப்பணிகளின் பலனை முழுமையாக நீங்கள் பெற வேண்டும்.

அண்ணா நாமம் வாழ்க''

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது சுற்றுப்பயணத்தின் இரண்டாம் நாளான 11-2-87 அன்று தருமபுரியில் மொத்தம் ரூ. 11 கோடியே 43 இலட்சத்து 75 ஆயிரம் மதிப்புள்ள வளர்ச்சிப் பணிகளைத் துவக்கி வைத்தார். மேலும் ரூ. 4 கோடியே 78 இலட்சத்து 15 ஆயிரம் மதிப்பில் ஆரம்பிக்கப்பட உள்ள வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

பொதுப்பணித் துறையின் மூலம் ரூ. 5 கோடியே 92 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள தொப்பையாறு நீர்த்தேக்கத்தையும், ரூ. 3 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள நாகாவதி நீர்த்தேக்கத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

ரூ. 39.30 இலட்சம் மதிப்பில் நிறைவேற்றப்பட்டுள்ள மூங்கில்மடு. கணம்பள்ளம், கொடகுமரத்துப்பள்ளி ஆகிய ஏரிகளைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வரும் திட்டமும், ரூ. 101.92 இலட்சம் மதிப்பில் நிறைவேற்றப்பட்டுள்ள 934 ஆதிதிராவிடர் குடியிருப்புகளும், 32 சத்துணவுக் கூடங்களும் 9 சமுதாயக்கூடங்களும், மற்றும் பள்ளிக்கட்டடங்கள், அரிசிக் கிடங்குகள் போன்ற 19 இதரப் பணிகளும் துவக்கி வைக்கப்பட்டன.

ரூ. 32 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தருமபுரி மின் திட்ட அலுவலகம், தருமபுரி தலைமை மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள ரூ. 9 இலட்சம் மதிப்புள்ள விபத்து மற்றும் அவசரச்சிகிச்சைப் பிரிவுக் கட்டடம், பொன்னகரத்தில் பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில் ரூ 15.40 இலட்சம் செலவிலான கட்டடங்கள், பொம்மிடியில் ரூ. 7.50 இலட்சம் மதிப்பில் கட்டியுள்ள கூட்டுறவு வங்கி கிளைக் கட்டடம் மற்றும் குடிநீர் வாரியத்தால் நிறைவேற்றப்பட்டுள்ள ரூ. 27.13 இலட்சம் செலவில் கட்டப்பட்ட 11 திட்டங்களும் துவக்கி வைக்கப்பட்டன.

இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றுகையில்,

''வள்ளல் அதியமான் ஆண்ட இந்த ஊரில் உங்களை எல்லாம் காண்பதில் என் உடல் புல்லரிக்கின்றது.

"உங்கள் பரந்த உள்ளத்தில் நான் இடம்பெற்று இருப்பது நான் பெற்றபேறு. இந்த மாவட்டம் நன்கு வளர வேண்டும். அந்த வளர்ச்சியின் பயன்களை நீங்கள் பெற வேண்டும். இதுதான் என்னுடைய குறிக்கோள்.

"இந்த மாவட்டத்தின் வளர்ச்சிக்காகப் பல நல்ல திட்டங்களைப் போட்டு வருகின்றேன்.

"அந்த வகையில் பொதுப்பணித்துறையின் சார்பில் சுமார் ரூ. 6 கோடி செலவில் தொப்பையாறு நீர்த்தேக்கம் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது.

''சுமார் ரூ. 3 கோடியே 13 இலட்சம் செலவில் நாகாவதி

## சிறுமியின் திறமைக்குப் பரிசு

ஒசூரைச் சேர்ந்த திரு நாகபூஷணத்தின் மகள் 12 வயதான சிறுமி சரிதா. அமெரிக்கா, இரஷ்யாவில் நடந்த சதுரங்கப் போட்டியில் முதல் பரிசு பெற்றாள் இச்சிறுமி.

காவேரிப்பட்டணத்தில் நடந்த திருமணவிழா ஒன்றில் இச்சிறுமி மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து ஆசி பெற்றாள்.

சிறுமி சரிதாவின் ஆற்றலைப் பாராட்டி மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் ரூ. 5 ஆயிரமும் 3 சென்ட் நிலமும் வழங்க ஆணை பிறப்பித்தார்.



நீர்த்தேக்கம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த 2 நீர்த்தேக்கத்தின் மூலம் 6 ஆயிரத்து 600 ஏக்கர் நிலங்கள் நல்ல நீர்ப்பாசன வசதி பெறும்.

"ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் ஆதிதிராவிடர்கள் குடியிருப்புகள் மற்றும்பல வளர்ச்சிப் பணிகள் சுமார் ரூ. ஒரு கோடி செலவிடப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

"ரூ. ஒரு கோடியே 40 இலட்சம் செலவில் பல வளர்ச்சிப்பணிகள் செய்து முடிக்கப்பட்டு இருக்கின்றன.

வீட்டுவசதி வாரியம் மூலமும் மற்றும் பலதுறைகளின் சார்பிலும் சுமார் ரூ. 4 கோடியே 75 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட இருக்கும் பல திட்டங்கள் இன்று தொடங்கி வைக்கப்பட்டு இருக்கின்றன. இந்த வளர்ச்சிப் பணிகளின் பயனை நீங்கள்அடையும் பொருட்டு உங்களுக்குக் காணிக்கை ஆக்குகிறேன்'' என்று தெரிவித்தார்.

அண்ணா போக்குவரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு 'அன்னை சத்யா' பெயரில் புதிய போக்குவரத்துக் கழகம் அமைக்கப்படும் என்று இவ்விழாவின்போது மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் அறிவித்தார்.

கிருஷ்ணகிரியில் 12-2-'87 அன்று ரூ. 6 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு திட்டங்களைத் துவக்கி வைத்து அதனை நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்தார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம், பர்கூர், வேப்பனப்பள்ளி, பாலக்கோடு, மத்தூர், காரிமங்கலம் ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பல்வேறு அரசுத் துறைகள் மூலம் முடிவுற்றுள்ள ரூ. 419.44 இலட்சம் மதிப்புள்ள வளர்ச்சித் திட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கி வைத்தார்.

வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள ரூ. 159 இலட்சம் மதிப்பிலான 192 குடியிருப்பு வீடுகளையும், ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் ரூ. 114.66 இலட்சம் மதிப்பிலான 1,030 ஆதிதிராவிடர் குடியிருப்புகளையும், 49 சத்துணவுத் திட்டக்கூடங்களையும் அரிசி கிடங்கு போன்ற பிற திட்டங்களையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ. 88.53 இலட்சம் மதிப்புள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கி வைத்தார்.

அண்ணா போக்குவரத்துக்கழகம் சார்பில் ஊத்தங்கரை மற்றும் பாலக்கோடு பணிமனைகளையும் அப்பகுதியில் புதிய நகர்ப்புறப் பேருந்து வழித் தடங்களையும் துவக்கி வைத்தார்.

மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரூ. 129.10 இலட்சம் மதிப்புள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புற பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்களுக்கும், பொதுப்பணித் துறையின் மூலம் ரூ. 28.60 இலட்சம் மதிப்பில் துடுக்கன அள்ளி ஏரி கட்டுமானப் பணிக்கும் பொதுப்பணித்துறை (கட்டடப்பிரிவு) மூலம் ரூ. 26 இலட்சம் மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி மருத்துவமனைக்கானகூடுதல் கட்டடப்பணிக்கும் பாலக்கோடு பேரூராட்சிப் பகுதியில் வருவாய் தரும் கடைகள் ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட இருக்கும் பணிக்கும் ரூ. 5.50 இலட்சம் மதிப்பீட்டில் ஊத்தங்கரை பேரூராட்சிப் பகுதியில்வருவாய் தரும் கடைகள் கட்டும் பணிக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

பிற்பட்ட மாவட்டமாக இருந்த தருமபுரி மாவட்டத்தைச் செழிப்பாக்கஇத்துணைத்திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், துவக்கியும் வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் கிருஷ்ணகிரி விழாவில் உரையாற்றுகையில்,

"வேளாண்மை மற்றும்தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய இந்த மாவட்டத்தை முன்னேற்றமடையச் செய்யப் பல நல்ல திட்டங்களை நான் செயல்படுத்தி வருகிறேன். நான் உங்களில் ஒருவன், உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவன் நான். என் உயிர்மூச்சு உள்ளவரை உங்களுக்காகவ உழைப்பேன். எந்தச் சக்தியும் என்னை உங்களிடமிருந்து பிரிக்க முடியாது.

"அப்படிப்பட்ட முயற்சிகளில் ஈடுபட்ட சக்திகளுக்குச் சரியான பாடம் புகட்டி வருகிறீர்கள். பல கோடி செலவில் தொடங்கப்படும் இத்திட்டங்களை எல்லாம் இந்தப் பகுதி மக்களுக்கு நான் பெருமையுடன் காணிக்கை ஆக்குகிறேன்'' என்று கூறினார்.

தருமபுரி மாவட்டத்தில் மனந்திருந்திய நக்சல்பாரிகள் 74 பேருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சான்றிதழும் தொழில் தொடங்கக் கடனுதவியும்வழங்கினார். அவர்கள் சொந்தமாகத் தொழில் தொடங்க தகுதி அடிப்படையில் ரூ. 6 ஆயிரம் முதல் ரூ. 25 ஆயிரம் வரை நிதி உதவி வழங்கப்பட்டது.

இவ்விழாக்களில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. எஸ்.இராமச்சந்திரன், மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மை அமைச்சர் திரு அ. இராசாராம், மாண்புமிகு போக்குவரத்துத் துறைஅமைச்சர் திரு எஸ். முத்துசாமி, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறி அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு, மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு ஆனூர் கோ. ஜெகதீசன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திரு. ஏ. அருணாசலம், மாண்புமிகுபொதுப்பணித் துறை அமைச்சர் திரு கே.கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், மாண்புமிகு நாடாளுமன்றத் துணைத் தலைவர் திரு. மு. தம்பிதுரை, வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு திருப்பூர் மணிமாறன், குடிநீர் வடிகால் வாரியத்தலைவர் திரு எஸ். டி. உக்கம்சந்த், சென்னைப் பெருநகரக் குடிநீர் மற்றும் வடிகால் நீரகற்று வாரியத்தலைவர் திரு. ஜேப்பியார் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு எச். ஜி. ஆறுமுகம் திரு. இராஜமாணிக்கம், திரு. டி. என். தீர்த்தகிரி கவுண்டர், திரு செம்மலை, திரு வெங்கடாசலம், திரு கிருஷ்ணராஜ், திரு தீர்த்தராமன், திரு. கே. ஆர். சின்னராசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

மிகப் பின்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்தின் செழுமைக்கு இவ்விழாக்களின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள வளர்ச்சிப்பணிகளும், புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள பணிகளும் கட்டியங்கூறின.



# முன்னாள் முதல்வர் பக்தவத்சலனார் மறைவு

முதுபெரும் தேசபக்தரும், முன்னாள் முதல்வருமான பெரியவர் எம்.பக்தவத்சலம் அவர்கள், 13.2.87 வெள்ளிக் கிழமை அதிகாலை 2.10 மணியளவில், தமது 91ஆவது வயதில் இயற்கை எய்தினார்.

சென்னை ராஜதானி காலம் முதலே அமைச்சராகப் பணியாற்றியவர் பெரியவர் எம்.பக்தவத்சலம் அவர்கள். காவல்துறை, பொதுப் பணித்துறை, இந்துசமய அறநிலையத்துறை, வேளாண்மைத்துறை, தொழில் துறை, தொழிலாளர் நலத்துறை போன்ற பல்வேறு துறைகளுக்கு அமைச்சராக இருந்திருக்கிறார்.

மேதகு ஆளுநர் திரு எஸ்.எல் குர்ரானா, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்,

மேதகு கேரள மாநில ஆளுநர் திரு. பா. இராமச்சந்திரன், மாண்புமிகு புதுவை முதல்வர் எம்.ஓ.எச். பருக்மரைக்காயர், மாண்புமிகு தமிழ்வளர்ச்சி உயர் நிலைக் குழுத் தலைவர் டாக்டர் ம.பொ.சி., ஆகியோரும் இறுதி மரியாதை செலுத்தினர்.

அன்று மாலை 7.30 மணியளவில் அடையாறில் உள்ள காமராசர் நினைவகத்தின் அருகே பெரியவர் பக்தவத்சலம் அவர்களின் உடலுக்கு இறுதிச் சடங்கு நடைபெற்றது.

தமிழகத்தில் முதன்முதல் கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தை உருவாக்கி, அதன் முதல் தலைவராக இருந்த பெருமைக்குரிய முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில், தமிழக அரசு 13.2.87 அன்று விடுமுறை அறிவித்தது. தமிழகஅரசு சார்பில் ஒருவார காலம் துக்கம் அனுசரிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

''அன்னாரின் உடல் எரியூட்டப்பட்ட இடத்தில் விரைவில் நினைவு மண்டபம் கட்டப்படும்'' என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்கள் 'சுதந்திரப் போராட்ட நாட்களில் நாட்டுக்கும் காங்கிரசுக்கும் இருந்த ஒரு இணைப்பை இழந்து விட்டோம். நவீன தமிழகத்தை உருவாக்கிய தலைவர்களில் ஒருவர் பக்தவத்சலம்' என்றெல்லாம் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

''உன்னத தேசபக்தரான அவர் மறைவு ஈடுசெய்ய முடியாதது'' என்று மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல் குரானா தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி. ஆர். அவர்கள் விடுத்த இரங்கல் செய்தி வருமாறு:



''பெரியவர் பக்தவத்சலம் அவர்களுடைய மறைவின் மூலம் தமிழகப் பொதுவாழ்வு வரலாற்றில் ஒரு நீண்ட அத்தியாயம் முடிவுற்றுவிட்டது. மிக இளமைக்காலம் தொட்டே தேசத்தொண்டில் ஈடுபட்டு 70 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்வின் இறுதி மூச்சுவரை அப்பழுக்கற்ற தேச பக்தராக அவர் விளங்கினார்.

'தாம் வகித்த அத்தனைப் பொறுப்புகளுக்கும் சிறப்புச் சேர்த்த பெருமை ' அவருக்கு உண்டு. நெருக்கடியான நேரங்களிலும் நிலை குலையாத மன உறுதி படைத்தவர். தியாகம், தொண்டு, நேர்மை அச்சமின்மை ஓய்வறியாத உழைப்பு இவற்றுக்கெல்லாம் ஒரு அற்புதமான எடுத்துக்காட்டாக விளங்கியவர்.

''வாழ்நாள் இறுதிவரை ஆட்சியியல் அரசியல் சமூகவியல் பற்றியெல்லாம் அரிய ஆலோசனைகளை அளித்து வந்ததோடு மட்டுமின்றித் தன் உடல் நலக்குறைவையும் பொருட்படுத்தாமல் எல்லா முக்கிய நிகழ்ச்சிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட வல்லவர்.

''மாறுபட்ட கருத்துகள் இருந்தபோதிலும் என்மீது தனிப்பட்ட முறையில் அவர் பல ஆண்டுகளாகஅன்பைப்பொழிந்து வந்தவர் என்பதால் அவரது மறைவு எனக்கு ஆறாத துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. தேசிய விடுதலைப் போர் முன்னணித் தலைவர்கள் வரிசையில் நம்முடன் வாழ்ந்து வந்தவர். இமயம் போன்ற பெரியவர் பக்தவத்சலம் அவர்கள்.

''அவருடைய மறைவால் நமது பொது வாழ்வில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்ப இயலாது. பெரியவர் பக்தவத்சலம் அவர்களைப் பிரிந்து வாடும் அவரது உற்றார் உறவினர்க்கும், மற்றவர்களுக்கும் தமிழக அரசின் சார்பிலும் என் சொந்த முறையிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



பத்தாண்டுகளில் பலரும்
பாராட்டும் வண்ணம்
புரட்சித் தலைவர்

# எம்.ஜி.ஆர்

ஆட்சியில்

## தமிழகத்தில் நவீனமயமான தொழிற் புரட்சி!

- ரூ. 125 கோடி செலவில் கண்ணாடி (ஃப்ளோட் கிளாஸ்) தயாரிக்கும் தொழிற்சாலை திட்டம்.
- ரூ. 18 கோடி மூலதனத்தில் டெலிபோன் கேபிள் தயாரிக்கும் திட்டம்.
- ரூ. 250 கோடி செலவில் 210 மெகாவாட் திறனுடைய மின் நிலையம்
- ரூ. 5½ கோடி செலவில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து ப்ரக்டோஸ் திரவம் உற்பத்தி செய்யும் திட்டம்
- ரூ. 6 கோடி செலவில் இண்டஸ்ட்ரியல் டைமண்ட் தொழிற்சாலை
- ரூ. 40 கோடி செலவில் உருவாகும் 'பென்சிலின்' மருந்து தயாரிக்கும் திட்டம்
- ரூ. 25 கோடி மூலதனத்தில் உருவாக்கப் படவிருக்கும் லாம்ப் மற்றும் லாம்ப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்திட்டம்
- ரூ. 10 கோடி செலவில் பேப்பர் லாமினேடட் எச்.டி.பி.இ. (HDPE) பைகள் தயாரிக்கும் திட்டம்.

ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்
தலைவர்

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
735, அண்ணா சாலை,
சென்னை - 600 002.

டிட்கோ

